
பக்கம் 06
மத்தியில் மாற்றம் நிச்சயம்


பக்கம் 07
வாக்குச் சாவடிகள் சூறை: தேர்தல் அதிகாரி கொலை


பக்கம் 22
பருத்தித்துறை லீக் போட்டி காலிறுதி ஆட்டங்கள் தயார்


பக்கம் 23
செரீனாவுக்கு முதல் வெற்றி



# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 கதிர்: 041 வள்ளுவர் ஆண்டு: 2044 | மார்கழி 22, திங்கள் 06.01.2014

பக்கம் : 24
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30




மப்பான வானிலை
29 C 24 C

# இலங்கைச் சரித்திரத்தை மீள பக்கச்சார்பின்றி எழுத வேண்டும்

## வடக்கு முதலமைச்சர் நேற்று வலியுறுத்து

யாழ்ப்பாணம்.ஜனவரி 6
இலங்கையின் சரித்திரத்தை -வரலாற்றை- பக்கச்சார்பின்றி மீண்டும்எழுதவேண்டும்என்று வலியுறுத்தியுள்ளார் வட மாகாண சபை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன். எதிர்காலத்தில் இனக் கிளர்ச்சிகள் ஏற்படாமல் இருப்பதற்கான யோசனையாக அவர் இதனை முன் வைத்துள்ளார்.

ஆதரவற்ற சிறுவர்களை வீட்டுச் சூழலில் வளர்க்க உதவும் எஸ்.ஓ.எஸ் எனும் பன்னாட்டுத் தொண்டு நிறுவனத்தின் சிறுவர் கிராமம் யாழ். புறநகர் பகுதியான நாயன்மார் கட்டில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் திஸ்ஸகரலியத்த கலந்து கொண்டிருந்தார். நிகழ்வில் பேசிய வட மாகாண சபை முதலமைச்சர் மேலும் தெரிவித்ததாவது,



மத்திய - மாகாண அரசுகளிடையே புரிந்துணர்வும் கூட்டுறவும் நிலவினால்தான் நாடு முன்னேறும். மக்கள் நலம் பெறுவார்கள். மத்திய அரசுக்கு சில அதிகாரங்களையும் கடமைகளையும் சட்டம் விதித்திருப்பது போலத்தான் மாகாண அரசுகளுக்கும் சில அதிகாரங்கள், வரம்புகள், கடப்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் அவை போதாது என்பதற்கு 13 ஆவது திருத்தத்தின் குறைபாடுகள் மட்டுமின்றி அதிகாரத்தில் இருப்பவர்களின் அசட்டையும் காரணம். மாகாண அதிகாரங்களை விரிவுபடுத்த மத்திய அரசு முன் வர வேண்டும். முக்கியமாக இந்த நாட்டின் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் முற்றிலும் விரிவுபடுத்தப்பட வேண்டும். ஆனால் அது முதற்படிதான். இரண்டாவதாக புதியதொரு அரசமைப்பு தயாரிக்கப்பட்டு ஒற்றையாட்சி முறை கைவிடப்பட வேண்டும்.

ஒரே தேசம் ஒரே மக்கள் என்

21 ஆம் பக்கம் பார்க்க

## இன்று கடும் மழை பெய்வதற்கான சாத்தியம்

யாழ்ப்பாணம்.ஜன.6
வடக்குக் கிழக்கில் இன்று திங்கட்கிழமை காலை 6 மணி முதல் அடுத்து வரும் 22 மணித்தியாலங்களுக்கு கடும் காற்றுடன் கூடிய மழை பெய்வதற்கான சாத்தியம் இருப்பதாக திருநெல்வேலி வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை கடல் பகுதிகளில் மிக அபாயகரமான கொந்தளிப்பு ஏற்படலாம் எனவும் அது எதிர்வு கூறியுள்ளது. இது குறித்து திருநெல்வேலியிலுள்ள வளிமண்டலவியல் திணைக்கள பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவிக்கையில், நேற்று ஞாயிற்றுக்கிழமை பகல் திருகோணமலையிலிருந்து 120 கிலோமீற்றர் தொலைவில் நிலைகொண்டிருந்த காற்றமுத்தத் தாழ்வு மையம் யாழ்ப்பாணத்தை நோக்கி நகர்ந்து வருகிறது. இதன் காரணமாக வடக்குக் கிழக்குப் பகுதிகளில் கடும்

21 ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்க போர்க்குற்ற நிபுணரிடம் முக்கிய ஆவணங்கள் கையளிப்பு

### தமிழ்க் கூட்டமைப்பு நாளை கொழும்பில் சந்திப்பு

கொழும்பு, ஜன. 6
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெற வுள்ள நிலையில், உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இன்று இலங்கை வரும் சர்வதேச போர்க்குற்ற விவகாரங்களைக் கையாளும் அமெரிக்காவின் விசேட தூதுவர் ஸ்ரீபன் ஜே.ராப், நாளை செவ்வாய்க்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

நாளைமறுதினம் புதன்கிழமை வட பகுதிக்குச் செல்லும் அவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட வட மாகாண சபையின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனையும் சந்திக்கவுள்ளார்.

இந்தத் தகவல்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று 'உதயன்' னிடம் உறுதிப்படுத்தினார்.

இதேவேளை, அரச படைகளினால் தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட போர்க் குற்

21 ஆம் பக்கம் பார்க்க

## புதுமாத்தளனில் எலும்புக்கூடு

புதுக்குடியிருப்பு, ஜன.6
முல்லைத்தீவு, புதுமாத்தளன் பகுதியிலுள்ள வீடொன்றின் உரிமையாளர் மலசலகூடத்தை அமைப்பதற்கானகுழியொன்றை வெட்டும்போது அதற்குள்ளிலிருந்துமனிதஎலும்புக்கூடொன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

வீட்டு உரிமையாளர் கொடுத்த தகவலையடுத்து முல்லைத்தீவுப் பொலிஸார் சம்பவ இடம் சென்று விசாரணை நடத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## கடல் கொந்தளிப்பு அச்சத்தால் கரையோர மக்கள் இடப்பெயர்வு

யாழ்ப்பாணம்.ஜன.6
திருகோணமலையிலிருந்து 120 கிலோ மீற்றர் தொலைவில் நிலைகொண்டுள்ள காற்றமுத்த தாழ்வு மையம் புயலாக மாறலாம் என்று எச்சரிக்கப்பட்ட நிலையில் வடக்குக் கிழக்கு கரையோர மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

காற்றமுத்தம் காரணமாக கடற்கொந்தளிப்பு அதிகரித்துக் காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்திருந்தது. இதன் காரணமாக காற்றின் வேகம் குறைந்த நிலையில் தரையைக் கடக்கும் போது மக்களுக்கு பாதிப்பு ஏற்படாது இருக்கும் வகையில் கடற்கரையிலிருந்து 100 மீற்றர் தூரத்துக்கு அப்பால் மக்களை பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக கரையோரத்தைச் சேர்ந்த பல குடும்பங்கள் இடம்பெயர்ந்து வேறிடங்களில் தஞ்சம் அடைந்ததாக முல்லைத்தீவு, யாழ்ப்பாண மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்தது.

சீரற்ற காலநிலை காரணமாக இடர் ஏதும் ஏற்படின் அதற்குத்

21 ஆம் பக்கம் பார்க்க

## ஜெனிவா அழுத்தங்களுக்கு ஜனாதிபதியே முழுப்பொறுப்பு

### சாடுகிறார் குணதாஸ

கொழும்பு, ஜன. 6
"ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைக்கூட்டத் தொடரில் எழும் அழுத் தங்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே முழுப்பொறுப்பு" என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாஸ அமர சேகர தெரிவித்தார்.

அத்துடன், அரசு மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யாது ஆடம் பரச் செலவுகளை செய்தமையால் வந்த வினையே இது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச போர்க்குற்ற விசாரணை களைக் கையாளும் அமெரிக்காவின் விசேட தூதுவர் இன்று இலங்கைக்கு வருகை தரவுள்ளதோடு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். ஐ.நா. மனித உரி மைக்கூட்டத் தொடரின் போது இலங்கைக்கு எதிராகப் பிரேரணை நிறைவேற்றப்படவுள்ளது என எதிர்பார்க்கப்படும் இந் நிலையில், இவரின்

21 ஆம் பக்கம் பார்க்க

## முல்லைக் கடலில் தத்தளித்த ஆஸ்திரேலிய பிரஜைகள் மீட்பு

கிளிநொச்சி.ஜன.6
முல்லைத்தீவு சாலை கடற்பரப்பில் தத்தளித்துக் கொண்டிருந்த ஆஸ்திரேலிய பிரஜைகள் இருவர் கடற்படையினரால் மீட்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல், குறித்த இருவரும் பாய்மரப்படகு ஒன்றில் தத்தளித்துக் கொண்டிருந்தவேளை ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட இருவரும் உடல் நலத்துடன் இருக்கின்றனர் எனவும் விசாரணைகளுக்காக இவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் கொழும்பு, ஆஸ்திரேலிய் தூதரகத்துக்கு தெரியப்படுத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஜ-55)

## மேல், தென் மாகாணங்களுக்கு மார்ச் 29 ஆம் திகதி தேர்தல்

கொழும்பு, ஜன. 6
மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 29ஆம் திகதி நடைபெறும் என்று அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நடைபெற்ற நிகழ் வொன்றில் உரையாற்றும் போது அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் இந்த ஆண்டு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் மார்ச் மாதம் 29 ஆம் திகதி இந்த மாகாண சபைகளின் தேர்தல்கள் நடைபெறும். இதில் அரசு நிச்சயமாக வெற்றி பெறும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தல் மார்ச் 29 ஆம் திகதி நடைபெறும் என ஜனாதிபதி உங்களுக்குத் தெரிவித்துள்ளாரா என அமைச்சரிடம் 'உதயன்' வினவிய போது.

"அவ்வாறு இல்லை. தேர்தல்

21 ஆம் பக்கம் பார்க்க

## வாள்வெட்டு அட்டூழியக் கும்பல் 'ஆவா' குழுவை மடக்கியது பொலிஸ்

### 6 பேர் இதுவரையில் கைது ; மற்றைய குழுக்களுக்கு வலைவீச்சு

யாழ்ப்பாணம்,ஜன.6
யாழ்.குடாநாட்டில் பரவலாக வாள்வெட்டுச் சம்பவங்கள் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இரண்டு குழுக்களாக 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மூன்று வாள்களும் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் 'ஆவா குறூப்' என்ற பெயரில் இயங்கினர் என்று பொலிஸார் கூறினர். குழுவுக்குப் பெயர் வழங்கிய தலைவனான ஆவா என்றழைக்கப்படும் நபரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் குழுவைச் சேர்ந்த மூவர் கோப்பாய் பொலிஸ் பிரிவில் வைத்துக் கைது செய்யப்பட்டனர். அச்சுவேலி பொலிஸ் பிரிவில் மற்றைய 3 பேரும் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் விசாரணை முன்னெடுக்கப்படுகிறது.

குடாநாட்டில் உலாவும் வாள்வெட்டுக் குழுக்கள் குறித்து யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் நெறிப்படுத்தலில் நான்கு பொலிஸ் குழுக்கள் புலன்விசாரணை மேற்கொண்டுள்ளன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (உ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சு வலி எனப் படுத்த பொலிஸ் அதிகாரி திடீர் சாவு

*காங்கேசனில் சம்பவம்*

அளவெட்டி, ஜன.6

நெஞ்சு வலியால் பாதிக்கப்பட்ட காங்கேசன் துறைப் பொலிஸ் வைத்தியசாலை பொறுப்பதிகாரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை 1.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் அவிசாவளையைச் சேர்ந்த வர்ணபுரகே திசங்க தயாரத்ன (வயது -57) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு நெஞ்சு வலியால் அவஸ்தைப்பட்ட இவர் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டுவரும் வழியில் உயிரிழந்துள்ளார்.

சடலம் மல்லாகம் நீதிவானின் பணிப்புரைக்கு அமைய உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டது. (ஜ-36)

# பிரதமருக்கு எதிராக கறுப்புக்கொடி போர்

*பௌத்த அமைப்பு நேற்று களத்தில்*

கொழும்பு, ஒக்.6

போதைப்பொருள் குற்றச்சாட்டு சர்ச்சையால் பிரதமருக்கும் பௌத்த பிக்குகளுக்குமிடையே முறுகல் ஏற்பட்டுள்ள நிலையில், பிரதமருக்கு எதிராக பௌத்த அமைப்பொன்று நேற்று கறுப்புக்கொடி போராட்டத்தை நடத்தியுள்ளது.

எம்பிலிப்பிட்டிய நகரில் நடைபெற்ற இந்த கறுப்பு கொடி ஆர்ப்பாட்டத்தை எம்பிலிப்பிட்டிய பௌத்த ஒருங் கமைப்பு என்ற அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. இதில், ஜாதிக ஹெல உறுமயவை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பிக்கு படையணியொன்று பங்கேற்றிருந்தது.

மகா சங்கத்தினர் தொடர்பில் பிரதமர் தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் முன்னெடுக்கப்பட்ட இடத்துக்கு ஆஞைந்தரப்பு பிரதேச சபை உறுப்பினரொருவர் சென்றதால் அங்கு பெரும்பரபரப்புஏற்பட்டது. இதையடுத்து, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் அவருக்குமிடையில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டதால் பெரும் பதற்ற நிலை உருவாகியது. எனினும், பொலிஸார் உடனடியாக தலையிட்டு நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

கொழும்பு துறைமுகத்திற்கு கொள்கலனில் சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட போதைப் பொருள்களை விடுவிப்பதற்காக பிரதமரின் காரியாலயத்தில் இருந்து கடிதம் ஒன்று அனுப்பப்பட்டமை குறித்து பிரதமருக்கு எதிராக பல்வேறு பௌத்த அமைப்புகளும் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

## மதுவுக்கு செலவிடும் பணத்தை பிள்ளைகளின் கல்விக்கு வழங்குக

*வேலணைப் பிரதேச செயலர் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஜன.6

மது மற்றும் புகைத்தல் போன்ற உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் பழக்கத்துக்கு அடிமையாகாது அதற்காகச் செலவிடும் பணத்தை வசதியற்ற மக்களின் வாழ்வாதாரத்துக்காகவும் பிள்ளைகளின் கல்விக்காகவும் வழங்குவதன் மூலம் வறுமைக்குட்பட்டவர்களின் சிறந்த எதிர்காலத்துக்கு உதவமுடியுமென்று வேலணைப் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஷன் தெரிவித்தார்.

வேலணைப் பிரதேச சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தின் மாகாணங்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நயினாதீவு அமுதசுரபி அன்னதான மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதன்போது தலைமையுரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்;

கொடி தினத்தின் மூலம் உங்களிடம் சேகரிக்கப்பட்ட பணம் உங்களுக்கே உதவியாக வழங்கப்படுகின்றது.

மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் உதவிகளுக்காக ரூபா ஒரு லட்சத்து 98 ஆயிரம் வரை பிரதேச மட்டத்திலான வசதி குறைந்தவர்களுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது.

புங்குடுதீவு, நயினாதீவைச் சேர்ந்த மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற உதவிகள் இரண்டு பகுதிகளையும் சேர்ந்த 15 கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன.


உங்களது எதிர்காலத்துக்கு மட்டுமன்றி இந்தப் பிரதேசத்தின் வளர்ச்சிக்கும் கல்வியில் முன்நிலை அவசியமானது என்பதால் சமுர்த்தி சமுக அபிவிருத்திச் சங்கம் வறுமைநிலையில் உள்ள மாணவர்களின் கல்வியில் அக்கறை கொண்டுள்ளது. சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மட்டுமன்றி எமது பிரதேச செயலகப் பிரிவில் உள்ள அனைத்து உத்தியோகத்தர்களினதும் முயற்சியாலேயே கூடுதல் நிதியைப் பெறவும் நயினாதீவில் மிகவும் சிறந்த முறையில் ஒரு முக்கியத்துவம் மிக்க நிகழ்வாக இந்த விழா இடம்பெறுகின்றது- என்றார். (வ-7)

### 757 பஸ் சேவையை ஆரம்பிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.6

கடந்த போர்க் காலச் சூழலால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட பருத்தித்துறையிலிருந்து உடுப்பிட்டி ஊடாக தொண்டமானாறுக்கான 757 இலக்க பஸ் சேவையை மீண்டும் சேவையில் ஈடுபடுத்தித் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையால் கடந்த காலங்களில் பருத்தித்துறையிலிருந்து அல்வாய், நவிண்டில், உடுப்பிட்டி ஊடாக தொண்டமானாறுக்கான 757 ஆம் இலக்க பஸ் சேவை நடத்தப்பட்டு வந்தது. எனினும் போர்க் காலச் சூழலின் போது இடைநிறுத்தப்பட்ட பஸ் சேவை மீள ஆரம்பிக்கப்படவில்லை. பஸ் சேவை இடைநிறுத்தப் பட்டதால் குறுந்தூரப் பயணி கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. குறிப்பாக பாடசாலை மாணவர்கள் தாமதமாக பாடசாலைக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (வ-14)



மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 14 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று மாலை 4 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் உருவப்படத்திற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து பிரதம விருந்தினராக கலந்துகொண்ட மன்னார் மறை மாவட்ட ஆயர் வண.பிதா இராயப்பு ஜோசப் ஆண்டகை சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார். சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றிய செயலாளர் பிரபாகரக் குருக்கள் உட்பட பலர் அஞ்சலி செலுத்தினர். (ஜ-402)

## ஜெனிவாவில் தோல்வியை சமாளிக்க அரசு இந்த முறை புதிய அணுகுமுறை

கொழும்பு,ஜன.6

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபை மாநாட்டில் இலங்கை சார்பில் கலந்து கொள்ளவுள்ளமை முந்தைய அணுகுமுறைகளும் முன் முயற்சிகளும் எதிர்பார்த்த நற்பலன்களை பெற்றுத்தரவில்லை என்பதை ஏற்றுக் கொள்வதை வெளிக்காட்டுகின்றது என்று கொழும்பு ஆங்கில நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து அந்தப் பத்திரிகை மேலும் கூறியிருப்பதாவது:-

கடந்த இரண்டு தீர்மானங்களின் போதும் ஜெனிவாவில் மனித உரிமைகள் சபையில் இலங்கை மேற்கொண்ட அணுகுமுறைகளைக் கவனமாக அவதானித்தால் அவை முரண்பாடானவையாகவும் ஒத்துப்போகாதவையாகவே இருந்துள்ளன என்பது வெளிப்படுகின்றது. 2012 ஆம் ஆண்டு நூற்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகளை அனுப்பி நாட்டின் பணம் வீணடிக்கப்பட்டது.

ராஜதந்திரிகள், சட்டவல்லுநர்கள் பத்திரிகையாளர்கள் சமயத்தலைவர்கள், பிரமுகர்கள் மற்றும் பலரை பெரும் எடுப்பில் அங்கு அனுப்புவதன் மூலம் இலங்கை சார்பில் அங்குள்ளவர்களின் மனங்களை மாற்றிவிடலாம் என்ற தவறான எண்ணத்தில் அப்படி செய்யப்பட்டிருந்தது. கடந்த வருடம் இலங்கை சார்பில் சென்றிருந்த குழுவின் தலைவர் அமைச்சர் மஹிந்த சமரசிங்க - ஜனாதிபதியின் மனித உரிமைகள் தொடர்பான சிறப்பு தூதுவர் ஐ.நா.மனித உரிமைகள் உயர் ஆணையாளர் நவநீதம் பிள்ளையைப் புண்படுத்தும் வகையில் தனிப்பட்ட முறையிலான தாக்குதல்களை நடத்தியிருந்தார். அதன் பின் அதற்காக அரசு கவலைப்பட்டு பிள்ளை இலங்கைக்கு வருவதையும் அனுமதித்தது. அவர் கடந்த செப்டெம்பரில் பூர்வாங்க அறிக்கையொன்றை சமர்ப்பித்தார். இனி வரும் மார்ச்சில் மனித உரிமை சபைக்கு 10,000 சொற்கள் கொண்ட அறிக்கையொன்றை வழங்க இருக்கிறார்.

ஜனாதிபதியின் செயலாளர் வீரதுங்க மற்றும் அமைச்சர் பீரிஸ் ஆகியவர்களின் இம்முறை திட்டமிடப்பட்ட பிரயாணங்கள் முன்னர் மேற்கொண்ட அணுகுமுறைகளும் முன்னெடுப்புகளும் தோல்வி கண்டுள்ளன என்பதை ஏற்றுக்கொள்வதை வெளிப்படுத்துகின்றது.

அரசின் முன்னைய முயற்சிகள் தோல்வி கண்டமை வொஷிங்டனிலேயே பெரிதும் உணரப்பட்டுள்ளது. அரசு சார்பில் பிரசாரம் செய்யவும், வேறு நாடுகளின் பிரதிநிதிகளை சந்தித்துப் பேசுவதற்கும் அங்குள்ள இரண்டு நிறுவனங்களை இலங்கை தூதரகம் ஏற்பாடு செய்திருந்தது. அதே சமயம் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் இன்னொரு பொதுத் தொடர்புகள் நிறுவனத்தையும் இலங்கைக்காக பிரசாரம் செய்ய குத்தகைக்கு அமர்த்தியிருந்தார். இதன் மூலம் அங்குள்ள ஒரு பகுதி ஊடகத்தில் இரண்டொரு வரிகள் இலங்கையைப் பற்றி எழுதப்பட்டிருந்தன. பிரிட்டனில் ஒரு கன்சர்வேடிவ் கட்சி உறுப்பினர் குழு இலங்கைக்கு வந்துபோக இலவச ரிக்கட்டுக்களும் படிகளும் வழங்கப்பட்டிருந்தன. அதனாலும் கூட நாட்டுக்குப் பயன் ஏதும் கிடைக்கவில்லை. பிரிட்டிஷ் அரசின் இலங்கை மீதான நெருக்குதல் கூடவே செய்தது. (ப)

## மாகாண சபைகள் கலைப்புக்கு முன் அரச பங்காளி தலைவர்கள் கூட்டம்

*மு.கா., இ.தொ.கா. தனி வழி; ஏனைய பங்காளிகள் வெற்றிலையில்*

> “ தேர்தல் தொடர் பில் கட்சித் தலைவர்கள் கலந் துரையாடும் அரச தரப்பின் முக்கிய கூட்டமொன்று மாகாண சபை கலைப்புக்கு முன்னர் இடம்பெறும்

கொழும்பு, ஜன. 6

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தவிர ஏனைய பங்காளிக்கட்சிகள் அனைத்தும் வெற்றிலைச் சின்னத்திலேயே மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடவுள்ளன.

இதற்கமைய, தேர்தல் தொடர்பில் கட்சித் தலைவர்கள் கலந்துரையாடும் அரச தரப்பின் முக்கிய கூட்டமொன்று மாகாண சபை கலைப்புக்கு முன்னர் இடம்பெறும் என்று அரச தரப்பு வட்டாரங்களிலிருந்து அறிய முடிகின்றது.

தேர்வுக்குழு அமைத்தல், ஆசனப் பங்கீடு, தேர்தல் பரப்புரை வியூகம் உட்பட முக்கிய சில விடயங்கள் சம்பந்தமாக இதன்போது ஆராயப்படவுள்ளன.

குறிப்பாக கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, லங்கா சமசமாஜக் கட்சி ஆகிய மூன்று இடதுசாரிக் கட்சிகளும் கூட்டாக இணைந்து போட்டியிடுவது தொடர்பில் முன்னதாக கலந்துரையாடியிருந்தாலும் அந்த முடிவு முக்கிய சில காரணங்களால் தற்போது மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதன்படி அக்கட்சிகளின் உறுப்பினர்கள் வெற்றிலைச் சின்னத்திலேயே களமிறங்கவுள்ளனர்.

அதேவேளை, வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைத் தேர்தல்களின் போது தமது கட்சியின் சார்பில் ஒரு வேட்பாளராவது தெரிவாகாமை தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்த தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் அமைச்சர் விமல் வீரவன்ஸ, தனித்துப் போட்டியிட்டிருந்தால் வெற்றி பெற்றிருப்பார் என அறிவித்திருந்தார்.

எனவே, நடைபெறவுள்ள மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர் தல்களில் அக்கட்சி தனித்துக் களமிறங்கும் என எதிர்பார்க்கப்பட்டாலும் அரசுடன் களமிறங்குவதையே அது விரும்புகிறது என அக்கட்சியின் உறுப்பினரொருவர் தெரிவித்தார்.

அத்துடன், சிங்கள பௌத்த வாக்குகளை அடிப்படையாகக் கொண்ட ஜாதிக ஹெல உறுமய, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளும் அரசுடன் கூட்டாகவே போட்டியிடவுள்ளன. அரசின் மலையக பங்காளியான, மலையக மக்கள் முன்னணி, மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல்களுக்காக வேட்பாளர்களை நிறுத்தாவிட்டாலும் அரச தரப்பில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர்களை ஆதரிக்க முடிவெடுத்துள்ளது. மேலும், ஜனநாயக மக்கள் காங்கிரஸ் கூட்டணி இணைந்து களமிறங்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. எனினும், இன்னும் இறுதி முடிவை அக்கட்சி எடுக்கவில்லை. (சி)

## மும்பையில் இருந்து யூரோக்களை கடத்தியவர் கைது

கொழும்பு, ஜன.6

மும்பையில் இருந்து, சட்டவிரோதமாக ஒருதொகை யூரோக்களைத் தனது உடலில் மறைத்துக் கடத்தி வந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து அவர் கைதானதாக பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

அவர் வசமிருந்து 14,000 யூரோக்கள் கைப்பற்றப் பட்டுள்ளன. 25,39320 ரூபா பெறு மதியான குறித்த யூரோக்கள் பின்னர் சுங்கப் பிரிவினரால் பறிமுதல் செய்யப்பட்டன.

மேலும் சந்தேகநபருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூராட்சி சபைகளுக்குட்பட்ட மயானங்கள் விரைவில் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜன.6

யாழ்.குடாநாட்டில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்குட்பட்ட மயானங்கள் விரைவில் மீள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் அபிவிருத்திப் பிரிவின் மேலதிக செயலாளர் இதற்கான நடவடிக்கை எடுத்துள்ளார்.


உள்ளூராட்சி சபைகளுக்குட்பட்ட மயானங்களை மீள புனரமைப்புச் செய்ய நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ளுமாறு சபைகளின் தவிசாளர்கள் ஒருமித்து கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து உள்ளூராட்சி சபைகளின்கீழ் மயானங்கள் சுற்றுமதில், எரி கொட்டகை, மயான மண்டபம் என்பனவற்றுடன் இணைந்த வகையிலான வீதிகளும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

எனவே அவை குறித்த விவரங்களை மதிப்பீட்டுடன் அனுப்பி வைக்குமாறு மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் மேலதிக செயலாளர் கேட்டுள்ளார்.

(வ-50)

## அதோ தெரிகிறது அடுத்த பக்கத் தரை



இது மக்கள் நாளாந்தம் பாவிக்கும் கடற் 'பாதை' ஆகும். காரைநகர்-ஊர்காவற்றுறைக்கு இடையே ஒவ்வொரு நாளும் ஐந்து முதல் எட்டு தடவைகள் சேவையில் ஈடுபடுகிறது இந்தப் 'பாதை'.
இந்தப் 'பாதை'யின் நிலைதான் படுமோசம். உக்கிப் போயுள்ள 'பாதை'யில் பல இடங்களிலும் பெரிய பெரிய துவாரங்கள். சுமார் 450 மீற்றர் வரையான பயணம்தான். வீதி அபிவிருத்தி அதிகார சபையே இந்தச் சேவையைச் செய்கிறது பயணத்துக்கு கட்டணம் ஏதும் அறவிடப்படுவதில்லை. இலவச சேவை. (ஓ-21-250)

## மத்தியஸ்தர் சபைக்கு செல்வோர் சிரமம்

யாழ்ப்பாணம், ஜன.6

வலி.மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட மக்களது பிணக்குகளைத் தீர்க்கும் மத்தியஸ்தர் சபை தற்போது பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாசாலையின் மேல் மாடிக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

அதனால் பிணக்குகளுக்கு தீர்வு காண வரும் ஊனமுற்றவர்கள், வயோதிபர்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பாக வலி.மேற்கு பிரதேச சபைக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொருத்தமான இடத்தில் மத்தியஸ்தர் சபை இயங்கும் பட்சத்தில் மக்களின் சிரமங்கள் குறையும் என்பது குறித்து சபையின் தவிசாளரின் கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டுள்ளது.

விரைவில் மாற்றம் செய்யப்படும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர். (ஓ-14-21)

## ஔவையார் குருபூசை தினம்

ஔவையாரின் குருபூசை தினம் வவுனியாவில் சிறப்பாக இடம்பெறவுள்ளது.

தமிழுக்குப் பெரும் பங்காற்றிய 'தமிழ்க் கிழவி' என அன்பாக அழைக்கப்படும் ஔவையாரின் குருபூசை தினம் எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை வவுனியா வெளிக்குளம் வீதி மாமடுச் சந்தியில் அமைந்துள்ள ஔவையாரின் சிலை அமைந் துள்ள இடத்தில் இடம்பெறவுள்ளது.

வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு ஒன்றியத்தின் தலைவர் எஸ்.குமாரசாமி தலைமை தாங்குவார்.

வவுனியா நகர சபைத் தலைவர் ஐ.கனகையா, செயலாளர் க.சத்தியசீலன், வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் ஆகியோர் நிகழ்வில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

ஔவையாரின் சிலைக்கு மலரஞ்சலி செலுத்திய பின்னர் குருபூசை நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

ஔவையாரின் நினைவாக வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியத்தினால் 100 குடும்பங்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளதாக வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியத் தின் செயலாளர் கு.சதீஸ்குமார் தெரிவித்துள்ளார்.

(க-421)

## மாதகல் திருவடிநிலை பகுதியை புனிதத் தலமாக அமைக்குக

*இந்து மத குருமார் ஒன்றியம் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஜன.6

மாதகல் திருவடிநிலைக் கடற்கரையை அண்டிய பகுதியை புனிதத் தலமாக அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்து சமயத்தின் சமகாலப் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது குடாநாட்டின் விதிமுறைகளை மீறி அமைக்கப்படும் ஆலயங்களால் சமய சம்பிரதாய முறைமைகள் மாற்றப்படுவதுடன் மத ரீதியான நம்பிக்கையின்மையும் மக்கள் மத்தியில் எழுகின்றது.

எனவே இருக்கக் கூடிய புனித் தலங்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம்மிடம் உள்ளது.

புராணக் கதைகளுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் திருவடி நிலைப் பகுதியில் இந்து ஆலயம் ஒன்று புனரமைப்பு இன்றி இருப்பதுடன் குறித்த இடத்தில் இராமன் வந்து இறங்கியதாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் இந்து மதத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் புனிதத் தலங்களைக் கைவிடாமல் அதனைப் பாதுகாக்க மதப் பற்றாளர்கள் முன்வரவேண்டும்.

> இந்து ஆலயம் ஒன்று புனரமைப்பு இன்றி இருப்பதுடன் குறித்த இடத்தில் இராமன் வந்து இறங்கியதாகவும் கூறப் படுகிறது.

திருவடி நிலைப் பகுதி இந்து ஆலயங்களுக்குச் சொந்தமானதாகக் கூறப்படுகிறது.

எனவே குறித்த பகுதியை புனிதத் தலமாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (வ-14)

## விளையாட்டுப் போட்டிகளை குறித்த தினத்துக்குள் நடத்துக

*வடமாகாண கல்விப் பணிப்பாளர் பாடசாலைகளுக்கு அறிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜன.6

பாடசாலை மாணவர்களுக்கான 2014 ஆம் ஆண்டு விளையாட்டுப் போட்டிகளை குறிக்கப்பட்ட தினங்களில் நடத்தி முடிக்க வேண்டும் என்று வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

இதற்கமைவாக பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னதாகவும், கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னதாகவும், வலய மட்ட விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னதாகவும் மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகள் மே மாதம் 2 ஆம் திகதிக்கு முன்னதாகவும் நடத்தப்பட வேண்டும்.

அத்துடன் யாழ்.மாவட்ட மட்டப் போட்டிகள் வடமராட்சி வலயமும், வவுனியா மாவட்ட மட்டப் போட்டிகள் வவுனியா தெற்கு வலயமும், மன்னார் மாவட்ட மட்டப் போட்டிகள் மடு வலயமும், முல்லைத்தீவு மாவட்ட மட்டப் போட்டிகள் துணுக்காய் வலயமும், கிளிநொச்சி மாவட்ட மட்டப் போட்டிகள் கிளிநொச்சி வலயமும் நடத்தும் என்றும் அறிவித்துள்ளார். (வ-14-35)

## மாதகலில் பொலிஸ் நிலையம் அமைக்குமாறு கோரிக்கை

வலி.வடக்கு , ஜன.6

மாதகல் பகுதியில் இடம்பெறும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் பொலிஸ் சோதனை நிலையத்தை அமைக்குமாறு அந்தப் பகுதியைச் சேர்ந்த பொது அமைப்புக்கள் மற்றும் சிவில் பாதுகாப்புக் குழுவும் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாதகல் பகுதியில் கஞ்சா விற்பனை உட்பட பல்வேறு குற்றச் செயல்களும் நடைபெற்று வருவதுடன், சமூகச் சீரழிவுகளும் இடம்பெறுவதைக் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அந்தப் பகுதியில் உள்ள மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

(வ-86)

## முன்பள்ளி மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்




வலி.வடக்கு, ஜன.6

பளை வீமன்காமம் பகுதியைச் சேர்ந்த 124 முன்பள்ளி மற்றும் தரம் ஒன்று முதல் ஐந்து வரையான வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை பளை வீமன்காமம் கிராம அலுவலர் பிரிவு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் லயன் எஸ்.சுந்தரேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

மானிப்பாய் நகர லயன்ஸ் கழகம் கிராம அபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து மேற் கொண்ட உதவிகளை சுவிஸ் நாட்டில் இருந்து வந்த லயன் எஸ்.மகேந்திரன் வழங்கினார். (வ-86)

## பற்றைக்காடுகளில் வெட்டும் மாடுகள்! வீடு வீடாக இறைச்சி விற்பனை

தென்மராட்சி, ஜன.6

தென்மராட்சி பிரதேசத்தில் பற்றைக் காடாகக் காணப்படும் இடங்களில் சட்ட விரோதமாக மாடுகளை வெட்டி இறைச்சியைக் கொண்டு செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மிருசுவில், மீசாலை வடக்கு, சரசாலை, மந்துவில் மேற்கு, கைதடி, மட்டுவில் சந்திரபுரம் போன்ற இடங்களில் காணப்படும் பற்றை மறைவுகளில் சட்ட விரோதமாக மாடுகள் அறுக்கப்படுகின்றன என்று பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

மாடுகளை அறுத்து அந்த இடங்களிலேயே அவற்றின் கழிவுகளை விட்டுச் செல்வதால் நாய்கள் அவற்றை வீடுகளுக்கு எடுத்து வருகின்றன என்றும் காகங்களால் எடுத்து வரப்படும் மாட்டின் எச்சங்கள் கிணறுகளில் போடப்படுகின்றன என்றும், அவர்கள் கூறுகின்றனர். சட்டவிரோதமாக அறுக்கப்படும் மாடுகளின் இறைச்சி வீடு வீடாக விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்தனர். (ஓ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி திரட்டும் பணியில் இறங்கினார் நெடுமாறன்

*முள்ளிவாய்க்கால் நினைவுப் பூங்கா அமைப்பதற்காக*

சென்னை, ஜன.6

தஞ்சையில் முள்ளிவாய்க்கால் நினைவுப் பூங்கா ஒன்றை அமைப்பதற்காக உண்டியல் மூலம் நிதி திரட்டும் பயணத்தை சென்னையில் இருந்து ஆரம்பித்துள்ளார் உலகத் தமிழர் பேரமைப்பு தலைவர் பழ. நெடுமாறன்.

தஞ்சையில் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தின் முன்பு அமைக்கப்பட்டு இருந்த பூங்கா தமிழக அரசால் இடிக்கப்பட்டது. அதையடுத்து மீண்டும் அதே இடத்தில் நினைவு முற்றப் பூங்கா எழுப்பப்படும். அதற்காக தமிழகம் முழுவதும் சென்று நிதி திரட்டப்படும் என்று அறிவித்திருந்தார் பழ. நெடுமாறன்.



நேற்றுமுன்தினம் நிதி திரட்டும் பயணத்தை சென்னையில் இருந்து ஆரம்பித்தார் நெடுமாறன். அவர் அரக்கோணம், காட்பாடி, சேலம் ஆகிய இடங்களுக்குச் சென்று நிதி திரட்டும் பணியில் ஈடுபவார். பின்னர் இராமேஸ்வரத்திலிருந்து புறப்பட்டு பரமக்குடி, சிவகங்கை, காரைக்குடி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம் ஆகிய பகுதிகளின் வழியாக சென்னை திரும்புவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# தமிழக மீனவர் விடயத்தில் அமைதி காக்க வேண்டாம்

*மத்திய அரசை வலியுறுத்துகின்றது*
*கொங்குநாடு மக்கள் கட்சி*

சென்னை, ஜன.6

இந்திய மத்திய அரசு பொறுமை காப்பதை நிறுத்திப் பொங்கியெழ வேண்டும். தமிழக மீனவர்களை மீண்டுமொருமுறை தொட்டால் பொறுமை காக்கமாட்டோம் என்று இலங்கை அரசை எச்சரிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் கொங்கு நாடு மக்கள் கட்சித் தலைவர் ஈ.ஆர்.ஈஸ்வரன்.

இந்த விடயம் குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு வலியுறுத்தியுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுவதாவது;

"இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் காட்டிய மெத்தனத்தைப் போன்றே இந்தியத் தமிழர்கள் பிரச்சினையிலும் கண்டு கொள்ளாத போக்கை மத்திய அரசு கடைபிடிப்பது கடும் கண்டனத்துக்குரியது.

ஒவ்வொரு முறையும் தமிழக மீனவர்களை இலங்கை அரசு சிறை பிடிப்பதும் அதற்கு தமிழ் அமைப்புகளும், தமிழக அரசும் குரல் கொடுப்பதும் தொடர்கதையாகிப் போனது. அமெரிக்காவைக் கூட பகைத்துக் கொள்ளத் தயாராக இருக்கும் இந்திய அரசு இலங்கைக்கு அடங்கிப் போவது ஏன் என்ற கேள்வி அனைத்து தமிழர் மனதிலும் எழுகிறது.

> தமிழக மீனவர்களை இலங்கை அரசு சிறை பிடிப்பதும் அதற்கு தமிழ் அமைப்புகளும், தமிழக அரசும் குரல் கொடுப்பதும் தொடர்கதையாகிப் போனது.

தமிழக மீனவர்களைக் காக்க வேண்டுமென்று இந்திய அரசிடம் முறையிடாமல் வேறு யாரிடம் முறையிட முடியும். மத்திய அமைச்சர்களும் பிரதமரும் மீனவர்களை மீட்க முயற்சிகள் நடக்கிறது என்று ஒவ்வொரு முறையும் சொல்லிக் கொண்டிருப்பது மத்திய அரசின் மீது நமக்கிருக்கிற நம்பிக்கையை இழக்கச் செய்கிறது.

தமிழகத்தின் பிரதான கட்சிகளும், தமிழக முதல்வரும் அறிக்கை விடுவதோடும், பிரதமருக்கு கடிதம் எழுதுவதோடும் கடமை முடிந்ததாக எண்ணக்கூடாது. தமிழகத்தின் அனைத்துக் கட்சிகளும் கூட்டாக புதுடில்லியில் போராட்டத்தை நடத்துவோம். தமிழக முதலமைச்சர் அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டி முடிவெடுக்க வேண்டும். இனியும் இதைப் பொறுத்துக் கொள்ளக் கூடாது.

தமிழக மீனவர்கள் இந்தியர்கள் தான் என்ற எண்ணம் இந்திய அரசுக்கு இருக்கிறதா இல்லையா என்பதை மத்திய அரசு தெளிவுபடுத்த வேண்டும். இன்னொரு முறை தமிழக மீனவர்களைத் தொட்டால் பொறுமை காக்க மாட்டோம் என்று இலங்கை அரசை மத்திய அரசு உடனே எச்சரிக்க வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## கிளிநொச்சியில் கரும்புச் செய்கைக்கு பாதிப்பு

அக்கராயன், ஜன.6

மழையில்லாததால் கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த கரும்புச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்ணகைபுரம், அக்கராயன், ஸ்கந்தபுரம், ஆனைவிழுந்தான் குளம் ஆகிய கிராமங்களில் 37 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டிருந்த இந்த கரும்புச் செய்கையே மழையின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் முதற்கட்டமாக 100 ஏக்கரில் கரும்புச் செய்கையை மேற் கொண்டு ஸ்கந்தபுரம் கிராமத்தில் கரும்பு ஆலையையும் உருவாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் மழையின்மையால் கரும்பு, நெல் உட்பட அனைத்துப் பயிர்களும் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# சொந்த நலனுக்காகவே ஈழத் தமிழர் மீது அக்கறை

*தமிழக அரசியல்வாதிகளை சாடுகின்றார் நாச்சியப்பன்*

புதுடில்லி, ஜன.6

இலங்கைப் பிரச்சினையைத் தமிழக அரசியல்வாதிகள் தவறாகப் பயன்படுத்துகின்றனர் என்று குற்றஞ்சாட்டியுள்ளார் இந்திய மத்திய அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன்.



இதுகுறித்து அவர் கூறுகையில்,

"இலங்கைப் பிரச்சினையைத் தமிழக அரசியல்வாதிகள் தவறாகப் பயன்படுத்துகின்றனர். அவர்கள் தமது சொந்த அரசியல் லாபத்துக்காகவே அதனைப் பயன்படுத்துகின்றனர். இந்திய அரசு இலங்கையில் உள்ள தமிழகர்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இந்தநிலையில் இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் இந்திய மத்திய அரசு அக்கறை இல்லாது செயற்படுகின்றது என்று கூறுவது முறையாகாது. தமிழக அரசியல்வாதிகள் தமது சொந்த நலனுக்கான இலங்கைப் பிரச்சினையைப் பயன்படுத்துவதை நிறுத்தி, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் இணைந்து கொள்ள வேண்டும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# முன்னாள் பெண் போராளிகளின் துயர் கூறும் நூல் வெளியீடு

சென்னை, ஜன.6

விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் பெண் போராளிகள் சமூகத்தில் இணைக்கப்படும்போது, எதிர்நோக்கும் பிரச்சினைகளை மையமாக வைத்து நூல் ஒன்று நேற்றுமுன்தினம் சென்னையில் வெளியிடப்பட்டது.

இலங்கை எழுத்தாளர் மற்றும் சமூக நடவடிக்கையாளர் சர்மிளா செய்யத் இந்த நூலை எழுதியுள்ளார். உம் மத் என்ற பெயரைக் கொண்ட இந்த நூல், இலங்கையின் முஸ்லிம் பெண் ஒருவர் தாம் சந்தித்த சுமார் 250 முன்னாள் பெண் போராளிகளை மையமாக வைத்து எழுதப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் இயக்கம் இலங்கையில் இன்னும் தடை செய்யப்பட்டுள்ள நிலையில், பெண் போராளிகள் சமூகத்துடன் சேர்க்கப்பட்ட போதும், அவர்கள் கண் காணிக்கப்படுவதுடன் புறக்கணிக்கப்படுகின்றனர் என்றும் அந்த நூலின் எழுத்தாளர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் இந்த பெண்களில் 75 வீதமானோர் உடல்ரீதியாக போரின் போது பாதிப்புக்களுக்கு உள்ளானவர்கள் என்று எழுத்தாளர் நூலில் சுட்டிக்காட்டியுள்ளார். (ற)

# துணுக்காயில் இறப்பர் கன்று விநியோகம்

அக்கராயன்.ஜன.6

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் கடந்த வருடம் 8 ஆயிரம் இறப்பர் கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக துணுக்காய் பிரதேச செயலர் தெரிவித்தார்.

மேலும் தென்னை செய் கையை ஊக்குவிக்கும் பொருட்டு தென்னங்கன்று களை வழங்கவுள்ளதாகத் தெரிவித்த அவர் தென்னைச் செய்கையில் ஈடுபட விரும்பு பவர்கள் பிரதேச செயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறும் அறிவிததுள்ளார். (க-18)

# மீனவர் தாக்குதலுக்கு எதிர்ப்பு; பாம்பனில் பெரும் போராட்டம்

*பாரதிய ஜனதாக் கட்சி அறிவிப்பு*

திருச்சி, ஜன.6

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தொடர்ச்சியாகத் தாக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பாரதிய ஜனதாக் கட்சி எதிர்வரும் 31 ஆம் திகதி போராட்டம் நடத்தவுள்ளது.

பாம்பனில் நடைபெறவுள்ள அந்தப் போராட்டத்தில் சுஷ்மா சுவராஜ் கலந்துகொள்ளவுள்ளார்.

நேற்றுமுன்தினம் திருச்சியில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் ஆலோசனைக் கூட்டத்திலேயே இந்த முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து அங்கு மேலும் கூறப்பட்டுள்ளதாவது;

"இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ச்சியாகத் தாக்கப்பட்டு வருகின்றனர். கைது செய்யப்பட்டு இலங்கைச் சிறைகளில் மாதக்கணக்கில் அடைக்கப்படுகின்றனர். இந்த விடயம் குறித்து பல்வேறு அரசியல் கட்சிகள் இந்திய மத்திய அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்தன. ஆனால் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவதும், கைது செய்யப்படுவதும் தொடர்கின்றது.

இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் 31ஆம் திகதி பாம்பனில் பிரமாண்டமான ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்து வதற்கு பா.ஜ.க. ஏற்பாடு செய்துள்ளது. அந்த ஆர்ப்பாட்டத்தில் சுஷ்மா சுவராஜ் உட்பட பா.ஜ.கவின் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டு இலங்கைக்கான தமது எதிர்ப்பைத் தெரிவிப்பார்கள்" என்று கூறியுள்ளது.

> தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் 31ஆம் திகதி பாம்பனில் பிரமாண்டமான ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்கு பா.ஜ.க. ஏற் பாடு செய்துள்ளது.

இந்தக் கூட்டத்தில் பா.ஜ.க. மாநில தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன், தேசிய செயற்குழு உறுப்பினர்கள் இல.கணேசன், தமிழிசை சவுந்தர்ராஜன் உட்பட பல அரசியல் தலைவர்கள் கலந்துகொண்டனர். (ற)

## கர்நாடகாவில் வசித்துவரும் இலங்கையருக்கு சாதி சான்றிதழ்

கர்நாடகா மாநிலத்தில் உள்ள சுல்லியா மற்றும் புத்தூர் பெருந்தோட்ட பகுதிகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கான சாதி சான்றிதழ்களை வழங்க அந்த மாநில அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

கர்நாடகா மாநிலத்தின் முதலமைச்சர் சித்தரமைய்யா இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்திய - இலங்கை உடன் படிக்கையின் கீழ், 1964 ஆம் மற்றும் 1974 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் இருந்து சென்ற சுமார் 1000 குடும்பங்கள் இன்றும் இந்திய குடியுரிமை வழங்கப்படாத நிலையில் அங்கு வசித்து வருகின்றனர்.

அவர்கள் அங்குள்ள இறப்பர் தோட்டங்களில் பணியாற்றுகின்றனர். அவர்களுக்கான சாதி சான்றிதழ்கள் கடந்த 2002 ஆம் ஆண்டு வரையில் வழங்கப்பட்டு வந்த போதும், அகதிகளுக்கு சாதி சான்றிதழ் வழங்கக்கூடாது என்ற உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் இந்த நடைமுறை இடைநிறுத்தப்பட்டது.

எனினும் இந்தியாவில் அவர்களுக்கான அடிப்படை சலுகைகளை பெற்றுக் கொள்வதற்கு, சாதி சான்றிதழ்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகிறன.

இந்தநிலையில் இது தொடர் பில் ஆராய்ந்து 15 நாள்களுக்குள் தமக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு, மாநில முதலமைச்சர், அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதன் அடிப்படையில் அவர்களுக்கான சாதி சான்றிதழ்கள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (வ)

# புனரமைக்கப்பட்ட மைதானத்தில் விளையாட்டு நிகழ்வு

புனரமைக்கப்பட்ட வவுனியா கல்நாட்டியகுளம் இளங்கதிர் விளையாட்டுகழக மைதானத்தில் விளையாட்டு நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இந்த பல்வேறு குறைபாடுகளுடன் காணப்பட்ட இந்த விளையாட்டு மைதானம் பலரின் ஒத்துழைப்புடன் புனரமைக்கப்பட்டு தற்போது புதுப் பொலிவுடன் காட்சியளிக்கின்றது. மேலும் கடந்த புத்தாண்டு தினத்தன்று விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் விளையாட்டு நிகழ்வு ஒன்று இடம்பெற்றது. காலை ஆரம்பமான விளையாட்டு நிகழ்வுகள் மாலை வரை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க-421)


**A/L வரலாறு**

மாவட்ட தேசிய மட்டங்களில் உயர் பெறு பேறுகள் பெறுவதற்கு வழிகாட்டும் உங்கள் ஆசான்

M. பத்மன் M.A. (History)

- என்னிடம் கற்று மாவட்டத்தில் முதலாவதாக வந்த உமாகரன் துளசி
- "A" தர சித்திகளை அள்ளிக்கொண்டோர்
- 100% சித்திபெற்ற எனது அன்புக்குரிய அனைத்து மாணவர்களையும் வாழ்த்துகின்றேன்

D.M.I யாழ்.நகர் | கற்பிக்கும் இடங்கள் உயர்கலைக்கல்லூரி குளப்பிட்டி | புகழ் மானிப்பாய்

**வீடு வாடகைக்குத்தேவை**

6 பேர் கொண்ட குடும்பத்திற்கு வசதிகளுடன் கூடிய வீடு யாழ். நகர் Or K.K.S. றோட் Or பலாலி வீதியில் தேவை.

T. P : 075 2242134


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகளைக் காணாத உயிலங்குளம் வீட்டுத் திட்ட மக்கள்

அக்கராயன், ஜன.6
உயிலங்குளம் 50 வீட்டுத்திட்டத்தில் வசிக்கும் மக்கள் குடிதண்ணீர் மற்றும் மின்சார வசதிகள் இல்லாததால் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். போரின் பின்னரான மீளக்குடியமர்வின் ஆரம்பத்தில் இந்திய அரசின் நிதியுதவியுடன் இங்குள்ள வீடுகள் அமைக் கப்பட்டன. ஆனால் சிறந்த திட்டமிடல்கள் இல்லாத நிலையில் இந்த வீடுகள் அமைக்கப்பட்டதால் குடி தண்ணீர், மின்சார வசதி என்பன இதுவரை ஏற் படுத்திக் கொடுக்கப்படவில்லை. போக்குவரத்து இடர்களையும் இங்கு வசிக்கும் மக்கள் எதிர் கொள்கின்றனர். துணுக்காய் நகரிலிருந்து 8 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள உயிலங்குளம் கிராமத்தின் ஒதுக்குப்புறமானதொரு இடத்தில் 50 வீட்டுத் திட்டம் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் காணப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# மறவன்புலோவில் நேற்று இரத்தப் பரிசோதனை

தென்மராட்சி, ஜன.6
தென்மராட்சி தெற்குப் பிரதேச முதியோர் சங்கங்களின் ஏற்பாட்டில் தென்மராட்சி பிரதேச முதியோர் பேரவையில் இரத்தப் பரிசோதனை முகாம் நேற்று மறவன் புலோ ஆரம்ப சுகாதார நிலைய மண்ட பத்தில் இடம்பெற்றது.
பேரவைத் தலைவர் மருத்துவர் எஸ். எஸ்.அருளானந்தம் தலைமையில் நடைபெற்ற பரிசோதனை முகாமில் தனன்களப்பு, மறவன்புலோ, கோவி லாக்கண்டி, தச்சன்தோப்பு, நாவற்குழி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டதாக பேரவைச் செயலாளர் மா.லீலா வினோ தன் தெரிவித்தார். (வ-9)

# வாகனப் பாதுகாப்பு கட்டணம் அதிகரிப்பு

*சாவகச்சேரி மருத்துவமனையில்*

தென்மராட்சி, ஜன.6
சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை பாதுகாப்பு நிலையத் தில் வாகனப் பாதுகாப்பு கட் டணங்கள் அதிகரிக்கப்பட்டுள் ளன என்று வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் அறி வித்துள்ளனர்.
2014 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் புதிய கட்ட ணங்கள் அறவிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இதன் பிரகாரம் சைக்கிள் களுக்கு 5 ரூபாவும், மோட்டார் சைக்கிள்களுக்கு 10 ரூபா வும், ஓட்டோவுக்கு 15 ரூபாவும், கார், வான் மற்றும் வாகனங் களுக்கு 20 ரூபாவும் பாதுகாப் புக் கட்டணமாக அறவிடப் படும் என்று அறிவிக்கப்பட்டுள் ளது. (வ-9)

# அங்கங்களை இழந்தோருக்கு கிளிநொச்சியில் நடமாடும் சேவை

*எதிர்வரும் 9 தொடக்கம் 11 ஆம் திகதி வரை*

யாழ்ப்பாணம், ஜன.6
அங்கங்களைஇழந்தவர்களுக்கு உதவும் வகையில் எதிர்வரும் 9 ஆம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி வரை கிளிநொச்சி ஏ-9 வீதியில் உள்ள கருணை நிலையத்தில் நடமாடும் சேவை இடம்பெறவுள்ளதாக மன்னார் வைத்தியசாலையின் மெற்றோ தொடர்பு அதிகாரி சின்கி வெயான் பீற்றர் தெரிவித்தார்.
நடமாடும் சேவையில் முழங் காலுக்கு மேலும் கீழும் ஷெல் பட்டும் போலியோ நோய் உள்ளவர்களுக்கும் இலவச மருத்துவ சேவை மேற்கொள் ளப்படவுள்ளது. வெளிநாட்டு வைத்தியர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை சேவைகள் இடம் பெறும்.
கிளிநொச்சி அரச அதிபர் திட்ட மிடல் பணிப்பாளர் அழைப் பில் கண்டாவளையைச் சேர்ந்த 28 பேருக்கும் பச்சி லைப்பள்ளியைச் சேர்ந்த 13 பேருக்கும் முன்னுரிமை வழங் கப்படவுள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டது.

“ ”
நடமாடும் சேவையில் முழங்காலுக்கு மேலும் கீழும் ஷெல் பட்டும் போலியோ நோய் உள்ளவர்களுக்கும் இலவச மருத்துவ சேவை மேற்கொள்ளப்படவுள்ளது.


மன்னார் அரசினர் வைத்திய சாலையில் கடந்த நான்கு வருடங்களாக போலியோ சப்பாத்துக்கள், நடமாடும் கருவிகள், கை, கால்கள் கட் டைக்கால் பொருத்தும் நட வடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப் பட்டது. (வ-7)

# பொலிஸ் அனுமதியுடன் அகற்றப்பட்டது வேலி

போக்குவரத்துக்குத் தடையாக இருந்ததால்

வலி.தென்மேற்கு, ஜன.6
மக்களின் போக்குவரத்துக்குத் தடையாக இருந்த வேலி பொலி ஸாரின் உதவியுடன் பிரதேச சபையால் வெட்டி அகற்றப்பட் டது. அதே இடத்தில் மீண்டும் வேலி அமைக்கப்படுமானால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சம்பந்தப்பட்டவரை பொலிஸார் எச்சரித்துள்ள னர்.
வலி.தென்மேற்குப் பிரதேசத் தில் சாந்தை கிராமத்தில் பல வருடங்களாக மக்களால் பயன் படுத்தப்பட்டு வந்த 8 அடி அகல மான பாதையை ஐந்து குடும் பங்கள் இணைந்து 3 அடியாகக் குறைத்து வேலி அமைத்து விட்டிருந்தன.
இது குறித்து பாதிக்கப்பட்ட மக்கள் வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் கவனத் துக்குக் கொண்டு வந்தனர். இது குறித்து விசாரணையில் ஈடுபட்ட பதில் தவிசாளர் முன் னைய நிலையில் வேலியை அமைக்குமாறு சம்பந்தப்பட்ட வர்களுக்குத் தெரிவித்தார். தவிசாளரின் இந்த முடிவை 4 குடும்பங்கள் ஏற்றுக் கொண்ட போதிலும் ஒரு குடும்பம் மட் டும் ஏற்றுக் கொள்ளவில்லை. அதையடுத்து மானிப்பாய் பொலிஸாருடன் அவ்விடத்துக் குச் சென்ற பதில் தவிசாளர், பிரதேச சபையின் 59 ஆம் சட் டத்துக்கமைய பிரதேச சபை யின் தொழிலாளர்களின் உதவி யுடன் வேலியை வெட்டி அகற் றியுள்ளார். (வ-115)

“ ”
அதே இடத்தில் மீண்டும் வேலி அமைக் கப்படு மானால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சம்பந்தப் பட்டவரை பொலி ஸார் எச்சரித் துள்ளனர்.



நயினாதீவுக்கான குடிதண்ணீர் விநியோகச் செயற்பாடுகளை கடந்த வியாழக்கிழமை வேலணைப் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் நேரடியாகச் சென்று நயினை துறைமுகத்தில் அவதானித்தார். நயினாதீவில் நிலவும் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டைத் தவிர்க்கும் வகையில் வேலணை சாட்டியில் இருந்து குடிதண்ணீர் பௌசர் மூலம் குறிகாட்டுவானுக்கு எடுத்து வரப்பட்டு படகுகள் மூலம் நயினாதீவுக்குக் கொண்டு செல்லும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. (வ-7)

# காவலரண் அகற்றம்



வரணி, ஜன.6
வரணிப் பிரதேசத்தில் சுமார் 15 ஆண்டுகளுக்கு மேலாக பருத்தித்துறை- கொடிகாமம் வீதியில் இயங்கிவந்த இரா ணுவக் காவலரண் கடந்த வாரம் இராணுவத்தால் அப் புறப்படுத்தப்பட்டுள்ளது.
வரணிப் பொதுச்சந்தை மற் றும் தில்லையம்பலம் பிரதான வீதிச் சந்தியில் இருந்த காவல ரணே தற்போது அகற்றப் பட்டுள்ளது.
இதேவேளை வரணி வடக்கு ஜயன்கன்கண்டி மயானத் தின் அருகே இருந்த இராணு வக் காவலரணும் அண்மை யில் அகற்றப்பட்டுள்ளது. (வ-122)

# விபத்துக்களில் சிக்கிய 604 பேருக்கு சிகிச்சை

*சாவகச்சேரி மருத்துவமனையில்*

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் வீதி விபத்துக் களில் சிக்கி கடந்த வருடம் 604 பேர் சிகிச்சை பெற்றுள் ளனர் என்றும் இவர்களில் மூவர் உயிரிழந்துவிட்டனர் என்றும் வைத்தியசாலை புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.
கடந்த 2012 ஆம் ஆண்டு வீதி விபத்துக்களில் சிக்கி 327 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள் ளது.
விபத்துக்களில் சிக்கியோரில் பெரும்பாலானோர் போதை யில் வாகனங்களை செலுத்தி யும் சாரதிய அனுமதிப் பத்திரம் இன்றி செலுத்திய போதும் அதிவேகமாக வாகனங்களைச் செலுத்திய வேளையில் வீதியின் குறுக்கே சென்ற விலங்கு களுடனும் பாதசாரி களுடனும் மோதியதிலும் காயமடைந் துள் ளதாக குறிப்பி டப்பட்டுள்ளது.
வீதி விபத்துக்களில் சிக்கி காயமடைந்தவர்களில் சிலர் உயரத்திலிருந்து வீழ்ந்ததாக வும் கிணற்றடியில் சறுக்கி வீழ்ந்ததாகவும் பொய்யான காரணங்கள் தெரிவிப்பதால் விபத்துக்களில் சிக்கி காயமடை வோரின் எண்ணிக்கை குறை வாகக் காணப்படுகிறது.
இவற்றை விட தாக்குதலுக்கு இலக்கான நிலையில் 399 பேர் விடுதிகளில் அனுமதிக்கப் பட்டு சிகிச்சை பெற்றுள்ளதாக வும்அவர்களில்பெரியளவிலான காயங்களுக்கு இலக் கான 6 பேர்மேலதிகசிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ள தாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.
சிறுவர் துஷ்பிரயோகத்தால் ஒருவரும்பெண்கள்மீதான தாக் குதல்களால் 38 பேரும் விடுதி களில் சிகிச்சை பெற்றுள் ளனர்.
தாக்குதலில் காயமடைந்த பெண்களில் பலர் கணவரால் பல்வேறு காரணங்களால் தாக் கப்பட்டுள்ளதாக குறிப்பிடப் பட்டுள்ளது. மதுபோதை, சட்ட விரோத தொடர்புகள், சீதனம், சந்தேகம் போன்ற காரணங் களினால் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளதாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது. (வ-9)

“ ”
கடந்த 2012 ஆம் ஆண்டு வீதி விபத்துக் களில் சிக்கி 327 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்

# பொலிஸ் சோதனைச் சாவடி வரணிச் சந்தியில் வேண்டும்

*அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை*



தென்மராட்சி, ஜன.6
வரணிச் சந்தியில் பொலிஸ் சோதனைச் சாவடி அமைக்கு மாறு அந்தப் பகுதி பொது மக் களால் கோரிக்கை விடப்பட்டுள் ளது.
பத்துக்கு மேற்பட்ட கிராம அலு வலர் பிரிவுகளை உள்ளடக் கிய வரணிப் பிரதேசத்தில் சட்ட விரோதசெயற்பாடுகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. மணல் அகழ்வு, திருட்டு, வீதிகளில் நிற் போரின் அட்டகாசம், தாக்குதல் போன்றவை தொடராக இடம் பெற்று வருகின்றன.
பொலிஸாரின் ரோந்து வாக னம் செல்லும் வரை காத்தி ருந்து விட்டு சட்டவிரோத செயற் பாடுகள் இடம்பெறுவதாக மக் கள் சுட்டிக்காட்டுகின்றனர்.
கடந்த வெள்ளிக்கிழமை இடைக் குறிச்சி பிரிவில் உள்ள முன் பள்ளி மற்றும் பொதுநோக்கு மண்டபம் ஆகியவற்றின் கத வுகள் இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டுள்ளன. இரவு வேளைகளில் மதுபோதையில் மோட்டார் சைக்கிள்களிலும் நடந்தும் செல்வோரின் அட்ட காசங்கள் பெரிதும் அதிகரித்து வருகின்றன.
இவற்றைக் கருத்தில் கொண்டு கொடிகாமம்-பருத்தித்துறை வீதி, மந்துவில், வேம்பிராய், குடமியன் ஆகிய வீதிகள் சந்திக் கும் எட்டாம் கட்டைச் சந்தியில் நிரந்தர பொலிஸ் சோதனைச் சாவடியொன்றை அமைத்து பிரதேச மக்களுக்கு ஏற்படும் தொல்லைகளைத் தவிர்க்கு மாறும் பொதுமக்கள் வலியுறுத் தியுள்ளனர். (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்தியில் மாற்றம் நிச்சயம்

## *தமிழக முதலமைச்சர் கூறுகின்றார்*

சென்னை, ஜன.6
இந்திய மத்திய அரசில் மாற்றம் ஏற்படுவது நிச்சயம். அந்த மாற்றத்துக்குப் பின்னர் தமிழக மக்களுக்கும், தமிழகத்துக்கும் செய்ய வேண்டிய பணிகள், கடமைகள் நிறைவேற்றப்படும் என்று தெரிவித்துள்ளார் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;
"தமிழக மக்களுக்கும், தமிழகத்துக்கும் இன்னும் நிறைய செய்ய வேண்டிய பணிகள் கடமைகள் உள்ளன. அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்றால் இந்தியாவில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். மக்கள் உறுதுணையோடு அத்தகைய மாற்றம் ஏற்படும்.
அரசின் மீது அவதூறுகளைப் பரப்பி, பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு, மக்களை தங்கள் பக்கம் வர வழைத்து விடலாம் என்று சிலர் பகற் கனவு கண்டு வருகின்றனர். ஆனால் மக்கள் எனது அரசுக்கு உறுதுணையாக இருக்கிறார்கள்.
பொது நலம் என்பது புல்லாங்குழல் போன்றது. சுயநலம் என்பது கால் பந்து போன்றது. இவை இரண்டும் காற்றால் இயங்குகின்றன. புல்லாங்குழல் முத்தமிடப்படுகின்றது. கால் பந்து காலால் உதைக்கப்படுகின்றது. ஏன்? தான் வாங்கிய காற்றை சுயமாக வைத்துக் கொள்வதால் கால் பந்து உதைபடுகிறது.
தான் வாங்கிய காற்றை இசை வடிவில் மற்றவர்களுக்கு கொடுப்பதால் புல்லாங்குழல் முத்தமிடப்படுகிறது. சுயநலம் உள்ள மனிதர்கள் புறக்கணிக்கப்படுவார்கள். பொதுநலம் உள்ள மனிதர்கள் போற்றப்படுவார்கள். தமிழக மக்களின் நலன் தான் மேலானது என்று அ.தி.மு.க. அரசு போற்றி பாதுகாக்கின்றது" என்று தெரிவித்துள்ளார். (ற)



# காங்கிரஸை காப்பாற்ற ராகுலால் இயலாது

## *அன்னா ஹசாரே கூறுகின்றார்*



புதுடில்லி, ஜன.6
நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியைக் காப்பாற்றுவதற்கு ராகுல் காந்தியால் முடியாது என்று தெரிவித்துள்ளார் சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே.
இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்:
"ஜன்லோக்பால் சட்டத்திருத்தத்துக்கு காங்கிரஸ் கட்சி ஒப்புதல் அளித்துள்ளது. பிற நடவடிக்கைகள் பற்றியும் பேசுகிறார்கள். ஆனால் அவையெல்லாம் காங்கிரஸுக்கு உதவப் போவதில்லை. ஜன்லோக்பால் சட்டத்திருத்தத்தை ராகுல் காந்தி ஆதரித்தமைக்காக அவருக்கு நன்றி. ஆனால், அண்மையில் நடந்த மாநில சட்டசபைத் தேர்தல்களில் மக்களின் கோபத்துக்கு ஆளான பிறகுதான் காங்கிரஸ் இந்த நடவடிக்கையை எடுத்தது.
தோல்வியை சந்தித்த பிறகு தான் ஊழல் பிரச்சினையில் கவனம் செலுத்த தொடங்கியது. ஆனால் இப்போது காலம் தாழ்ந்து விட்டது. நாடாளுமன்றத் தேர்தல் தோல்வியில் இருந்து காங்கிரஸ் கட்சியை ராகுலால் காப்பாற்ற முடியாது. ராகுல் காந்தியும் காங்கிரஸும் இன்னும் வலுவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஊழல் பிரச்சினையில் மக்களின் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் காங்கிரஸ் அரசு கூடுதல் நடவடிக்கைகளை எடுத்தால் மட்டுமே மக்களவை தேர்தலில் அந்தக் கட்சிக்கு ஆதரவு கிடைக்கும்." என்று தெரிவித்துள்ளார். (ற)

# சொகுசு மாளிகையை உதறிய கெஜ்ரிவால்



புதுடில்லி, ஜன.6
மத்திய அரசால் தமக்கு வழங்கப்பட்ட சொகுசு மாளிகைகளை உபயோகிக்கப் போவதில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் புதுடில்லியின் முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால்.
அரசியலில் நேர்மை, பொது வாழ்வில் தூய்மை, அரசு செலவினங்களில் சிக்கனம், அரசின் செயற்பாட்டில் வெளிப்படைத் தன்மை போன்ற முற்போக்கு முழக்கங்களுடன் ஆம் ஆத்மி கட்சியை தொடங்கிய அரவிந்த் கெஜ்ரிவால், முதலமைச்சரானதும் 9000 சதுரடியில் 10 படுக்கை அறைகொண்ட இரண்டு சொகுசு மாளிகைகளில் குடியேறவுள்ளார் என்ற தகவல் மக்களிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.
ஆனால் அந்தத் தகவல்களை மறுத்துள்ள கெஜ்ரிவால்,
"சொகுசு மாளிகைகளில் நான் குடியேறப் போவதில்லை. தற்போது நண்பர் ஒருவரின் வீட்டில் குடியிருக்கின்றேன். எனது அரச இல்லமும், அலுவலகமும் அடுத்தடுத்து அமைந்திருந்தால் மக்கள் பணியாற்ற வசதியாக இருக்கும். வேறு ஒரு சிறிய வீடு கிடைக்கும் வரையில் தற்போது வசித்து வரும் வீட்டிலேயே தங்கியிருப்பேன் என்று கூறினார். மக்கள் சேவையாற்றவே முதலமைச்சர் பதவியை ஏற்றுள்ளேன். இந்தப் புரட்சிக்காக ஏராளமான மக்கள் தன்நலம் கருதாமல் கடுமையாக உழைத்திருக்கிறார்கள். அவர்களுடைய தியாகம் வீணாக போவதை நான் விரும்பவில்லை. சீசரின் மனைவியை போல் நாமும் சந்தேகத்துக்கு இடம் அளிக்காதவர்களாக இருக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# பா.ஜ.க. ஆட்சி உறுதி

## *சுப்பிரமணிய சுவாமி நம்பிக்கை*

புதுடில்லி, ஜன.6
நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.கூட்டணி பெருவெற்றி பெற்று ஆட்சி அமைப்பது உறுதி என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார் பா.ஜ.கவின் முக்கிய பிரமுகர் சுப்பிரமணிய சுவாமி.
இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்;
"இந்திய எல்லையில் சீனாவின் அத்துமீறல் தொடர்ந்து கொண்டிருக்கிறது. மோடி பிரதமரானால் அத்துமீறலுக்கு முடிவு கட்டப்படும். ம.தி.மு.க. வுடன் கூட்டணி பற்றி இன்னும் இறுதி முடிவாகவில்லை. காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி காஷ்மீரை பாகிஸ்தானுக்கு தாரை வார்த்துக் கொண்டிருக்கிறது. தற்போதுள்ள காங்கிரஸ் அரசு அமெரிக்காவுக்கு அடிமையாக இருக்கிறது. நரேந்திர மோடி தலைமையில் ஆட்சி அமைந்தால் நாம் அமெரிக்காவுக்கு அடிமையாக இருக்க மாட்டோம். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜனதா கூட்டணி பெரும்பான்மை வெற்றியுடன் ஆட்சி அமைப்பது உறுதி" என்று தெரிவித்துள்ளார். (ற)

# மேற்கு தொடர்ச்சி மலையில் தீ

சென்னை, ஜன.6
தேனி அருகே மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் ஏற்பட்ட காட்டுதீ வேகமாக பரவி வருகின்றது என்று கூறப்படுகின்றது.
சுக்குவாடன்பட்டி அருகே யுள்ள வனப்பகுதியில் 7 இடங்களில் தீ ஏற்பட்டுள்ளது. அதனால் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் உள்ள மரங்கள் தீயினால் கருகின. இந்த தீ விபத்தினால் வன விலங்குகளும் பாதிக்கப்பட்டுள்ளன.
பரவி வரும் தீயை, கட்டுப்படுத்த வனத்துறையினர் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ற)




கோவா தலைநகர் பனாஜியில் உள்ள கன்கோனா நகரில் கட்டுமானப் பணிகள் நடந்து கொண்டிருந்த அடுக்குமாடி கட்டடம் ஒன்று இடிந்து விழுந்ததில் 14 பேர் உயிரிழந்துள்ளனர். கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த நூற்றுக்கு மேற்பட்டோர் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளனர். இதுவரை 23 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர். தற்போது மீட்புப் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கட்டடத்தின் அத்திபாரம் சரியாகப் போடப்படாமையே விபத்துக்குக் காரணம் என்று ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ற)

# கூட்டணிக்கு தே.மு.தி.க. வந்தால் மகிழ்ச்சி

## *மு.க.ஸ்டாலின்*

சென்னை, ஜன.6
தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க. வந்தால் மகிழ்ச்சி என்று கூறியுள்ளார் தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின்.
கோவையில் நடைபெற்ற தி.மு.க. இளைஞரணி அமைப்பாளர்கள் கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,
"தற்போது தேர்தல் கூட்டணிகள் குறித்துப் பரபரப்பாக பேசப்பட்டு வருகின்றது. தி.மு.க. கூட்டணியில் தே.மு. தி.க. இணைந்து கொண்டால் மகிழ்ச்சியே. ஆனால் கூட்டணி குறித்து தே.மு.தி.கதான் முடிவெடுக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

# மதுரை மாவட்ட தி.மு.க. அமைப்புக்கள் கலைப்பு

## *கட்சித் தலைமையின் அதிரடியால் அழகிரி ஆதரவாளர்கள் கொந்தளிப்பு*


சென்னை, ஜன.6
மதுரை மாவட்ட தி.மு.க. அமைப்புகள் கூண்டோடு கலைக்கப்பட்டு அதிரடி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அந்த அதிரடியால் மதுரையில் தனி ஆட்சி நடத்திக் கொண்டிருந்த மு.க. அழகிரி மற்றும் அவரின் விசுவாசிகள் கொந்தளித்துப் போயுள்ளனர்.
மதுரை மாவட்டத்தில் தி.மு.க. நிர்வாகிகள் கழக கட்டுப்பாட்டை குலைக்கும் வகையில் செயற்பட்டதால், மதுரை மாவட்ட தி.மு.க. அமைப்புக்கள் கூண்டோடு கலைக்கப்பட்டுள்ளன என்று அந்தக் கட்சியின் தலைமை அறிவித்துள்ளது.
தி.மு.க. மதுரை மாநகர மாவட்டக் கழகம் மற்றும் பகுதி, வட்டக் கழகங்கள் கலைக்கப்பட்டுள்ளது. மதுரை மாவட்ட கழகத்துக்கு முறைப்படி அமைப்புத் தேர்தல்கள் நடைபெற்று புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படும் வரை தற்காலிக பொறுப்புக்குழுவை நியமித்துள்ளார் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் க.அன்பழகன்.
இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில்,
"கட்சித் தலைவர் கருணாநிதியின் அறிவிப்பை மீறி கட்சியின் கட்டுப்பாட்டை குலைக்கும் வகையில் சிலர் நடப்பதால் மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க., அமைப்பு கலைக்கப்படுகிறது. இதன்படி பகுதி கழகம், வட்ட கழக நிர்வாகிகள் அனைவரும் பதவி இழக்கின்றனர்.
முறைப்படி அமைப்பு தேர்தல் நடைபெறும்வரை கட்சியை வழிநடத்த தற்காலிக பொறுப்புக்குழு அமைக்கப்படுகிறது. இந்தக் குழுவினர் கட்சியை வழிநடத்தி செல்வர். விரைவில் தேர்தல்களை நடத்த ஏற்பாடுகள் செய்யப்படும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குச் சாவடிகள் எரிப்பு: தேர்தல் அதிகாரி கொலை

## பங்களாதேஷ் தேர்தலில் வெறியாட்டம்

டாக்கா, ஜன.6
பங்களாதேஷில் எதிர்க்கட்சிகளின் புறக்கணிப்பையும் மீறி நேற்று நடைபெற்ற பொதுத் தேர்தலில் பெரும் வன்முறைகள் வெடித்தன. 136 வாக்குச் சாவடிகள் தீயிட்டுக் கொளுத்தப் பட்டன. தேர்தல் அதிகாரி உட்பட 6 பேர் கொல்லப்பட்டனர்.
பங்களாதேஷில் 300 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்துக்கு ஏற்கனவே 153 நாடாளுமன்ற உறுப்பினர்கள் போட்டியின்றித் தெரிவாகியுள்ளனர். மீதமுள்ள 147 தொகுதிக்கான வாக்குப்பதிவு நேற்று நடைபெற்றது.
நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக அந்த நாட்டுப் பிரதமர் ஷேக் ஹசீனா பதவியில் இருந்து விலக வேண்டும். அவர் இல்லாத வேறொருவரின் தலைமையிலான இடைக்கால அரசு அமைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்த எதிர்க்கட்சித் தலைவர் கலிதாஜியா, பொதுத் தேர்தலை புறக்கணிக்குமாறு ஆதரவாளர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார். அதையடுத்தே தேர்தல் நாளான நேற்று வன்முறைகள் வெடித்துள்ளன.



தகுர்டான் தொகுதியில் வாக்குப் பதிவு அலுவலர் ஒருவரை வன்முறையாளர்கள் அடித்துக் கொலை செய்துள்ளனர். அவரைக் காப்பாற்ற முயன்ற பொலிஸார் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதில் 5 பொலிஸார் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர். அதே போன்று நில்பமரி பகுதியில் வாக்குச் சாவடி எரிக்கப்படுவதைத் தடுக்க முயன்ற இளைஞர் ஒருவரும் வன்முறையாளர்களால் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார். வன்முறைச் சம்பவங்களில் இதுவரை 6 பேர் உயிரிழந்துள்ளனர்.
தேர்தல் பாதுகாப்புக் கடமைக்காக 4 இலட்சத்துக்கும் அதிகமான இராணுவத்தினர் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். எனினும் அவர்களால் வன்முறைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை.
இந்தநிலையில், வாக்குப் பதிவுகள் மந்தமாகவே நடைபெற்றன. 50 சதவீத வாக்குப் பதிவுகள் கூட நடைபெறாது என்று அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

## மீண்டும் குமுறுகின்றது இந்தோனேஷிய எரிமலை

*20 ஆயிரம் மக்கள் இடம்பெயர்வு*


ஜகார்த்தா, ஜன.6
இந்தோனேஷியாவின் வடக்கு சுமத்திராத்தீவில் உள்ள சினாபங்ஸ் எரிமலை மீண்டும் குமுறத் தொடங்கியுள்ளது. நேற்றுமட்டும் அந்த எரிமலை 50 தடவைகளுக்கு மேலாக சாம்பல் மற்றும் எரிமலைக் குழம்பைக் கக்கியுள்ளது.
எரிமலையில் இருந்து கிளம்பும் புகை மற்றும் நெருப்புக் குழம்பு 13 ஆயிரம் அடி உயரத்துக்குச் சீறிப்பாய்கின்றன. அதையடுத்து அந்தப் பகுதியில் உள்ள மக்கள் பாதுகாப்பான பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர்.
அதற்கான பணிகளில் ஆயிரக் கணக்கான இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று அந்த நாட்டு அரசு தெரிவித்துள்ளது. (ற)

## 2ஆம் உலகப் போர்க் குண்டு காவு கொண்டது உயிரை

பெர்லின், ஜன.6
இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற போது ஜேர்மனியில் வீசப்பட்ட குண்டு ஒன்று தற்போது வெடித்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இரண்டாம் உலகப் போர் நடந்த போது மிக முக்கிய பங்கு வகித்த நாடு ஜேர்மனி. இந்த காலகட்டத்தில் எதிரி நாடுகள் ஜேர்மனியின் பல பகுதிகளில் குண்டுகளை வீசின. அவற்றில் ஏராளமான குண்டுகள் வெடிக்காமல் இன்றுவரை மண்ணுக்குள் புதைந்து கிடக்கின்றன.
இந்தநிலையில் ஜேர்மனியின் பான் நகருக்கு அருகே யூஸ்கரிசன் என்ற இடத்தில் கட்டுமானப் பணிக்காக பள்ளம் தோண்டப்பட்டது.
அப்போது மண்ணில் புதைந்திருந்த குண்டு திடீரென வெடித்ததில் ஒருவர் உயிரிழந்தார். 13 பேர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ற)

## இஸ்ரேல் - பலஸ்தீன அமைதி முயற்சிகளில் முன்னேற்றம்

நியூயோர்க், ஜன.6
இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையே விரைவில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெரி. இருநாடுகளுக்கிடையிலான அமைதி முயற்சிகளில் முக்கிய ஏற்பாட்டாளராகச் செயற்படும் ஜோன் கெரி, அந்த முயற்சிகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர். விரைவில் அமைதிப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார் கெரி. (ற)



கம்போடியாவில் கடந்தவார இறுதியில் ஆடைத் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கோரி நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் உயிரிழந்தனர். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான கம்போடிய தேசிய மீட்புக் கட்சி நேற்றுமுன்தினம் பேரணி ஒன்றை நடத்தியது. பேரணி நடத்துவதற்கு அனுமதி வழங்க மறுத்த அந்த நாட்டு அரசு பேரணியில் கலந்துகொண்டவர்கள் மீது தடியடி நடத்தி விரட்டியடித்தது. அத்துடன் மறுஅறிவித்தல் வரை நாட்டில் எந்தவொரு பேரணிகளும் நடத்த முடியாது என்றும் அறிவித்துள்ளது.

## பலுஜா நகரை கைப்பற்றியது அல்-குவைதா


பாக்தாத், ஜன.6
ஈராக்கின் முக்கிய நகரான பலுஜாவை அல்-குவைதா அமைப்பினர் கைப்பற்றியுள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
பலுஜா நகரில் உள்ள பழங்குடியின மக்களின் ஆதரவுடன் அல்-குவைதா அமைப்பு இந்தத் தாக்குதலை நடத்தினர் என்றும், நகரில் இருந்த இராணுவத்தினர் முழுவதும் வெளியேற்றப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. (ற)

## 66 ஆண்டுகளின் பின்னர் பாக். சிவாலயத்தில் பூசை

கராச்சி, ஜன.6
பாகிஸ்தானில் உள்ள வரலாற்று சிறப்பு மிக்க சிவன் கோயிலில் 66 ஆண்டுகளுக்குப் பின்னர் பூசைகள் ஆரம்பமாகியுள்ளன.
பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் சக்கரவால் என்னும் இடத்தில் புராதன கடாஸ்ராஜ் சிவன் கோவில் உள்ளது. அந்தக் கோயில் 900 ஆண்டுகளுக்கு முந்தையது. அங்குள்ள குளம் சிவனின் கண்ணீரால் உருவானது என்று தல வரலாறு கூறுகிறது.
1947ஆம் ஆண்டு இந்தியா - பாகிஸ்தான் பிரிவுக்குப் பின்னர் அந்தக் கோயிலில், பூசைகள் நிறுத்தப்பட்டு மூடப்பட்டது. கோவில் குளத்தைச் சுற்றிலும் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டதாலும், பராமரிப்பு இல்லாததாலும் குளமும் வறண்டு போனது.
இந்தநிலையில கடந்த ஏழு ஆண்டுகளாக 35 கோடி ரூபா செலவில் கோயிலைப் புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்று வந்தன. இந்தப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் தற்போது 66 ஆண்டுகளுக்குப் பின்னர் கோயிலில் பூசைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
இதுகுறித்து பாகிஸ்தான் தொல்லியல் துறை தலைவர், அஸ்மத் தாஹிரா கூறுகையில்,
"பழைமை மாறாமல் இந்தக் கோயில் புனரமைக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் அரசின் இந்த புனரமைப்புக்கு இந்துக்கள் நன்றி கூறினாலும், சிலர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். கடாஸ்ராஜ் கோயில் அமைந்துள்ள பகுதி இந்துக்களுக்கு மட்டும் உரியதல்ல. இங்கு ஒரு புத்த மடம், சீக்கிய மாளிகைகள் மற்றும் இதர சிறுபான்மையினரின் வழிபாட்டு மையங்களும் உள்ளன.- என்று தெரிவித்துள்ளார். (ற)

## நெடுஞ்சாலையில் தரையிறங்கிய குட்டி விமானம்

நியூயோர்க், ஜன.6
அமெரிக்காவின் நியூயோர்க் நகரின் முக்கியமான தீகான் அதிவேக நெடுஞ்சாலையில் ஒரு குட்டிவிமானம் தரையிறங்கியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. ஒற்றை இயந்திரத்தைக் கொண்ட அந்தக் குட்டி விமானத்தில் பயணித்த மூன்று பேர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். அதில் ஒருவருக்கு மட்டுமே லேசான காயம் ஏற்பட்டிருந்தது.



இவர்கள் அனைவரும் கனக்டிகட் டேன்பர்ரி விமான நிலையத்திலிருந்து சுதந்திர தேவி சிலையை சுற்றிப் பார்க்கச் சென்றுள்ளனர். பார்த்து விட்டுத் திரும்பும் வழியில் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே அந்த குட்டி விமானம் அவசரமாக நெடுஞ்சாலையில் தரையிறக்கப்பட்டுள்ளது. மிகவும் போக்குவரத்து நெரிசல் உள்ள அந்த நெடுஞ்சாலையில் எந்தவொரு வாகனத்திலும் மோதாமல் விமானம் தரையிறங்கியமை குறித்து அனைவரும் ஆச்சரியம் வெளியிட்டுள்ளனர். (ற)

## கோடீஸ்வரர் பட்டியலில் பில் கேட்ஸ் முதலிடம்

லண்டன், ஜன.6
உலகப் பணக்காரர்கள் பட்டியலில் மீண்டும் முதலிடத்தை எட்டிப் பிடித்துள்ளார் மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் உரிமையாளரான பில் கேட்ஸ்.
புளும்பெர்க் என்ற நிறுவனம் 2013ஆம் ஆண்டின் 300 பெரும் பணக்காரர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது. அந்தப் பட்டியலில் பில்யகேட்ஸ் கடந்தாண்டு 7,850 கோடி டொலர் சொத்து மதிப்புடன் முதலிடத்தில் உள்ளார். கடந்த ஆண்டு மைக்ரோசொப்ட் நிறுவன பங்கின் விலை, 40 சதவீதம் அதிகரித்ததன் மூலம் பில் கேட்ஸின் சொத்து மதிப்பு உயர்ந்துள்ளது.
அது மட்டுமின்றி, பில்கேட்ஸ் வைத்துள்ள, 35 பொது மற்றும் தனியார் துறை நிறுவனப் பங்குகளின் விலை உயர்வாலும், சொத்து மதிப்பு அதிகரித்துள்ளது. பில்கேட்ஸின் மொத்த சொத்தில் அவர் மைக்ரோசொப்ட் நிறுவனத்தில் கொண்டுள்ள பங்குகளின் மதிப்பு 25 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்



சாவகச்சேரி மீசாலையைச் சேர்ந்த காசிநாதன் ஈஸ்வரலிங்கம் நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.
யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ள இவர் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி செ.லெனின்குமார் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றுக் கொண் டார்.
சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் பொருளாதார அபிவிருத்தி அலுவலராகப் பணிபுரியும் இவர் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவனும் சிறந்த சமூக சேவை யாளருமாவார். (ந-11)

◆ ◆ ◆



யாழ்ப்பாணம் நாவலர் வீதியைச் சேர்ந்த சுவாமிநாதன் சர்வானந்தன் நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சினால் சமாதான நீதிவானாக நிய மிக்கப்பட்டுள்ளார்.
யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ள இவர். யாழ்.மாவட்ட நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து பதவி ஏற்றுள்ளார். சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவனும் சிறப்பு கலைப் பட்ட தாரியுமான இவர் சிறந்த சமூக சேவையாளருமாவர். (ந-11)

◆ ◆ ◆



வல்வெட்டித்துறை, கம்பர் மலையைப் பிறப்பிடமாகவும், திக்கத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் கிரிதரன் யாழ். மாவட்ட சமாதான நீதி வானாக பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீ நிதிநந்த சேகரன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.
அரச நில அளவையாளரான இவர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, சப்ரகமுவ பல்கலைக்கழகம் ஆகிய வற்றின் பழைய மாணவருமாவார். (ந-173)

◆ ◆ ◆



கட்டைக்காடு முள்ளியானைச் சேர்ந்தவரும் ஓய்வு நிலை முள்ளியான் உப அஞ்சல் அதிபருமாகிய அ.ஸ்ரனிஸ்லாஸ் யாழ்ப்பாண நீதி நிர்வாக வலயத்துக்கான சமாதான நீதிவானாக பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீ நிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் இலங்கை செஞ்சிலுவைச் சங்க வடமராட்சி கிழக்கு தலைவராகவும் யாழ்ப்பாண மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளன உதவிச் செயலாளராகவும் பணியாற்றுகின்றார். (ந-173)



யாழ்ப்பாணம் திருநெல்வேலியிலுள்ள சைவ வித்தியா அபிவிருத்திச் சங்கம் நடத்தி வரும் 'சைவச் சிறுவர் நிறைவாழ்வு இல்லத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட சிறுவர்களும் அவர்களது இயக்குநர் சபையைச் சேர்ந்த சில பணிப்பாளர்களும் கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டு மன்னாருக்கு வந்தபோது மன்னார்- பள்ளிமுனையிலுள்ள ஆயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பெருக்கு மரத்தை பார்வையிட்டனர். (வ-56)

## தங்கம்மா அப்பா குட்டியின் 89 ஆவது பிறந்தநாள் விழா

யாழ்ப்பாணம், ஜன.6
சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக் குட்டியின் 89 ஆவது பிறந்த நாள் அறக்கொடை விழா நாளை செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது.
ஆலயத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலை, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, சிவத்தமிழ்ச் செல்வி கல்வி நிதியம் ஆகியவற்றுக்கு அறக்கொடை வழங்கல் மற்றும் சிவத் தமிழ் விருது வழங்கல் என்பன இடம்பெறும்.
(ந-14)

## 10 கலைஞர்களுக்கு கலை ஞானச் சுடர் விருது

நல்லூர் பிரதேச செயலகத்தின் நல்லூர் கலாசாரப் பேரவையின் 2013 ஆம் ஆண்டுக்கான கலாசார விழாவில் பிரதேசத்தைச் சேர்ந்த கலை இலக்கியம் சார்ந்த பத்துக் கலைஞர்களுக்கு கலை ஞானச் சுடர் விருது வழங்கிக் கௌர விக்கப்படவுள்ளனர். செல்வி புஸ்பா செல்வநாயகம் (பண்பாட்டியல்), இ.பாலகிருஷ்ணன் (தவில்), வ.தி.செல்வராஜா (இசை நாடகம்), நா.இலட்சுமணராசா (ஊடகத்துறை), பண்டிதர் வ.பேரின்பநாயகம் (சமய இலக்கியம்), த.பரமலிங்கம் (புனைகதை), சு.சிவராசா (எழுத்தாளர்) ஆ.சிவலிங்கம் (சிற்பம்), க.தவராசா (ஓவியம்/சிற்பம்), திருமதி சக்திதேவி சிவகுமார் (கர்நாடக இசை) ஆகியோரை எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறும் கலாசார விழாவில் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.
(ஓ-7)

## கடந்த வருடம் மட்டும் 38 பேர் அகாலச் சாவு

*சாவகச்சேரி வைத்தியசாலையில்*

தென்மராட்சி, ஜன.6
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடந்த வருடம் அகாலச் சாவடைந்த 38 பேரின் சடலங்கள் உடற் கூற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டதாக வைத்தியசாலை புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.
உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொண்ட சடலங்களில் பெரும்பாலானவை தாங்களாகவே உயிரை மாய்த்துக் கொண்டவர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
இதேவேளை, கடந்த வருடம் விபத்துக்கள் மற்றும் தாக்குதல் சம்பவங்களால் காயமடைந்த 643 பேரின் மருத்துவ அறிக்கை பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-9)



# ஈரவிழிகளுடன் ஈராண்டு

அன்னையாய் : 07.09.1967
தெய்வமாய் : 13.01.2012

அமரர்

## இன்பராணி (சாந்தி) இரத்தினசபாபதி

ஆண்டுகள் இரண்டு ஆனபோதிலும்
பறந்துசென்ற உம் அன்பினைப் பிரிவதனால்
சோகத்தில் நாமிங்கு தவிக்கின்றோமே - நாள்தோறும்
சோகம் எனும் கடல்தனில் மூழ்குகின்றோம்
எத்தனை எத்தனை பொழுதுகள் இங்கு ஆனபோதும்
எம் தலைவி உங்களுக்கு நிகர் தான் எதுவோ? எம் வாழ்விலே
நீங்கள் இல்லாத எம் கோயில் கொண்ட வீடு வெறிச்சோடியது
நிம்மதி ஏதுமின்றித் தவியாய்த் தவிக்கின்றோம்
உற்றவொரு துணைபோன்று உம் ஆத்மா எம்முடன்
உடனிருந்து நல்லதொரு வழியதனைக் காட்டுமம்மா
நீங்கள் எமைக் காலமெல்லாம் கண்களிரண்டின் இமைபோல
காத்திடுவீர் எம் குடும்பத்தின் ஒளிவிளக்கே...

அந்திரான், கரணவாய் மேற்கு,
கரவெட்டி.

ஈரவிழிகளுடன்:
உங்கள் பாசமுள்ள குடும்பத்தினர்

(42011)(10.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணுக்காய் - அக்கராயன் ஊடான பஸ் சேவைக்கு ஆட்சேபம் இல்லை

*கூறுகிறார் தனியார் பஸ் சங்கத் தலைவர்*

அக்கராயன், ஜன.6

துணுக்காயிலிருந்து அக்கராயன் வழியாக கிளிநொச்சி வரை பஸ் சேவையை நடத்துவதில் தமக்கு ஆட்சேபம் இல்லையென கிளிநொச்சி மாவட்ட தனியார் பஸ் சங்கத் தலைவரான த.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

துணுக்காயிலிருந்து செல்லும் பஸ்கள் அக்கராயனில் தரித்துச் செல்வதில் ஏற்பட்டுள்ள பிணக்குத் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

துணுக்காயிலிருந்து செல்லும் பஸ்கள் அக்கராயன் வழியாக கிளிநொச்சி நகரம் வரை மட்டுமே சேவையில் ஈடுபடுவதற்கான அனுமதி எமக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கு அப்பால் பயணிப்பதற்கு அனுமதி கிடையாது.

> "துணுக்காயிலிருந்து செல்லும் பஸ்கள் அக்கராயன் வழியாக கிளிநொச்சி நகரம் வரை மட்டுமே சேவையில் ஈடுபடுவதற்கான அனுமதி எமக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கு அப்பால் பயணிப்பதற்கு அனுமதி கிடையாது."

துணுக்காயிலிருந்து கிராமங்கள் ஊடாக கிளிநொச்சிவரை பஸ் சேவை இருக்குமேயானால் கிளிநொச்சியிலிருந்து துணுக்காய் வரை மேற்படி வழித்தடம் ஊடாகப் பஸ் சேவையை நடத்த முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

துணுக்காயிலிருந்து அக்கராயன் ஊடாக பஸ் சேவை இடம்பெறுமாயின் துணுக்காயின் ஆலங்குளம், உயிலங்குளம், தென்னியங் குளம், கோட்டைகட்டியகுளம், அம்பலப்பெருமாள்குளம் கிராம மக்களும், கிளிநொச்சியின் அக்கராயன், ஸ்கந்தபுரம், கோணாவில், ஊற்றுப்புலம், புதுமுறிப்பு, செல்வாநகர் ஆகிய கிராம மக்களும் நன்மையடைவர்.

மேலும் மக்கள் அக்கராயன் பிரதேச மருத்துவமனை, மல்லாவி மருத்துவமனை செல்வதற்கும் மாணவர்கள் மல்லாவி மத்திய கல்லூரி, அக்கராயன் மகாவித்தியாலயம் ஆகியவற்றுக்கு இலகுவாகச் சென்று வருவதற்கும் வசதி ஏற்படும்.

மேற்படி போக்குவரத்துச் சேவையை விரைவாக ஆரம்பிக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)

# 40,594 குடும்பங்கள் மீள்குடியமர்வு


*கிளிநொச்சி மாவட்டத்தில்*

கிளிநொச்சி, ஜன.6

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை 40 ஆயிரத்து 594 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 31 ஆயிரம் பேர் மீளக் குடியமர்ந்துள்ளதாக கிளிநொச்சி அரச செயலக திட்டமிடல் பகுதியின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளான இரணைதீவு, பரவிப்பாஞ்சான், ஆகிய இடங்களும், வெடிபொருள் ஆபத்து நிறைந்து காணப்படும் முகமாலையின் குறிப்பிட்ட சில பகுதிகளும் இதுவரை மீளக்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படவில்லை.

கிளிநொச்சி மாவட்ட திட்டமிடல் கிளையின் தகவல்களின் அடிப்படையில் போரின் பின்னரான, கடந்த 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர், கிளிநொச்சி மாவட்டத்தில், 40 ஆயிரத்து 594 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 31 ஆயிரத்து 116 பேர் வரையில் மீளக்குடியமர்ந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-55)




அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பிரதேச காரியாலயமும், மர விற்பனை நிலையமும் ஒட்டுசுட்டானில் முல்லைத்தீவு அரச அதிபர் மற்றும் அரச மரக் கூட்டுத்தாபனத் தலைவர் ஆகியோரால் கடந்த 2 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டன. (க-500)

### மருத்துவமனையை அமைக்குமாறு வேண்டுகோள்

முத்துஐயன்கட்டு கிராமத்தில் மருத்துவமனையை அமைக்க வேண்டுமென இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

முத்துஐயன்கட்டு, கனகரத்தினபுரம், மன்னாகண்டல், ஜீவநகர், தட்டையர் மலை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமக்குரிய சிகிச்சையைப் பெறுவதற்கு ஒட்டுசுட்டான் செல்ல வேண்டியநிலையில்உள்ளனர்.

இந்த மக்கள் வசதி குறைந்த நிலையில் உள்ளதுடன் போக்குவரத்து வசதிகள் இல்லாத நிலையிலும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இரவு நேரங்களில் திடீரென நோய்வாய்ப்பட்டவர்களை வேறு இடங்களுக்குக் கொண்டு செல்ல முடியாத நிலையில் இவர்கள் உள்ளதால் முதற் சிகிச்சையைப் பெறுவதற்காவது இங்கு மருத்துவமனையொன்றை அமைக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-500)

# இடர்கள் ஏற்படும்போது உடனடியாகச் செயற்படுவோம்

*தெரிவிக்கிறார் வவுனியா இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர்*

வவுனியா, ஜன.6

வவுனியாவில் இடர்கள் ஏற்படும் போது தமது குழுவினர் உடனடியாகச் செயற்படும் வகையில் தயார் நிலையில் உள்ளதாகத் தெரிவித்தார் வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா.

வவுனியாவில் இடர் முகாமைத்துவக் குழுக்கள் அதிகளவில் அமைக்கப்பட்டுள்ளதுடன் இடர்களின்போது உடனடியாகச் செயற்படக்கூடிய வகையில் தொலைபேசி வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

வவுனியாவில் கடந்த காலங்களில் போதிய அளவில் இடர் முகாமைத்துவக் குழுக்கள் இல்லாமையால் இடர்களின் போது பொதுமக்கள் பல்வேறு இடர்களை எதிர்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து 2013 ஆம் ஆண்டு பாடசாலை மட்டங்களில் பல இடர் முகாமைத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தக் குழுக்களுக்கு கடுமையான காற்று, மழை, வெள்ளப்பெருக்கு உட்பட இடர்கள் நிகழும்போது பணியாற்றக் கூடிய வகையில் முதலுதவி சிகிச்சை உட்பட பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

மேலும் இடர்களின்போது எமது பணியாளர்களுடன் தொடர்பு கொள்ளக்கூடிய வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் எமது பணியாளர்களுக்கு 'வோக்கி டோக்கிகள்' போதியளவு வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் வவுனியா மாவட்டத்தில் இருந்து இலங்கையின் எந்தப் பகுதிக்கும் தொடர்பு கொள்ளக்கூடிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்கள், வவுனியா நகர சபை உறுப்பினர்கள், பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள், சுகாதாரப் பரிசோதகர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலருக்கும் இடர் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டதோடு விழிப்புணர்வுச் செயற்பாடுகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.


புளியங்குளம், கனகராயன் குளம் வடக்கு, மருதோடை, கந்தசாமி நகர், வவுனியா தெற்குப் பகுதிகளில் இடர் முகாமைத்துவ அபாயத்திட்ட வரைபடங்கள் வரையப்பட்டு அது சம்பந்தமான பயிற்சிகளையும் நாம் வழங்கியுள்ளோம்.

மேலும் புதுக்குளம், நெடுங்குளம், அவுஸ்கலபிட்டிய, கணேசபுரம் பகுதிகளில் இடர் முகாமைத்துவக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன.

வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, சிங்கள பிரதேச செயலகப் பிரிவுக் குட்பட்ட பகுதிகள் ஆகியவற்றில் வெள்ள இடர் ஒத்திகைகளையும் மேற்கொண்டுள்ளோம்.

பொதுமக்கள் எங்களுக்கு உடனுக்குடன் தகவல் வழங்கினால் நாம் உடனடியாகச் செயற்படத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (க-402)

# புதிய தோற்றம் பெறுகின்றது வவுனியா பிரதேச செயலகம்



வவுனியா பிரதேச செயலகத்தில் அங்கு வருகை தரும் மக்களுக்குரிய மேலதிக வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் அதனை அழகுபடுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வவுனியா பிரதேச செயலகத்தில் மக்கள் போதிய வசதிகளுடன் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் வவுனியா வர்த்தக சமூகத்தினரும் வவுனியா பிரதேச செயலகமும் இணைந்து வவுனியா பிரதேச செயலகத்தில் மேலதிக வசதிகளை ஏற்படுத்துவதுடன் அழகுபடுத்தும் வேலைத் திட்டத்தையும் முன்னெடுத்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

இங்கு நுழைவாயில் அமைக்கப்பட்டு வருகின்றது. மேலும் பசுமையான அழகிய புற்கள் நடப்படுகின்றன. சிறு சிறு குடில்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

மேலும் பிரதேச செயலகத்துக்கு வருகை தரும் பொது மக்களின் பார் வைக்கு பிரதேச செயலகத்தின் கட்டடப் பகுதிகள் அங்கு கடமையாற்றும் ஊழியர்களின் புகைப்படத்துடன் கூடிய விவரம், தொலைபேசி இலக்கங்கள் என்பன வைக்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலர் கா.உதயராசா புதிதாகக் கடமையேற்ற பின்னர் இத்தகைய செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-402)

### புனரமைப்புப் பணிகளில் தாமதம்

துணுக்காயிலுள்ள கறுப்பிக் குளத்தின் வான்பகுதியில் இடம்பெறும் புனரமைப்புப் பணிகள் பூர்த்தியாகாததால் மக்கள் போக்குவரத்து இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பாக துணுக்காய் பிரதேச செயலரிடம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிய வருகின்றது.

இதேவேளை தேறாங்கண்டல் குளத்திலிருந்து நீர் செல்லும் வாய்க்கால்கள் உரிய வகையில் புனரமைக்கப்படாததால் நீர்க்கசிவு, உடைவு என்பன பல இடங்களில் காணப்படுவதாகவும் மக்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர். (க-18)

# அரச பணிமனைகளில் தமிழ்மொழி பயன்பாட்டை ஊக்குவிக்க நடவடிக்கை

*கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கம் தெரிவிப்பு*

கிளிநொச்சி,ஜன.6

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கம் அரச பணிமனைகளில் தமிழ்மொழியைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையில் போட்டிகளை நடத்தி வருகின்றது.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கம் தெரிவித்துள்ளது.

பிற மொழியினருக்குத் தாய் மொழிப் பற்று இயற்கையிலேயே அமைந்துள்ளது. அவர்கள் தமது தாய்மொழியைப் பயன்படுத்தத் தவறும்போது அந்தந்த நாடுகளில் வெறுத்து ஒதுக்கப்படுகின்றனர்.

எந்தமொழி ஆட்சி மொழியாகவும் கல்வி மொழியாகவும் இல்லையோ அந்த மொழி அழிந்து போவதை எவராலும் தடுக்க முடியாது.

ஐ.நா.அவையின் அறிக்கை ஒன்றில் இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் இந்தியாவில் வங்காள மொழியும் இந்தி மொழியும் மட்டுமே இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவொரு மிகைப்படுத்திய செய்தியாக இருந்தாலும் நாம் இது குறித்து அசட்டையாக இருக்க முடியாது.

எனவே இந்த ஆண்டில் சங்கத்தினால் நடத்தப்படும் போட்டிகளில் அரச திணைக்களங்கள் பங்குபற்றுவதுடன் தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்குமாறும் கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலாவதியான உணவுகள் மட்டக்களப்பில் பறிமுதல்



மட்டக்களப்பு, ஜன.6
காத்தான்குடி நகரில், காலாவதியான, இரு மொழிகளில் லேபல் அச்சிடப்படாத மற்றும் உற்பத்தித் திகதி பொறிக்கப்படாத உணவுப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் வர்த்தகர் ஒருவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் படவுள்ளதாக காத்தான்குடி சுகாதார பிரிவுக்குப் பொறுப்பான சிரேஸ்ட பொது சுகாதாரப் பரிசோதகர் ஏ.ஏ.றபீக் தெரிவித்தார்.
வாகனத்தினூடாக வர்த்தக நிலையங்களுக்கு சட்ட விரோதமான முறையில் குறித்த உணவுப்பொருள்கள் விநியோகிக்கப்பட்டபோதே சுகாதாரப் பிரிவினர் அவற்றை நேற்று முன்தினம் கைப்பற்றினர்.
பொதியிடப்பட்ட மிக்சர் பைக்கற்றுகள், நிலக்கடலை மூடைகள், பிஸ்கட் பக்கற்றுகள் உட்பட பெருமளவிலான பொருள்கள் கைப்பற்றப்பட்டன.
அவற்றை மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஒப்படைக்கவுள்ளதாகவும் அவர் கூறினார். மட்டக்களப்பு மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் உத்தரவின் பேரிலேயே காத்தான்குடி சுகாதார வைத்தியதிகாரி பணிமனை பொது சுகாதாரப் பரிசோதகர்கள் இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (வ)

“ - ”
**பொதியிடப்பட்ட நிலையில் பெருமளவிலான பொருள்கள் கைப்பற்றப்பட்டன.**

# காரைதீவு பிரதேச சபை ‘பட்ஜெட்’ சர்ச்சை ஏற்படுத்தியோர் மீது நடவடிக்கை எடுக்குக

## காரைதீவு பிரதேச ஆலயங்களின் அறங்காவலர் ஒன்றியம் கோரிக்கை

அம்பாறை.ஜன.6
அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த காரைதீவு பிரதேச சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட முதலாவது வாசிப்பைத் தோற்கடித்து நெருக்கடி நிலையை ஏற்படுத்தியுள்ள தமிழரசுக் கட்சி சார்ந்த மூன்று உறுப்பினர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்குமாறு காரைதீவு பிரதேச ஆலயங்களின் அறங்காவலர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவுக்கு அறங்காவலர் ஒன்றியம் சார்பில் அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் மேற்படி கோரிக்கை வலியுறுத்தப்பட்டுள்ளது.
காரைதீவு பிரதேசத்திலுள்ள பதினொரு ஆலயங்களின் அறங்காவலர்களைக் கொண்ட இந்த அறங்காவலர் ஒன்றியம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வவுனியாத் தீர்மானத்துக்கு அமைவான வரவு-செலவுத் திட்டத்தை தோற்கடித்த தமிழரசுக் கட்சியின் மூன்று உறுப்பினர்களுக்கும் எதிராக கடும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளது.
அதேவேளை தற்போதைய தவிசாளர் செல்லையா இராசையாவை. அவரது சேவைகளைத் தொடர்ந்தும் மேற்கொள்ளக்கூடியதாக தவிசாளர் பதவியைத் தொடரவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது.
காரைதீவு பிரதேச ஆலயங்களின் அறங்காவலர் ஒன்றியம் கட்சிப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
காரைதீவு பிரதேச சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் தொடர்பாக எழுந்துள்ள நெருக்கடி குறித்த சர்ச்சை தொடர்பாக எமது காரைதீவு பிரதேச ஆலயங்களின் ஒன்றியத்தால் ஶ்ரீ கண்ணகை அம்மன் ஆலய முன்றலில் நடத்தப்பட்ட தீர்மானம் தொடர்பில் இந்தக் கடிதத்தைத் தங்களது மேலான கவனத்துக்கும் உரிய நடவடிக்கைக்காகவும் சமர்ப்பிக்கின்றோம்- என்றுள்ளது. (வ-30)

## யானை தாக்கி வயோதிபர் உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஜன.6
மட்டக்களப்பு, கிரான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பேரில்லாவெளி பூலாக்காடு எனுமிடத்தில் நேற்று முன்தினம் காட்டு யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். சித்தாண்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி விநாயகமூர்த்தி (வயது 61) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
வயல்வாடியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த போது இந்தச் சம்பவம் இடம் பெற்றதாக உறவினர்கள் தெரிவித்தனர். (வ)

## நிந்தவூர் அலுவலகத்தை மாற்ற நடவடிக்கை

### தொழிற்பயிற்சி அதிகார சபையின்

அம்பாறை. ஜன.6
நிந்தவூரில் கடந்த பல வருடங்களாக இயங்கி வந்த தொழிற்பயிற்சி அதிகார சபையின் மாவட்ட அலுவலகத்தை அம்பாறை நகருக்கு இடமாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக தலைவர் எம்.எச்.எம். அஷ்ரபின் அயராத முயற்சியால் இந்த அரச நிறுவனத்தின் மாவட்ட தலைமை அலுவலகம் கரையோரப் பிரதேசத்தில் 1997 இல் அமைக்கப்பட்டது.
அதன்படி தமிழ், முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் நிந்தவூர்ப் பிரதேசத்தில் கடந்த 16 வருடங்களாக மாவட்ட தொழிற்பயிற்சி நிலையமும் அதனோடிணைந்த மாவட்ட நிர்வாக அலுவலகமும் செயற்பட்டு வருகின்றது.
அம்பாறை நகருக்கு வெளியே கரையோரப் பிரதேசத்தில் அமையப்பெற்ற ஓரிரு மாவட்ட நிர்வாக அலுலகங்களில் ஒன்றாக இது காணப்படுகின்றது.
இந்த மாவட்டத்தின் அரச நிர்வாக நகராக திகழும் அம்பாறைக்கு இந்த அலுவலகத்தை மாற்றுவதற்கு சில சக்திகள் நீண்டகால மாக முயற்சி செய்து வந்ததாக அறிய முடிகின்றது.
இந்த நிலையிலேயே பெரும்பான்மையினர் கூடுதலாக வாழும் பிரதேசமான அம்பாறை நகருக்கு மாற்றிவிட இறுதிக்கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நம்பகரமாகத் தெரிய வருகின்றது.
அத்துடன் இந்தவிடயம் அரசியல்வாதிகள் பலரதும் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.
இது குறித்து பிரதேச வாசிகளும் நலன்விரும்பிகளும் விசனம் தெரிவித்துள்ளனர். (வ)

“ - ”
**கடந்த 16 வருடங் களாக மாவட்ட தொழிற்பயிற்சி நிலையமும் அதனோடிணைந்த மாவட்ட நிர்வாக அலுவலகமும் செயற்பட்டு வருகின்றது.**



தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட முதலாவது சர்வதேச ஆய்வரங்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை அரபு மொழி பீட ஒன்றுகூடல் மண்டபத்தில் இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தின் பீடாதிபதி ஏ.பி.எம். அலியார் தலைமையில் நடைபெற்றது.
இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் கலாநிதி எஸ்.எம்.இஸ்மாயில் அதிதிகளுக்கு நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவித்தார். (வ)

## பகலில் வீட்டில் கொள்ளை; மோப்ப நாய் சகிதம் தேடுதல்

ஏறாவூர், ஜன.6
ஏறாவூரிலுள்ள வீடொன்றில் பகலில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பாக ஏறாவூர்ப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.
ஆசிரியர்களான கணவனும் மனைவியும் பணி கடமையின் நிமித்தம் வெளியே சென்றிருந்த சமயம் பார்த்து இந்தத் திருட்டு இடம் பெற்றிருப்பதாக முறையிடப்பட்டுள்ளது.
வெள்ளிக்கிழமை நண்பகல் ஜும்மாத் தொழுகை வேளையில் இந்தத் திருட்டு இடம் பெற்றுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
நேற்று முன்தினம் சனிக்கிழமை மோப்ப நாய் சகிதம் பொலிஸார் குறித்த இடத்துக்குச் சென்று விசாரணை களை மெற்கொண்டிருந்த னர்.
எனினும் சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்று ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவித்தனர். (வ)

## ரம்புட்டான் செய்கை மட்டக்களப்பில் வெற்றி



மட்டக்களப்பு, ஜன.6
மட்டக்களப்பு மாவட்டத்தில் பரீட்சார்த்த முறையில் மேற் கொள்ளப்பட்ட றம்புட்டான் செய்கை வெற்றியளித்துள்ளது.
இதனால் அங்குள்ள விவ சாயிகள் றம்புட்டான் செய்கை மீது கூடிய ஆர்வம் காட்டுகின்றனர்.
மட்டக்களப்பு படுவான்கரை பிரதேசத்தின் போரத்தீவுப் பற்று பிரதேச செயலக பிரிவின் திக்கோடை கிராமத்திலேயே இவ்வாறு பரீட்சார்த்த முறையில் றம்புட்டான் செய்கை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.
மட்டக்களப்பு மாவட்டத்தில் ஈத்தம் பழச்செய்கையும் வெற்றியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

# பள்ளிவாசல் சம்மேளனத்தின் சுற்று வேலியும் தற்காலிக வீடும் இனந்தெரியாதோரால் சேதம்

## மட்டு. ஆரையம்பதியில் அடாத்தான செயல்

மட்டக்களப்பு.ஜன.6
மட்டக்களப்பு ஆரையம்பதிப் பிரதேசத்திலுள்ள சிகரம் கிராமப் பள்ளிவாசல் சம்மேளனத்துக்குச் சொந்தமான காணியின் சுற்றுவேலி மற்றும் தற்காலிக வீடு என்பன புதன்கி ழமை இனந்தெரியாதவர்களால் சேதமாக்கப்பட்டுள்ளன.
இனந்தெரியாத நபர்களின் இந்த அடாத்தான செயல் குறித்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து காத்தான்குடி பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து பார்வையிட்டதுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொள்கின்றனர்.



இந்தச் சம்பவத்தையடுத்து அங்கு சென்ற கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாறூக் சேதப்படுத்தப்பட்ட பகுதியை பார்வையிட்டதுடன் சிகரம் கிராம மக்களுடன் கலந்துரையாடினர்.
இந்தவிடயம் தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸாரை கேட்டுள்ளதாகவும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாறூக் தெரிவித்தார். (ஓ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளிக்கு 'ரொக்கட்' செலுத்த நல்லதொரு மையம் இலங்கையே

## நாஸா நிறுவனம் கூறுகிறது

கொழும்பு,ஜன.6
எதிர்காலச் செயற்பாடுகளில் குறைந்த எரிபொருள் பாவனையுடன் விண்வெளிக்குச் செல்லத்தக்க சிறப்பானதோர் இடம் இலங்கைதான் என்கிறது நாஸா.
இலங்கை தீவொன்றாக இருப்பது அதற்கான சிறப்பான காரணங்களில் ஒன்றாகும்.
அதுமட்டுமன்றி சுற்றாடல் மற்றும் இந்த நாட்டின் அமைப்புப் போன்றவை விண்வெளி ரொக்கெட்களின் மையமொன்றை அமைப்பதற்கு பெரிதும் பொருத்தமானது என்றும் நாஸா நிறுவனம் சுட்டிக் காட்டியுள்ளது.
புயல்கள், சுழல்காற்றுக்கள் இல்லாதிருப்பதும் எப்போதுமே தெளிவான வான்பரப்பொன்றைக் கொண்டிருப்பதும் விண்வெளி ரொக்கெட் ஒன்றை விண்ணுக்கு ஏவும் போது எதிர்பாராத விதமாக வெடிப்பு ஏதும் நிகழுமானால் கடலில் விழும் நிலை காணப்படுவதால் இலங்கையின் அமைவிடம் பெரிதும் பாதுகாப்பானது என்றும் நாஸா அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (ஒ-22)

# ஜோர்தானில் ஜனாதிபதிக்கு வரவேற்பு



கொழும்பு.ஜன.6
மத்திய கிழக்கு நாடுகளுக்கான பயணத்தில் நேற்றுமுன்தினம் மாலை ஜோர்தான் சென்றடைந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு குயீன் ஆலியா சர்வதேச விமான நிலை யத்தில் பெரும் வரவேற்பளிக்கப்பட்டது.
ஜோர்தான் வெளிவிவகார அமைச்சின் பதில் இயக்குநர் நாயகம் முகம்மது தைசிர், அமைச்சின் ஆசிய திணைக்கள இயக்குநர் சுகைர் என்சுக் ஆகியோர் ஜனாதிபதி குழுவினரை வரவேற்றனர்.
ஜோர்தானில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகளும் அவர்களின் குடும்பத்தினரும் விமான நிலையம் வந்திருந்தனர்.
மஹிந்த ராஜபக்ஷ ஜோர்தானில் இரண்டு தினங்கள் தங்கியிருப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)


# மாநாட்டுக்கு வந்த 100 சொகுசு பஸ்களை தருமாறு கோருகிறது போக்குவரத்துச் சபை



கொழும்பு,ஜன.6
பொதுநலவாய மாநாட்டின் தேவைக்காக சீனாவிலிருந்து தருவிக்கப்பட்டிருந்த 'யுடோன்' வர்க்கத்தைச் சேர்ந்த 100 சொகுசு பஸ்களையும் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு வழங்கி இலங்கை போக்குவரத்துச் சபையைப் பலப்படுத்திவிடுமாறு அகில இலங்கை போக்குவரத்து ஊழியர்கள் சங்கம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.
நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் தருவிக்கப்பட்டுள்ள இந்த 100 பஸ்களும் பொது நலவாய மாநாடு முடிவுற்றதன் பின்னர் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு வழங்கப்படவுள்ளதாக மாநாடு இடம்பெற்றிருந்த காலகட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.
அந்த 100 பஸ்களும் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு நிச்சயம் கிடைக்கும் என்று ஊழியர்கள் மட்டுமன்றி பயணிகளும் எதிர்பார்த்திருக்கின்றனர் என்று இலங்கை போக்குவரத்து ஊழியர்கள் சங்கத்தின் செயலாளர் சேபால லியனகே கூறியுள்ளார்.
இந்த பஸ் ஒன்றின் பெறுமதி 120 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்டது எனத் தெரிவிக்கும் லியனகே, இந்த 100 பஸ்களையும் தனியார் நிறுவனங்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் நிதியமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் ஈடுபட்டிருப்பதாக தமது சங்கத்துக்கு தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் தெரிவித்துள்ளன. (ஒ-22)

# பௌத்த குருமாரிடம் பிரதமர் மன்னிப்பு கேட்க வேண்டும்

## வலியுறுத்துகிறது பொதுபலசேனா



கொழும்பு.ஜன.6
பிரதமர் டி.எம்.ஜயரட்ண நாட்டின் அனைத்து பௌத்த குருமாரிடமும் மன்னிப்புக் கோர வேண்டும் எனப் பொதுபலசேனா அமைப்பு வலியுறுத்தியுள்ளது.
கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.
பிரதமர் செயலகத்தில் இருந்து வந்த கடிதம் தொடர்பில் ஜாதிக ஹெல உறுமயவுடன் ஏற்பட்ட முரண்பாட்டைத் தீர்க்கும் வகையில் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.
போதைவஸ்து அடங்கிய கொள்கலனை மீட்பதற்கு பிரதமரின் செயலாளர் ஊடாக கடிதம் ஒன்று சுங்கப் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.
இது தொடர்பில், இரு தரப்பினருக்கும் இடையில் வாக்குவாதங்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு இந்தச் சந்திப்பு வழி சமைத்துக் கொடுத்தது- என்றார் ஞானசாரதேரர். (ஒ-10)

# 25 கிலோ தங்கம் கடந்த ஆண்டில் மீட்பு

கொழும்பு.ஜன.6
கடந்த ஆண்டில் இலங்கை சுங்கத் திணைக்களத்தினால் 25 கிலோகிராம் தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளது.
93 சுற்றி வளைப்புக்களில் இந்தத் தங்கத் தொகை கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் அந்தத் தொகையின் மொத்தப் பெறுமதி 15 கோடி ரூபாவுக்கு அதிகம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
சட்டவிரோதமாக இந்த நாட்டிலிருந்து கடத்திச் செல்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் போதும் மற்றும் இந்த நாட்டுக்குள் கொண்டு வருவதற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த முயற்சிகளின் போதும் ஸ்கேன் உபகரணங்களின் உதவியுடன் இந்தத் தங்கக் கட்டிகள், ஆபரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று சுங்கத்திணைக்களம் அறிவித்துள்ளனர். (ஒ-22)

# மாட்டிறைச்சிக் கடையை இழுத்து மூடிய பிக்கு

## கடையைச் சுத்தம் செய்வித்து 'பிரித்' பாராயணமும் நடத்தினாராம்

கொழும்பு,ஜன.6
நாகொட, தல்கஸ்வல வாராந்த சந்தையில் பல வருடங்களாக இயங்கி வந்த மாட்டிறைச்சிக் கடையொன்றை உச்சபட்ச கேள்வி மனுவாக (டெண்டர்) மூன்றேகால் இலட்சம் ரூபாவுக்கு எடுத்த பௌத்தபிக்கு ஒருவர் ஜனவரி முதலாம் திகதி அந்தக் கடையைச் சுத்தம் செய்வித்து அதற்குள் பிரித் பாராயணமும் நடத்தியபின் கடையை இழுத்து மூடியிருக்கிறார்.
நாகொட ஸ்ரீ சுனந்த வித்தியாலயத்தின் அதிபரான வெலிவெவ சுஜான தேரரே இந்த வித்தியாசமான காரியத் தைச் செய்திருக்கிறார்.
ஜனவரி முதலாம் திகதி அந்தக் கடையிலிருந்த இரத்தக் கறைகளைக் கழுவி நீக்கிய பின் அன்று பகல் பால் பொங்கி அவரது தலைமையில் பிரித் பாராயணமும் நடத்தப்பட்ட பின் கடை இழுத்து மூடப்பட்டது.
நாகொட பிரதேசசபை வருடா வருடம்இந்தஇறைச்சிக்கடையை உச்ச பட்ச கேள்வி மனுவுக்கு குத்தகைக்கு விடுவது வழக்கம்.

> "–" நாகொட பிரதேச சபை வருடா வருடம் இந்த இறைச்சிக் கடையை உச்ச பட்ச கேள்வி மனுவுக்கு குத்தகைக்கு விடுவது வழக்கம்.

இந்தமுறை அதிக பட்சவிலை மனுவாக மூன்றேகால் இலட்சம்ரூபாவை இந்தத் தேரர் சமர்ப்பித்ததால் அவருக்குக் கடை குத்தகைக்கு வழங்கப்பட்டது.
இந்த மூடுவிழா வைபவத்தைக் கண்டுகளிக்க ஏராளமான மக்கள் அவ்விடத்தில் குழுமியிருந்ததாகவும் அவர்கள் அனைவருக்கும் தலா ஒவ்வொரு கிளாஸ் சூடான பால் வழங்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழ் அரசியல் கைதிகளின் வாழ்வில் ஒளியேற்ற வகை செய்யட்டும்...

இந்த வாரக் கடைசியில், எதிர்வரும் பன்னிரண்டாம் திகதி, தமிழ் அரசியல் கைதிகளை, வடமாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சந்தித்துப் பேசுவதற்கு ஏற்பாடாகி உள்ளது. நீண்ட காலமாக, சுமார் இருபது வருடங்களுக்கும் மேலாக, கொழும்பு மகசீன் சிறைச்சாலையில், உரிய வகையில் விசாரணைகள் இன்றி, அரச தரப்பில் அந்தந்த வேளையைப் போக்கும் "உத்திகளே" கையாளப்பட்டு வந்துள்ளன.

அவற்றின் விளைவாக, சிறைச்சாலைகளில் அடைத்து வைக்கப்பட்டிருப்போர் மட்டுமன்றி, அவர்களின் குடும்பத்தினரும், உறவுகளும் மிகப் பல வகைகளிலும், உள ரீதியாகவும், உடல் ரீதியாகவும் மிகவும் பாதிப்புற்றுள்ளனர். இது தனித்து மனிதாபிமானப் பிரச்சினையாக மட்டுமன்றி, மனித நேய விவகாரமாகவும் பூதாகாரமாக உருவெடுத்துள்ளது.

மிகப் பல தடவைகள், பாதிப்புற்றவர்களும் அவர்களின் இரத்த உறவுகளும், அரச தரப்பின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்த போதிலும், அவர்களின் நிலைமை மனித நேயத்துடனோ மனிதாபிமானத்துடனோ கணக்கில் கொள்ளப்படவும் இல்லை. அவர்கள் சொற்ப பலாபலனை யாவது அடைந்தார்களா என்றால், அதுவும் இல்லவே இல்லை.

அதன் விளைவு, சட்ட ரீதியான நடவடிக்கை என்ற பேரில் நீண்ட காலச் சிறை வாழ்க்கையும், விரக்தியில் மூழ்கிய நிலையுமே அவர்களின் வாழ்வாகி விட்டது.

தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குமாறு பிரதேச சபைகள் போன்ற மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்புகள் வலியுறுத்தியும், கொழும்பு அரசாங்கம் அசைவதாக இல்லை என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

அனைத்துலக மனித உரிமைகள் நாளில், கடந்த மாதம் பதினோராம் திகதி, திருகோணமலையில், நடத்தப்பட்ட அராஜகம், ஊன்றிப் பதியப்பட வேண்டிய ஒன்றாகும்.

காணாமற்போன தமது உறவுகள் தொடர்பில், ஜனநாயக வழிநின்றும், அகிம்சையைக் கைக்கொண்டும் போராட்டம் நடத்தியோர் மீது காட்டுமிராண்டித் தனமாக தாக்குதல்கள் நடத்தப்பட்டன. ஆனால் அதனைத் தடுப்பதில் சட்டம், ஒழுங்கைப் பேண வேண்டிய பொலிஸார் மௌனித்து இருந்தனர்.

காணாமற்போன, காணாமற்போகச் செய்யப்பட்ட தமது பிள்ளைகளின் நிழற்படங்களைத் தாங்கி நின்ற தாய்மார்களிடம் அவற்றைப் பிடுங்கி எடுத்தவர்களைத் தடுக்கும் நல்ல மனமும் பொலிஸாரிடம் இருக்கவில்லை.

மனித உரிமைகளுக்கும் சட்டத்தின் ஆட்சிக்கும் மதிப்பளிக்காத நாட்டில் நீதிக்கு இடமில்லை– என்று ஐக்கிய நாடுகள் சபையின் புகழ் பூத்த முன்னாள் செயலாளர் நாயகம் கோபி அனான் தெரிவித்த கருத்து இலங்கைக்கு மெத்தவும் ஒத்துப் போகிறது; பார்த்தீர்களா!

போர் முடிவுற்று நாட்டில் இன ஐக்கியம் தளிர்த்து விட்டது என்றும், மனித உரிமை மீறல்கள் தடுக்கப்பட்டு விட்டன என்றும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் நியமங்கள் அப்பழுக்கின்றி, இந்த நாட்டில் கைக்கொள்ளப்படுகின்றன என்றும் வர்ணக் காகிதம் அரச தரப்புகளால் அனைத்துலகத்துக்குக் காண்பிக்கப்பட்டாலும்–


படிப்பது தேவாரம்; இடிப்பது சிவன் கோவில் என்றவாறு அரசின் புதுவகை ராஜதந்திரம் கொடிகட்டிப் பறக்கிறது.

அதற்குப் போதிய வலுவேற்றுவதற்கு தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் கடந்த வாரத்தில் வடக்கு முதலமைச்சருக்கு வழங்கிய வாக்குறுதிக்கு இணங்க எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (ஜன.12 இல்) முதலமைச்சர், தமிழ் அரசியல் கைதிகளைச் சந்திக்க உள்ளார்.

இந்தச் சந்திப்பு முன்னர் பல தரப்புகளுடனும் நடத்தப்பட்ட சந்திப்புகள் போல் அன்றி, பாதிக்கப்பட்டு, ஆண்டுக் கணக்காக நீதி கிடைக்காமல் அல்லலுறும் தமிழ் அரசியல் கைதிகள் வாழ்வில் ஒளியேற்ற வகை செய்யட்டும். அதற்குப் பலமேற்ற உதயன் வாசகர்கள் கைகளும் ஓங்கி உயர்ந்து ஒலிக்கட்டும்....

# வடமாகாண சபை முதல்வரின் ஜனாதிபதியுடனான சந்திப்பு

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து
கோகுலன்



போர்க் குற்றங்கள் மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாக மார்ச்சில் நடைபெறவிருக்கும் மனித உரிமைகள் சபை மாநாட்டில் நிலைமைகள் அரசுக்கு எதிராக மிகப் பாரதூரமான திருப்பங்களாக அமையும் என்ற வகையில் அரசின் சொந்த வட்டாரங்கள் மூலமே தகவல்கள் கிடைத்து வருவதால் ஒரு புதுவித அணுகு முறையை காட்டிக் கொள்ளும் நிலைக்கு அரசு இப்போது தள்ளப்பட்டுள்ளது.

ஜெனிவாவில் தமக்குப் பெரும்பலம் இருப்பதாகக் காட்டிக் கொள்வதில் மட்டுமே இதுவரை ஈடுபட்டிருந்த அரச தரப்பில் அவசர அவசரமான செயற்பாடுகள் இப்போது முடுக்கி விடப்பட்டுள்ளன.

இவை இப்படி இருக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த வாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளின் இரண்டு பேர் கொண்ட ஒரு தூதுக் குழுவைச் சந்தித்து உரையாடியுள்ளார். வட மாகாண சபை செயற்படுவதில் உள்ள முட்டுக்கட்டைகள் குறித்து அவர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டதாகத் தெரிகின்றது. வடக்கு மாகாணத் தேர்தல் சார்பாக சர்வதேசத்துக்கு வழங்கியிருந்த வாக்குறுதிகளை அரசு நிறைவேற்றியிருப்பதாக வெளிப்படுத்திக் கொள்வதும், மீண்டும் அங்கு ஜனநாயகம் மலர்விக்கப்பட்டிருப்பதாக வெளிப்படுத்திக் கொள்ளவேண்டிய நிலைமையும் அரசுக்கு இருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ராஜபக்ஷ ஆலோசனைகள் நடத்திக் கொண்டிருந்தாலும் வடமாகாண சபை தொடர்பான சிக்கல்கள் முற்றாக முடிந்த பாடாக இல்லை. அவர்களுடன் நடத்திய பேச்சுக்களில் வடமாகாண சபை நிர்வாகம் மற்றும் நிதிப் பிரச்சினைகளும் பேச்சில் அதிகமாக விவாதிக்கப்பட்டதாகத் தெரிகின்றது. பேச்சில் கலந்து கொண்ட முதல்வர் சி.வி.விக்னேஸ்வரனும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனும் முதலமைச்சருக்காக நியமிக்கப்பட்டுள்ள செயலாளர் அகற்றப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டதாகத் தெரிகின்றது.

### ஜனாதிபதி சம்மதம்

இதற்கு ஜனாதிபதி சம்மதம் தெரிவித்திருப்பதுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்புகிற ஒருவரை முன்மொழியுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் காலத்துக்குக் காலம் த.தே.கூட்டமைப்பு, திறைசேரி செயலாளர் பி.பி.ஜயசுந்தரவுடன் நிதி நிலைமைகள் தொடர்பாக விவாதிக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார். பேச்சுக்களின் போது திறைசேரி செயலாளர் மற்றும் அமைச்சரவைச் செயலாளர் சுமித் அபேசிங்கவும் உடன் இருந்தனர். பேச்சுக்களின் பின்னர் சுமந்திரன் ஊடகமொன்றுக்கு பின்வரும் தகவலை வெளியிட்டார்.

வடமாகாண சபை எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறப்பட்டன. அவைகளில் சபைக்கு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ள விடயமும் ஒன்று. ஆளுநர் அவர்களை நியமிக்கும் போது முதலமைச்சருடன் கலந்தாலோசிக்க வேண்டும். பிரதம செயலாளர் நியமனம் தொடர்பாகவும் ஜனாதிபதியுடன் கலந்து பேசப்பட்டது. முதல்வருடன் கலந்து பேசியே இந்த நியமனமும் இடம்பெற வேண்டும். வடமாகாண சபைக்கான நிதிக் கொடுப்பனவுகள் குறித்தும் பேசினோம். இதில் வெளிநாட்டு நிதி வரத்துக்கள் பற்றியும் ஆலோசிக்கப்பட்டது. இது தொடர்பாக திறைசேரி அதிகாரிகளுடன் ஆலோசித்து வெளியிலிருந்து நன்கொடைகளைப் பெறுவது தொடர்பான நடைமுறைகள் தீர்மானிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது. இடம் பெயர்ந்த மக்களின் பிரச்சினைகள், விதவைகள், அநாதைகள் மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் விடயங்களும் விவாதிக்கப்பட்டன.

வழமையைப் போல் இந்த மாதிரி கலந்துரையாடல்களின்போது வந்திருப்பவர்களை விருந்துக்கழைக்கும் முறையில் கூட்டமைப்பு பிரமுகர்களை பகல் உணவில் கலந்துகொள்ளுமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார். நண்பகல் ஆரம்பமான கலந்துரையாடல் ஒரு மணி நேரம் நீடித்திருந்தது. ஆனாலும் கூட்டமைப்பு பிரமுகர்கள் அந்த அழைப்பை கண்ணியமான முறையில் நிராகரித்து விட்டனர்.

வடமாகாண ஆளுநர் ஓய்வு பெற்ற இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திர சிறிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையிலான சிக்கலான பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாமலே நீடித்து வருகின்றது. ஆனால் இந்த விடயமும் வடக்கின் இராணுவத் தலைமைகளில் செய்யப்பட்டுள்ள வழமையான மாற்றங்களின் மூலம் இருதரப்பு முறுகல் நிலை இலகுவாக்கப்பட்டது போன்று சுமுகமாக தீர்த்துக் கொள்ளப்படலாம் என்று அரசு சார்ந்த வட்டாரம் ஒன்று தகவல் தெரிவித்துள்ளது.

புதுவருடத்தன்று வடக்கு முதலமைச்சர் ஜனாதிபதியை சந்தித்திருப்பதானது நாட்டின் அரச தலைவர் அவர் தான் என்பதை ஏற்றுக்கொள்வதாகவும் அவருடன் சேர்ந்து பணியாற்ற விரும்புவதாகவும் காட்டுவதாக கருதப்படுகின்றது. இருந்த போதிலும் அரசின் நல்லிணக்கச் செயற்பாடுகளில் கலந்துகொள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மறுத்துவிட்டதுடன் அதன் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இணைந்து கொள்ளவும் தொடர்ந்து மறுத்து வருகின்றது. இதற்கு அரசு தனது முன்மொழிவுகளை முதலில் வெளியிட வேண்டும் என்று அது கேட்டுள்ளது.

### முக்கியத்துவம் இல்லாமலில்லை

என்னுடன் எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம். பேச்சு வார்த்தைகள் மூலம் நாம் பிரச்சினைகளை சுமுகமாக தீர்த்துக் கொள்ளலாம் என்று ராஜபக்ஷ அவர்களிடம் கூறியுள்ளார். மார்ச்சில் நடைபெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் சபை கூடவிருக்கும் தறுவாயில் இவை நடந்திருப்பதில் முக்கியத்துவம் இல்லாமலில்லை.

அரசுக்கு இருந்துவரும் தலை இடிகளை மேலும் அதிகரிக்கச் செய்கின்றன அதற்கு கிடைத்துவரும் ஜெனிவாவில் மீண்டும் கொண்டு வரப்படவிருக்கும் புதிய தீர்மானம் பற்றிய தகவல்கள். இந்தத் தீர்மானம் அமெரிக்காவால் முன்னெடுக்கப்படவிருக்கிறது. பிரிட்டன் உட்பட வேறு பல நாடுகள் அதற்கு இணை முன் மொழிவாளர்களாக இருக்கப் போகின்றன.

### புதிய விசாரணைக்கு பொறிமுறை கோரப்படலாம்

இலங்கை அரசு 2012, 2013 ஆம் ஆண்டு தீர்மானங்களின்படி பொறுப்புக்கூறல் விடயங்களில் முன்னகர்வுகளை வெளிப்படுத்தவில்லை என்ற அடிப்படையில் விசாரணை யொன் ஐ.நா.மேற்கொள்ளும் விதத்தில் பொறி அமைப்பொன்றை உருவாக்கும்படி இந்தத் தீர்மானத்தில் கேட்டுக் கொள்ளப்படலாம் என்ற அச்சம் மேலோங்கியுள்ளது.

புதிய தீர்மானத்தின் சரியான அமைப்பு மற்றும் மாதிரி தொடர்பான தகவல்கள் விளக்கமில்லாமல் இருந்த போதிலும் இந்த முறை நிலைமைகளை எதிர்கொள்ள அரசு தயாராகிவருவது தெரிகிறது. நிச்சயமாக அமெரிக்கா ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தே தீரும் என்ற தகவல் கிடைத்துள்ளமையினாலேயே அரசு இப்போது விழிப்படைந்துள்ளது. அரசு தனது சொந்த பொறிமுறையொன்றை அமைத்து இறப்புகள், காயமடைந்தவர்கள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்து அதற்கான சூழ்நிலைகளை அச்சொட்டாக கண்டுபிடிக்க நடவடிக்கை எடுத்துள்ளமையை வெளிப்படுத்திக்கொள்ள அர முனைந்துள்ளது. இந்த விடயங்களையே ஜனாதிபதியின் செயலாளர் வீரதுங்க ஜெனிவாவில் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு தெளிவுபடுத்தவிருக்கிறார். இந்த விடயங்களை இராணுவ நீதிமன்றங்கள் இப்போது ஆராய்ந்து வருவதாகவும் அவர் அங்கு எடுத்துக் கூறுவார். இந்த விடயங்களாலேயே இப்பொழுது கொழும்பு வரவிருக்கும் அமெரிக்க பிரதிநிதி ஸ்டீபன் ஜே.ராப் அக்கறை செலுத்துவார் என்று தெரிகிறது. அமெரிக்க வெளியுறவு அமைச்சின் உலக குற்றவியல் நீதிக்கான அலுவலகத்தின் உலகளாவிய தூதுவர் என்ற பதவியில் இருப்பவர். ஒரு சமயம் லைபீரியன் ஜனாதிபதியாக இருந்தவரான சார்ள்ஸ் டேய்லர் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் விசாரணைக்குட்படுத்தப்பட்டபோது மூன்றாவது பிரதமவாதி தரப்பு வழக்கறிஞராக செயற்பட்டவர். இலங்கையில் அமெரிக்காவுக்கு அக்கறையுள்ள விடயங்கள் பலவற்றை அரசு அதிகாரிகள் முக்கிய அரசியல் வாதிகளோடும் அவர் கலந்துரையாடுவார் என்று தெரிகிறது. உலகின் பல நாடுகளில் இனக்கொலை, போர் குற்றம் மனித வர்க்கத்துக்கெதிரான குற்றங்கள் போன்றவை தொடர்பாக நடைபெற்றுவரும் விசாரணைகளில் அமெரிக்காவுக்கான சர்வதேச நடவடிக்கைகளை அவர் ஒருங்கிணைப்பவராக இருந்து வருகிறார்.

இலங்கையின் நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான செயற்பாடுகளை அவர் ஆராய்வார் என்று தெரிகின்றது. 2012 ஆம் ஆண்டு பெப்ரவரியிலும் அவர் இலங்கைக்கு வந்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் உரிமைக்காக உயிரையே கொடுத்தவர் குமார் பொன்னம்பலம்

குமார் பொன்னம்பலம் கொலைச் சம்பவத்தை விசாரணை செய்த பொலிஸ் அதிகாரியான பந்துல விக்கிரமசிங்க விசாரணை அறிக்கையையும் கொலையோடு சம்பந்தப்பட்டவர்களின் விபரத்தையும் 2000ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதமே அப்போதைய ஜனாதிபதி சந்திரிகாவிடம் கையளித்திருந்தும் அவர் எதுவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் பலதடவைகள் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடுமையான வாதங்களை முன் வைத்திருந்தனர். தகுந்த தலைமையின்றித் தமிழினம் அநாதையாக்கப்பட்டு படுமோசமான கட்டத்தை அடைந்திருந்த நிலையில் அவ்விடத்தை நிரப்பக் கூடிய தலை மகன் குமார் பொன்னம்பலமாகவே இருந்தார்.

அதனையும் கருத்தில் கொண்டுதான் அவர் கொலை செய்யப்பட்டபோது அதியுயர் விருதான மாமனிதர் என்ற பட்டம் வழங்கப்பட்டது. அவரைக் கொலை செய்தது யார் எனத் தெரிந்த பின்பும் அவரின் கொலைச் சம்பவத்தை விசாரித்த பொலிஸ் காவல் உத்தியோகத்தர்கள் கொலை செய்தவர்களை பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். கொலை செய்தவர்களுக்கு எதிராகத் தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை.

புலம்பெயர்ந்த தமிழர்களைப் பொறுத்த வரையில் அவர் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் ஆற்றிய தொண்டுகளால் அவர்களின் முடி சூடா மன்னனாகத் திகழ்ந்தார். இலங்கை அரசியல் சரித்திரம் எழுதும்போது ஜனநாயகக் கட்சி கூட்டமைப்பின் விஞ்ஞாபனம் உருவாவதற்கு இவர் ஆற்றிய சேவை பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும். இந்த விஞ்ஞாபனத்தை ஸ்ரீலங்கா



மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 14ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்றாகும். அதனையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.

சுதந்திரக்கட்சி, தினேஷ் குணவர்த்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி, முஸ்லிம் காங்கிரஸ், பல்கலைக்கழக மாணவர் முன்னணி, முதலிய பல கட்சிகளும் சேர்ந்து உருவாக்கின. அதில், அனைத்துக் கட்சியினரும் கையெழுத் திட்டனர். இதை சிறிமாவோ அம்மையார் கைவிட்டிருக்காவிட்டால் தமிழர்களது பிரச்சினையை அப்போதே தீர்க்கப்பட்டிருக்கும். 1985ஆம் ஆண்டு முதல் அவர் சாகும் வரை பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அவசர காலச் சட்ட விதிகளின் கீழ் கைதுசெய் யப்பட்ட தமிழ் இளைஞர்களுக்காக இலவச மாக வாதாடி அவர்களுக்கு விடுதலை பெற்றுக்கொடுத்தார். அவர் ஆற்றிய சேவை இதுவரை யாரும் ஆற்றியதில்லை.

அவர் சாவடைந்தபோது களுத்துறைச் சிறைச்சாலையில் கறுப்புக்கொடி பறக்கவிடப்பட்டமை இதை நிரூபிக்கிறது. அவர் மறைவதற்குச் சற்று முன் தேர்தலை எதிர்நோக்கி தமிழ்ப் பகுதிகளில் போட்டியிடுவதற்கு ஒரு பட்டியலைத் தயாரித்திருந்தார். இதுவும் அவரது கொலைக்குக் காரணமாக அமைந்திருக்கலாம். அவரைப் போல இன்னொருவர் பிறக்கப்போவதில்லை.

மாமனிதர் தன்னைப் பற்றிக் கூறும் போது பின்வருமாறு கூறினார். நீ உனது உயிரைப் பற்றிப் பயப்பட்டால் வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டும். நீ வாயை மூடிக் கொண்டே வாழ வேண்டுமானால் அந்த வாழ்க்கையின் அர்த்தம்தான் என்ன? நான் ஓர் அடிமையாக வாழ்ந்து இனத்துவேசிகளும் ஆட்சியில் உள்ளவர்களும், கூறுவனவற்றுக்கு தலையாட்டிக் கொண்டிருக்க விரும்பவில்லை. அவர்கள் விரும்புவதை நான் ஏற்றுக்கொள்ள முடியாமல் அவர்கள் கூறுவது எனது நம்பிக்கைக்கு எதிராக அமைந்தால் நான் ஏன் எனது மனசாட்சிக்கு எதிராக மௌனம் சாதிக்க வேண்டும். அவர் தான் ஏன் விடுதலைப் புலிகளை ஆதரிக்கிறார் என்பதற்கு சுவர்ணவாஹினியில் பின்வருமாறு கூறினார். தமிழர் அரசியல் நிலை என்ன என்பதை ஒரு சந்தர்ப்பத்தில் நான் ஆராய்ந்து பார்த்தேன். ஒரு புறம் பயங்கரமான சிங்கள அரசும் மறுபுறம் ஒரு சதமும் பெறுமதியற்ற தமிழ்க் குழுக்களும் நாடாளுமன்றத்தில் இருக்கின்றன. அவர்கள் சிங்கள அரசுக்கு நிபந்தனையின்றி ஆதரவு வழங்கி வந்தனர். எக்காரணத்தை முன்னிட்டு அவ்வாறு ஆதரிக்கிறார்கள் என்பதை நீங்கள் அவர்களிடம் கேட்டு அறியுங்கள். அரசு அவர்களுக்கு பாதுகாப்பும் தனிப்பட்ட உதவிகளும் செய்கிறது. இத்தகைய சூழலில் தமிழ் மக்களின் அபிலாசையை முன்னெடுத்துச் செல்லும் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் அமைப்பு தமிழீழ விடுதலைப்புலிகளே என்று எனக்குத் தோன்றியது. அவர்கள் ஒருபுறம் போராடிக் கொண்டு மறுபுறம் அரசுக்கு அழுத்தம் கொடுக் கிறார்கள் இத்தகைய சூழ்நிலையிலேயே நான் புலிகளை ஆதரிக்கின்றேன் என்றார்.


> புலம்பெயர்ந்த தமிழர்களைப் பொறுத்த வரையில் அவர் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் ஆற்றிய தொண்டுகளால் அவர்களின் முடி சூடா மன்னனாகத் திகழ்ந்தார்.

அல்லற்பட்ட தமிழினத்தின் அவலங்களைப் போக்கி அவர்களுக்காக ஆணித்தரமாகக் குரல் கொடுத்த ஆண் மகனின் குரல்வளை நசுக்கப்பட்டது. தமிழர்கள் ஒரு தலைவனை இழந்தனர்.

தமிழர்களுக்காகத் தன்னையே தியாகம் பண்ணிய குமார் பொன்னம்பலம் செய்த தொண்டுகளெல்லாம் இந்தத்தரணியிலே தமிழர் தம் சரித்திரத்தில் நிலைத்திருக்கும். மறைந்தும் மறையாத அமரர் புகழ் நீடு வாழி. அவரது பதின்நான்காவது ஆண்டு நினைவு நாளில் அவனியிலே தமிழர்களுக்கு இனிமேலாவது ஓர் ஆறுதல் கிட்டவேண்டும்.

அமரரின் ஆத்மா எமது விடிவுக்கு வழிகாட்டும் என்ற நம்பிக்கையோடு வாழவேண்டியது தான். காலம் எமக்கு நல்ல பதிலைத்தரும் என்று எதிர்பார்த்து அமரரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போம்.

**தொகுப்பு - டி.எம்.ஆர்.**



பி.சுபிகா

# இளம் தலைமுறையினர் வெறுக்கும் கூட்டுக்குடும்பம்

நம் வாழ்க்கையில் இன்பத்திலும் துன்பத்திலும் நம்முடன் முதலில் கை கொடுத்து நிற்பது நம் குடும்பத்தாரே. இன்றைய காலகட்டத்தில் குடும்ப அமைப்பு மாறிக் கொண்டே வருகிறது. முன்பெல்லாம் குடும்பம் என்றால் அது பெரிய கூட்டுக் குடும்பமாக ஒரே வீட்டில் வசித்து வந்தார்கள். ஆனால் அது இப்போது அடியோடு மாறி விட்டது.

இப்போதுள்ள குடும்பங்கள் எல்லாம் சிறிய எண்ணிக்கையில் சின்ன சின்னதாக மாறிவிட் டது. இதற்குக் காரணம் இன்றைய கால கட்டத்தில் கூட்டுக் குடும்பம் என்பது பல பேருக்கு பெரிய சுமையாகவும், பிரச்சினையாகவும் மாறிவிட்டது.

பெரிய அளவில் மாற்றங்கள் இருக்கும் போது அது ஏன் அவ்வகை மாற்றங்களை அடைந்துள்ளது என்பதைக் கவனிக்கவேண்டும். கூட்டுக் குடும்பத்தில் வாழ்வதில் சில ஆதாயங்கள் இருக்கிறது. ஆனாலும் அதில் பல குறைகளும் இருக்கத் தான் செய்கிறது.

### நன்மைகள் இருந்தாலும் குறைகளே அதிகம்

கூட்டு குடும்பம் என்று வந்து விட்டால் வீட்டின் மூத்தவரே அந்த குடும்பத்தின் தலைவராக இருப்பார். அவர் வயதானவராகவும் கண்டிப்பு தன்மையுடனும் விளங்குவார். இவ்வகை குடும்ப அமைப்பில் தான் ஆச்சாரமும் பழைமையான கலாசாரங்களும் கடைப்பிடிக்கப்படுகின்றன. இது அங்கு [illegible] மனநிலையை உண்டாக்கிவிடும்.

கூட்டு குடும்பத்தில் ஏற்படும் பிரச்சனைகளில் முக்கியமான ஒன்றாக இது விளங்குகிறது. எப்போதுமே குடும்ப உறுப்பினர்கள் தான் குடும்ப தலைவருக்காக விட்டு கொடுத்து வாழ வேண்டியிருக்கும். கூட்டு குடும்பத்தில் ஏற்படும் பிரச்சனைகளில் பெரும்பாலும் பாதிப்படைவது அங்குள்ள பெண்களே.

### அதிகம் பாதிக்கப்படுவது பெண்களே

அந்தக் குடும்ப அமைப்பில் பொதுவாக பெண்கள் எல்லாம் அடுப்பங்கரையில் அடைபட்டு கிடப்பதால் அவர்களின் திறமைகள் எல்லாம் வீணாய்ப் போகும். இப்படிப்பட்ட பிரச்சினைகளை அவர்கள் சந்திப்பதால் பொதுவாக கூட்டுக் குடும்பத்தில் வசிக் கும் பெண்கள் அந்தச் சூழலை விட்டு வெளியேற விரும்புவதுண்டு. மேலும் கூட்டுக் குடும்ப சூழலோடு ஒத்துப்போய் வாழ்வதிலும் பெண்கள் சிரமப்படுவார்கள். இள வயது தம்பதிகளுக்கு உள்ள பெரிய பிரச்சனையே கூட்டு குடும்பத்தில் அவர்களுக்கு போதிய தனிமை கிடைப்பதில்லை. உங்களுக்கு உங்கள் மனைவி அல்லது குழந்தைகளுடன் தனிமையில் நேரத்தை போக்கிட வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை.

### பொருளாதாரப் பாதிப்பு ஏற்படும்

கூட்டுக் குடும்பத்தில் எப்போதுமே பல பேருடன் சேர்ந்து இருப்பதால் அன்பு என்பது எப்போதுமே வெளிப்படுத்த முடியாத ஒன்றாகும். கூட்டுக் குடும்பத்தில் இருந்தாலும் கூட உங்கள் மனைவி மற்றும் குழந்தைகளுடன் கொஞ்ச நேரமாவது செலவிடத் தவற விடாதீர்கள். கூட்டுக் குடும்பத்தில் குடும்பத்தின் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்துவதில் அனைவருக்குமே பொறுப்பு உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** முன்கோபம், பதற்றம் விலகும். எடுத்த காரியங்களை முடிக்கமுடியாமல் அவதிப்பட்ட நிலை மாறும். சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.

**இடபம்:** மனதில் பட்டதை பளிச்சென்று பேசி அனைவரையும் ஆச்சரியப்படுத்துவீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும்.

**மிதுனம்:** உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.

**கடகம்:** விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் நிறை, குறைகளை எடுத்துச் சொன்னால் கோபப்படாதீர்கள். யாரையும் பரிந்துரை செய்ய வேண்டாம்.

**சிங்கம்:** அடிமனதில் இருந்த பயம் விலகும். துணிச்சலுடன் சில முடிவுகளை எடுப்பீர்கள். அலைச்சல் தந்த வேலைகளை உடனே முடிப்பீர்கள். வெளிவட்டாரம் மகிழ்ச்சி தரும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள்.

**கன்னி:** உங்களின் குறிக்கோளை எட்டிப்பிடிக்க முயற்சிப்பீர்கள். அரசியல்வாதிகளின் சந்திப்பு கிடைக்கும். வேற்று மதத்தினரால் உதவி கிடைக்கும்.

**துலாம்:** அதிரடித் திட்டங்களைத் தீட்டுவீர்கள். உங்களைத் தேடிவந்து சிலர் உதவி கேட்பார்கள். ஆன்மிகவாதிகளின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். வெளியூர்ப் பயணங்களால் ஆதாயம் உண்டு.

**விருச்சிகம்:** அதிகாரபூர்வமாக செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள்.

**தனுசு:** உத்தியோகத்தில் சகஊழியர்களின் ஆதரவு கிட்டும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். தாய்வழி உறவினர்களால் இருந்துவந்த மனக்கசப்புகள் விலகும்.

**மகரம்:** தைரியமான முடிவுகளை எடுத்து வெற்றி காண்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள்.

**கும்பம்:** சாதாரணமாகப் பேசப் போய் சண்டையில் முடியும். சிறுசிறு ஏமாற்றங்கள் வரக்கூடும். யாரையும் நம்பி பொறுப்புகளை ஒப்படைக்காதீர்கள். உத்தியோகத்தில் ஈகோ அதிகரிக்கும்.

**மீனம்:** எடுத்த வேலைகளை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். உறவினர்களுடன் மனத்தாங்கல் வரும். வியாபாரத்தில் வேலையாள்களின் ஒத்துழைப்பு குறையும். உத்தியோகத்தில் அதிகாரிகளை எதிர்த்துப் பேச வேண்டாம்.

தருவது வித்தியா

# பக்தி யோகம்



## விவேகானந்தரின் சிந்தனைகளிலிருந்து


பக்தி அல்லது வழிபாடு அல்லது ஏதேனும் ஒரு வழியில் அன்பு செய்தல் மனிதனுக்கு மிக எளிய, மிக இனிய, மிகவும் இயல்பான முறையாகும். இந்தப் பிரபஞ்சத்துக்குரிய இயல்பான நிலை கவர்ச்சியே ; உறுதியாக அதற்குப் பின் நிகழ்வது, பிரிந்து போவதே. அது போலவே, மனிதனின் நெஞ்சில் ஐக்கியத்தை நோக்கித் தள்ளும் இயல்பான சக்தி அன்பே. அது தன்னளவில் துயரத் துக்குக் காரணமான ஒன்றாயினும் தகுந்த விதத்தில் தகுந்த பொருளில் செலுத்தப்பட்டால் விடுதலையையும் தரவல்லது. பக்தியின் நோக்கம் இறைவனே. அன்பு செய்பவரும் அன்பை ஏற்பவரும் இன்றி, அன்பு உண்டாக முடியாது. மேலும் , நமது அன்பை ஏற்பவர் முதலில் அந்த அன்புக்குப் பதிலாக நம்மீது அன்பைச் செலுத்துபவராயிருக்க வேண்டும். ஆதலால், அன்புக் கடவுள் ஒரு வகையில் மனிதத் தன்மை உடையவராயிருக்க வேண்டும்; அவர் அன்புத் தெய்வமாதல் வேண்டும். அத்தகைய கடவுள் இருக்கிறாரா இல்லையா என்ற கேள்வியை ஒதுக்கிவிட்டாலும், நெஞ்சில் அன்புள்ளவர்களுக்கு பிரம்மம் அன்புத் தெய்வமாக, உருவக் கடவுளாக வருகிறது என்பது உண்மையே.

இறைவனை நீதிபதியாகவோ, தண்டிப்பவராகவோ, பயத்துடன் பணியப்பட வேண்டிய ஒருவராகவோ வழிபடும் முறைகள் தாழ்ந்தவையே; அவை வரவர விரிந்து உயர்ந்த முறைகளாகலாம். எனினும், அன்பு என்னும் பெயருக்குரிய தகுதி வாய்ந்தவையல்ல.

இனி, நாம் அன்பைப் பற்றிக் கூறலாம். அன்பை ஒரு முக்கோணமாக விளக்குவோம்; இந்த முக்கோணத்தின் கீழ்ப்பக்கமுள்ள முதற்கோணம் அச்சமின்மையே. பயம் உள்ளவரையிலும் அது அன்பாகாது. அன்பு, அச்சத்தை எல்லாம் ஓட்டிவிடும். குழந்தையை ஏந்திய ஒரு தாய், அதைக் காப்பாற்றுவதற்காகப் புலியையும் எதிர்த்து நிற்பாள். இரண்டாவது கோணமாவது, அன்பு ஒருபோதும் எதையும் எதிர்பாராதது, கெஞ்சாதது. மூன்றாவதாகிய உச்சிக் கோணமாவது, அன்பு ஒன்றுக்காகவே அன்பு செய்வது. அன்பைப் பெறுபவரைப் பற்றிய எண்ணமும் மறைந்துவிடும். அன்புக்காகவே அன்பு செய்ய அன்பே வழி. இது மிக உயர்ந்த தனித் தத்துவமாகும்; பரம்பொருளும் இதுவும் ஒன்றே.

# இளைஞர்கள் பயன்படுத்தும் வித்தியாசமான இணையத்தள பாஷைகள்

விடயத்தைமிகவும் சுருக்கி, ஒரு வித்தியாசமான பாஷையை உருவாக்கி பேசிக் கொண்டிருக்கின்றனர்.




இன்றைய தலைமுறையினர் சமூக வலைத் தளங்களில் ஒருசில வார்த்தைகளை சுருக்கி அடிக்கடி பயன்படுத்துகின்றனர். இத்தகைய வார்த்தைகளை பெரியோர்கள் பார்த்தால், அது என்னவென்றே புரியாது. அந்தளவில் பகிர்ந்து கொள்ளும் விடயத்தை மிகவும் சுருக்கி, ஒரு வித்தியாசமான பாஷையை உருவாக்கி பேசிக் கொண்டிருக்கின்றனர். அது மட்டுமின்றி, இப்படி வார்த்தையை சுருக்கிப் பயன் படுத்துவதால், நேரம் மீதப்படுத்தப்படுவதோடு, விரைவில் வெளிப்படுத்த முடிகிறது. இங்கு தமிழ் போல்ட் ஸ்கை இண்டர்நெட்டில் பல மில்லியன் மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் சொற்களைப் பார்ப்போம்.

### OMG

இந்த வார்த்தையை சாட் செய்யும் போது நிச்சயம் அனைவரும் பயன்படுத்துவார்கள். இதற்கு கருத்து 'ஓ மை கோட்' என்பதாகும். இதனை பெரும்பாலான இளைஞர்கள் ஆச்சரியப்பட்டால் சொல்வார்கள்.

### LOL

தாங்க முடியாதவாறு சிரிப்பு வந்தால், அதனை இந்த மாதிரி சொல்வார்கள். முக்கியமாக இந்த சொல்லானது ஒவ்வொரு உரையாடலிலும் அடிக்கடி பயன்படுத்தும் ஒரு சொல்லாகும்.

### MYOB

இதனைப் பார்த்தால் பலர் ஒன்றும் புரியாமல் தலையை சொறிய ஆரம்பிப்பார்கள். மேலும் இதனை என்னவென்று தெரிந்து கொள்ள முனைவார்கள். இதற்கு அர்த்தம் வேறொன்றும் இல்லை 'உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ' என்பதாகும்.

### ASAP

ஏதேனும் உடனே வேண்டுமானால், அதற்குப் பயன்படுத்தும் சொல் தான் இது. இந்த வார்த்தையானது பல அலுவலகங்களில் கூட இந்தச் சொல் பயன்படுத்தப்படுகிறது.

## நாளை

மார்கழி-23
செவ்வாய்க்கிழமை 07.01.2014
திதி: ஸப்தமி பி.இ.03.59 வரை
நட்சத்திரம்:
உத்தரட்டாதி பி.இ.02.42 வரை
சுபநேரம்:
11.02- 12.32 வரை
இராகுகாலம்:03.32-05.02 வரை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 4 | 3 | 9 | | | 1 | | |
| | | | | 2 | 7 | | | |
| 1 | | 6 | | 4 | | | | 9 |
| | 9 | | | | | | | |
| | 1 | 4 | 2 | | 5 | 8 | 7 | |
| 3 | | | | | 1 | | 9 | |
| 4 | | | | 8 | | 9 | | 5 |
| | | | 4 | 7 | | | | |
| | | 8 | | | 9 | 6 | 4 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டாங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 3 | 2 | 5 | 8 | 1 | 4 | 9 |
| 8 | 2 | 1 | 9 | 7 | 4 | 6 | 3 | 5 |
| 9 | 4 | 5 | 1 | 3 | 6 | 7 | 8 | 2 |
| 7 | 9 | 6 | 3 | 4 | 2 | 8 | 5 | 1 |
| 4 | 3 | 8 | 5 | 1 | 9 | 2 | 7 | 6 |
| 1 | 5 | 2 | 8 | 6 | 7 | 3 | 9 | 4 |
| 2 | 1 | 7 | 4 | 8 | 5 | 9 | 6 | 3 |
| 3 | 6 | 4 | 7 | 9 | 1 | 5 | 2 | 8 |
| 5 | 8 | 9 | 6 | 2 | 3 | 4 | 1 | 7 |

*நேற்றைய சுடோக்கின் விடை*

ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய [illegible] ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெண்கள் விடுதலை அடைய வேண்டுமானால் முதலில் மூடநம்பிக்கைகளிலிருந்துவிடுதலைபெறவேண்டும்.

# பண்பட்ட நிலத்தில்தான் நல்ல விதைகள் உருவாகும்

ஓர் ஆணுக்கு ஒரு சமையல்காரி; ஓர் ஆணின் வீட்டுக்கு ஒரு காவல்காரி; ஓர் ஆணின் குடும்பப் பெருக்கத்துக்கு ஒரு பிள்ளை விளைவிக்கும் பண்ணை; ஓர் ஆணின் கண் அழகிற்கும், மனப் புள காங்கிதத்திற்கும் ஓர் அழகிய அலங்கரிக்கப்பட்ட பொம்மை என்பதல்லாமல் பெண்கள் பெரிதும் எதற்குப் பயன்படுகிறார்கள், பயன் படுத்தப்படுகிறார்கள் என்ப தைச் சிந்தித்துப் பாருங்கள்! ஆணுக்குப் பெண் சரிநிகர் ஆகும்; அடிமையில்லை. சோறு சமைத்துப் போட்டுச் சாப்பிடும் சோற்று ஆள் அல்ல பெண்; சமமானவள்; நண்பனைப் போன்றவள் – வாழ்க்கைக்குத் துணைவி அவள்.

ரோகினி

பெண் பிள்ளைகளுக்கு சுயமாக முடிவெடுக்கும் சுதந்திரத்தைக் கொடுத்து வளர்க்க முயற்சியுங்கள் . அவர்களைக் கூண்டுக்கிளிகளைப்போல் வீட்டில் அடைத்து வைக்க முயற்சிக்காதீர்கள்! அவர்களுக்குள் உருவாகும் தற்துணிவும் ஆளுமையுமே நாளை அவர்களால் உருவாக்கப்படும் குழந்தைகளும் அதேபோல் வளர்வார்கள் என்பதை மனத்தில் கொள்ளுங்கள்.

வளம் செய்யப்பட்ட மண்ணில் எப்படி நல்ல நெல்மணிகள் தோன்றுமோ, அது போலவே சீர்திருத்த மனம் படைத்த அறிவுள்ள பெண்களிடம் இருந்துதான் சீர்திருத்த அறிவுள்ள செம்மல்கள் தோன்றக்கூடும் என்பதைத் தாய்மார்கள் உணர்ந்து, முதலில் தம்மைச் செம்மைப் படுத்திக்கொள்ளட்டும். வெறும் சமையல்காரிகளாகவும், கட்டிலறைப் போகப் பொருளாகவும், காட்சிப் பொருள்களாகவும் மட்டுமே இருப்பதில் எந்தப் பயனும் இல்லை என்பதைப் பெண்கள் உணர்ந்து கொள்ளட்டும்!

பெண்கள் விடுதலை அடைய வேண்டுமானால் முதலில் மூடநம்பிக்கைகளிலிருந்து விடுதலை பெற வேண்டும்.

அறிவுள்ள பெண்கள் சிலர் பதவி மோகங் கொண்டு அல்லலுறுகிறார்கள். சிலர் தம் புருஷர்களிடம் மாட்டிக் கொண்டு அல்லல்படுகிறார்கள்; விரைவில் இவற்றில் இருந்து பெண்கள் விடுதலை பெற்று, சமூகத் தொண்டாற்ற முன் வரவேண்டும்.

நம் வீட்டு நாய்களையே எடுத்துக் கொள்வோம். சில நாட்கள் விடாப்பிடியாகக் கட்டிப் போட்டு வைத்திருந்து பிறகு அவிழ்த்து விட்டால், காரணமின்றியே சந்தோஷத்தால் இங்கே ஓடும், அங்கே ஓடும்; குதிக்கும்; ஒரு நிமிஷங் கூடச் சும்மா இருக்காது. கட்டு ஒழிந்ததில் அதற்குள்ள ஆனந்தம் அவ்வளவு! இதுதான் இயற்கை. எனவே, நம் பெண்களை உலகத்தினின்றும் மறைத்து வைப்பதும், அவர்களை உலக ஞானத்தை அடையவிடாமல் தடுத்து வைப்பதும் மிக மிகக் கேடானதாகும்.

ஓர் ஆணுக்கு ஒரு சமையல்காரி; ஓர் ஆணின் வீட்டுக்கு ஒரு காவல்காரி; ஓர் ஆணின் குடும்பப் பெருக்கத்துக்கு ஒரு பிள்ளை விளைவிக்கும் பண்ணை; ஓர் ஆணின் கண் அழகுக்கும், மனப் புளகாங்கிதத்திற்கும் ஓர் அழகிய அலங்கரிக்கப்பட்ட பொம்மை என்பதல்லாமல் பெண்கள் பெரிதும் எதற்குப் பயன்படுகிறார்கள், பயன்படுத்தப்படுகிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்!

ஆணுக்குப் பெண் சரிநிகர் ஆகும்; அடிமையில்லை. சோறு சமைத்துப் போட்டுச் சாப்பிடும் சோற்று ஆள் அல்ல பெண்; சமமானவள்; நண்பனைப் போன்றவள் - வாழ்க்கைக்குத் துணைவி அவள். இருவருக்கும் உரிமை ஒன்றே. தகப்பன் சொத்தில் ஆணுக்குப் போலவே பெண்ணுக்கும் சரி பங்கு உண்டு. அவர்கள் பதவியும் வகிக்கலாம். அவர்களின் பதவிக் குறைக்கக் காரணம் அவர்களைப் பக்குவப்படுத்தாததுதான். அவர்களுக்கு நல்ல அறிவையும், நல்ல பழக்க வழக்கங்களையும் அளிக்க வேண்டும். அதற்கு மூட நம்பிக்கையை அகற்ற வேண்டும்.

அன்றியும் ஆண்கள், பெண்களின் விடுதலைக்குப் பாடுபடுவதால் பெண்களின் அடிமைத்தனம் வளருவதுடன், பெண்கள் என்றும் விடுதலை பெற முடியாத கட்டுப்பாடுகள் பலப்பட்டுக் கொண்டு வருகின்றன. பெண்களுக்கு மதிப்புக் கொடுப்பதாகவும், பெண்கள் விடுதலைக்காகப் பாடுபடுவதாகவும் ஆண்கள் காட்டிக் கொள்வதெல்லாம் பெண்களை ஏமாற்றுவதற்குச் செய்யும் சூழ்ச்சியே ஒழிய வேறல்ல. எங்காவது பூனைகளால் எலிக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது நரிகளால் ஆடு கோழிகளுக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது முதலாளிகளால் தொழிலாளிகளுக்கு விடுதலை உண்டாகுமா? என்பதை யோசித்தால் இதன் உண்மை விளங்கும். அப்படி ஒருகால் ஏதாவது ஒரு சமயம் மேற்படி விடயங்களில் விடுதலை உண்டாகி விட்டாலும் கூட, ஆண்களால் பெண்களுக்கு விடுதலை கிடைக்கவே கிடைக்காது என்பதை மாத்திரம் உறுதியாய் நம்பலாம்.

# சலுகை மட்டும் வாழ்க்கையில்லை


இன்றைய காலகட்டத்தில் பெண்கள் வெகுவாக முன்னேறி விட்டார்கள்தான். பெண்களின் பங்கு என்பது உலகில் மிக முக்கியமானது. அவர்கள் இல்லாமல் ஆண்களால் பெரிதாக எதையும் சாதித்து விட முடியாது.

உண்மையில் ஒரு ஆணை விட ஒரு பெண்ணால்தான் ஒரு வியாபார ஸ்தலத்தையோ, அல்லது ஒரு பெரிய நிறுவனத்தையோ கூட்டாகக் கொண்டு நடத்தி கூடுதலாக வெற்றி பெற வைக்க முடியும்.

ஒரு விடயத்தைச் சொன்னால் அதைக் கிரகித்து அதற்குப் பதில் சொல்லும் தன்மை ஆண்களின் மூளையில் ஒரு பங்கு என்றால் அதைக் கிரகித்து பதில் சொல்லும் தன்மை பெண்களின் மூளையில் ஆறு பங்கு. இவைகள் ஆய்வாளர்களின் கண்டு பிடிப்புகள் ஒரு ஆணின் மூளை ஒரு பெண்ணின்; மூளையை விட 130 கிராம் நிறை அதிகமானது.

ஆனால் இரு மூளைகளினதும் செயற்பாடுகள் - ஆதிகாலத்திலிருந்து இன்றைக்கு வரைக்குமான சூழ்நிலைகளுக்கும் வாழ்க்கை முறைகளுக்குமேற்ப இசைவாக்கம் பெற்று வெவ்வேறு வழிகளில் செயற்படுகின்றன.

இங்கு ஆண் உசத்தி என்றோ பெண் உசத்தி என்றோ எதுவும் இல்லை.முன்னர் பெண்கள் வீட்டுக்குள் முடங்க வேண்டியதற்கு காரணங்கள் இருந்தன. இன்று வெளியே சென்றாலும் பெண்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள முடியும் என்று சில பெண்கள் சிந்திக்கவும் தவறவில்லை. சிந்திக்கத் தொடங்கிய இப்பெண்களின் விழிப்பு நிலையே இன்று சில ஆண்களுக்குப் பிரச்சனையாக இருக்கிறது. பெண்களிடம் ஏற்பட்ட இந்த மாற்றத்தை ஆண்களின் மூளை ஏற்றுக் கொள்ள முடியாமல் திண்டாடுகிறது. இந்த உண்மைக் காரணங்களை ஆண் பெண் இருபாலாரும் உணர்ந்து செயற்படும் பட்சத்தில் இந்தப் பெண்ணடிமை, பெண்அடக்கு முறை, பெண்ணைஇரண்டாந் தரப் பிரஜையாக எண்ணும் தன்மை எல்லாமே அர்த்தமற்ற செயல்கள் என்பது நன்கு புலப்படும். உண் மையில் பெண்ணுக்கு இன்னும் முழுமையான விடுதலைகிடைக்க வில்லை. வெறும் சலுகை மட்டும் வாழ்க்கையில்லை என்பதை பெண்கள் உணரத் தொடங்கிவிட்டனர்.



# ஆளுமை தரும் அடையாளம்!

சு. சாரங்கி

ஆளுமை என்பது ஒருவரது மனப்பான்மையைப் பொறுத்து அமையும். ஒரு தனிமனிதனின் அகம், புறம் ஆகியவற்றின் வெளிப்பாடே ஆளுமையாகும். அகத்தின் வெளிப்பாடாக உணரப்படும் ஆளுமை என்பது உள்ளத்து அக உயர்வு எண்ணங்கள், ஆசை, மனதின் எழுச்சி, சிந்தனை, கற்பனைத்திறன், அன்பு, கோபம், மகிழ்ச்சி, சோகம், கனவு, இரக்கம், ஏக்கம், பொறாமை போன்றவையாகும். புறத்தின் வெளிப்பாடாக உணரப்படும் ஆளுமையாவது பிறருடன் பழகும் முறை, அன்பு செலுத்துதல், உண்ணுதல், ஆடை அணிதல், பிறருக்கு உதவும் மனப்பான்மை போன் றவையாகும்.

இவ்வாளுமைப் பண்புகளே ஒருவரின் தனித் தன்மையை வெளிப்படுத்துவதாகும். ஆளுமை என்பது ஒருவருடைய சிறப்பு, மேன்மை, மதிப்பு, புகழ், வெற்றி ஆகியவற்றை உள்ளடக்கிய தொகுப்பாகும். சிறப்பு என்பது ஒருவருடைய நற்பண்பாகும். மேன்மை என்பது இந்த நற்பண்புகளால் கிடைக்கும் உயர்வாகும்.

மதிப்பு என்பது இவ்வுயர்வால் சமூகத்தில் கிடைக்கப் பெறும் அங்கீகாரமாகும். அங்கீகாரத்தில் கிடைக்கப் பெறுவது வெற்றியாகும். இத்தகைய கூறுகள் அனைத்தும் ஆளுமையின் வெளிப்பாட்டுக் கூறுகளாகும். ஆற்றல் மிக்க பெண்களே ! இப்படி உங்களது ஆளுமைப் பண்புகளை வளர்த்துக் கொள்ளுங்கள்.

இந்தப் பண்புகள்தான் உங்களை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் செல்லும். ஆளுமை பற்றிய அடையாளங்கள் இன்னும் நிரம்ப இருக்கின்றன. உடல் தோற்றம், முகத்தோற்றம், நடை, உடை, பாவனை இவை போன்ற ஒட்டு மொத்த வடிவமாகும். ஆளுமை ஒருவர் மற்றொருவருக்கு எப்படித் தோற்றமளிக்கிறார் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது.

ஆளுமை என்பது ஒரு செயல். சமூகக் காரணிகளாலும் உருவாகிறது. பழக்க வழக்கங்கள், அறநெறிப் பண்புகள் மற்றும் சமூக நிறுவனத்திடம் மனிதன் கொண்டிருக்கும் ஈடுபாடு, பங்களிப்பிற்கேற்ப ஆளுமை அமையும். இனிய இளைஞர்களே ! உங்களுக்குள் இருக்கும் படைப்பின் ஆளுமை வெளிப் படுகின்ற பருவம் இந்தப் பருவம். எந்த ஓர் உழைப்புக்கும் ஒரு கருவி தேவைப்படுகிறது. கரும்பை வெட்ட ஒரு கத்தி, களையெடுக்க ஒரு களைக் குச்சி, கதிர் அறுக்க ஒரு பண்ணரிவாள், அப்படித்தான், எழுத ஒரு பேனா. சொற்களை கருவியாகக் கொண்டு உழைக்கிற உழைப்பு படைப்பு.

சொல்லின் ததும்பல் நேயத்தை வளர்க்கும். நேயம் பிறரது நெஞ்சை நெகிழச்செய்யும். நந்தவனத்தில் மெல்ல நடக்கும் போது நம் மீது பரவும் பூமணமும் புன்னகைக்கும் பூக்களும் தரும் நலனை நல்ல படைப்புகள் தருகின்றன. உங்கள் மனதை இதில் உலவ விடுங்கள்.

இப்படி எந்தக் கருவியை எப்படி எப்படிக் கையாளுவது என்பதில் தான் ஆளுமை அடங்கியிருக்கின்றது. உங்களிடம் வெளிப்படும் சிந்தனை, செயல், எண்ணம், மொழி, மனம், ஒழுக்கம், சமூக உறவு போன்றவைதான் உங்களுடைய ஆளுமைப் பண்புகளையும் வெளிப்படுத்தும். பிறருக்கு உங்களை அடையாளப்படுத்தும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு உடைத்து நகை, பணம் திருட்டு

வலி. வடக்கு, ஜன. 6

பட்டப்பகல் வேளையில் வீட்டை உடைத்து உட் புகுந்த திருடர்கள் சுமார் 6 லட்சத்து 68 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட தங்கநகைகள், பணம் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளதாக தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

கணவன், மனைவி தொழிலுக்குச் சென்றிருந்த வேளை இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளதாக பன்னாலையைச் சேர்ந்த ஒருவர் பொலிஸில் முறையிட்டுள்ளார்.

இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை. (வ-86)

---

## 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 22.08.1937

இறப்பு 06.01.1994

**அமரர் சங்கரப்பிள்ளை நமசிவாயம்**

(முன்னாள் உரிமையாளர் அம்பிகா டிஸ்பென்சரி)

எங்கள் குடும்பத் தலைவரே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எங்கள் குல தெய்வமாகிய
நுணுவில் சிதம்பர விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

(c/42053)(45.3.6)

குடும்பத்தினர்.

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்

**மார்க்கண்டு ஞானசேகரம்**



மண்ணில் 10.03.1957

விண்ணில் 07.12.2013

வஞ்சனை இல்லா உள்ளம்
யாவர்க்கும் உதவிடும் குணம்
வேசமில்லா நேசந் தந்த ஞானமே
பாசக்கயிறு வீசிப் பறித்துச் சென்றதேனோ?
ஊருக்கொரு பெருவிருட்சம் உம் நிழலில் நாம் ஆற
கடமை முடிந்ததுவோ? காலைப் பொழுதில்
எம்மைக் கலங்க வைத்த மாயமென்னை?
விழி கசிந்து இங்கே வேதனையில் தவிக்கிறோமே
எங்கள் ஞானமே எமைவிட்டு ஏன் பிரிந்தீர்?
காலன் அழைத்தானோ? யாவும்
கனவாகிப் போனதுவே...

எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு உடன்வந்து ஆறுதல் கூறியும் பல வழிகளிலும் உதவிகள் பல புரிந்தும் வெளிநாட்டிலிருந்தும், உள்நாட்டிலிருந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோர்க்கும் மலர்வளையம் வைத்தோர்க்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவர்க்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உயிர் உள்ளவரை
உம் நினைவில் நாம் இருப்போம்

கண்டி றோட்,
கச்சேரி.

மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்.

(42000) (7.6.3)

---

## 20ஆம் ஆண்டு நினைவு நாள்

வருடங்கள் பல சென்றாலும்
உங்கள் நினைவுகளுடன் என்றும் வணிகர்கள்

அமரர்

**சங்கரப்பிள்ளை நமசிவாயம்**

(முன்னாள் தலைவர் – சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்)

(முன்னாள் உரிமையாளர் - அம்பிகா பார்மசி சாவகச்சேரி)

மண்ணில் 22.08.1937

விண்ணில் 06.01.1994



மன்றச் சேவைக்கென வந்து அகால அமரத்துவமடைந்த அமரரின் நினைவுநாளும் நினைவுக்கூட்டமும் இன்று (06.01.2014) திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு மன்ற அலுவலகத்தில் உள்ள அமரரின் நினைவு மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் இந்நிகழ்வில் அங்கத்தவர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்**

(C/7623) (7.6.3)

---

## பெருந் திருவிழா

காரைநகர் பயிரிக்கூடல், சுப்பிரமணிய சுவாமி ஆலயப் பெருந்திருவிழா நாளை செவ்வாய்க் கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ந)

♦♦♦

ஸ்ரீ நாக கன்னியம்மாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 14 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இறுதி நாள் தைப் பொங்கல் பெருவிழாவும், தீ மிதிப்பு வைபவமும் நடைபெறும். (ந-29)

---

## நூற்றாண்டு விழாவும் உருவச்சிலை திறப்பும்

யாழ்ப்பாணம், ஜன. 6

புங்குடுதீவு சித்தி விநாயகர் மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இதன்போது பாடசாலையின் ஸ்தாபகர் வேலாயுதர் விசுவலிங்கத்தின் உருவச்சிலை திரை நீக்கம் செய்யப்படவுள்ளது. (ந-14)

---

## 36 கலைஞர்களுக்கு உயர் விருதுகள்

யாழ்ப்பாணம், ஜன. 6

வலி. மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட 36 கலைஞர்கள் கௌரவ உயர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இசை, நடனம், வயலின், பாடல், நாடகம், கவி, இலக்கியம், எழுத்துத்துறை மற்றும் ஏனைய துறை கலைஞர்கள் 36 பேர் உள்ளூராட்சி வார இறுதி பெருவிழாவில் வைத்து கௌரவிக்கப்பட்டதாக சபைத் தவிசாளர் திருமதி நா. ஐங்கரன் தெரிவித்தார்.

இதேவேளை வலி. மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட 75 சனசமூக நிலையங்களில் முதல் 10 சனசமூக நிலையங்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

இவற்றில் தொல்புரம் விக்கினேஸ்வரா ச.ச. நிலையம், பண்ணாகம் ஸ்ரீமுருகன் ச.ச. நிலையம், வட்டு. நேருஜி சனசமூக நிலையம் என்பன சிறப்பு விருதினைப் பெற்றுள்ளன. (ந-50)

---

## இலக்கியக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 6

யாழ். இலக்கியக் குவியத்தின் ஏற்பாட்டில் சமகால இலக்கியம் பற்றிய கலந்துரையாடல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். நகர் இல. 128 டேவிட் வீதியிலுள்ள தமிழ்த் தூது அழகியற் கல்லூரியில் இந்தக் கலந்துரையாடல் நடைபெறும். (ந-10)

---

## ஓட்டோ சங்கத்தின் கூட்டம்

வவுனியா, ஜன. 6

வவுனியா மாவட்ட ஓட்டோ உரிமையாளர் சங்கத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வவுனியா கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற இந்த ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் வவுனியா மாவட்டத்தில் உள்ள அனைத்து ஓட்டோ உரிமையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வவுனியா ஓட்டோ உரிமையாளர் சங்கத் தலைவர் சி. ரவீந்திரன் தெரிவித்துள்ளார். (க-421)

---

## பாராட்டு

தொண்டமானாறு சந்நிதி முருகன் மற்றும் கதிர்காமக் கந்தன் மீதான அருட் பாடல்களை பிரான்பற்றைச் சேர்ந்த க. தெய்வேந்திரம் பாடியுள்ளார். சுமார் 240 இற்கு மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளதுடன் இதற்காக கலாபூஷணம் விருது பெற்றுள்ளார்.

கலைமணி எனும் கௌரவப் பட்டத்தைப் பெற்ற க. தெய்வேந்திரத்தின் சமூகத் தொண்டினை வலி. தென்மேற்கு சமூக அமைப்புக்கள் பாராட்டியுள்ளன. (ந-50)

---

## கனிஷ்ட ஊழியர்களுக்கு பதவி உயர்வு

அளவெட்டி, ஜன. 6

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கனிஷ்ட ஊழியர்களாகக் கடமையாற்றிய 4 பேருக்கு பதவி உயர்வு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அந்த நால்வரும் விடுதிக் காப்பாளர், ஆய்வுகூட உதவியாளர், தையல் மாது, குழாய் பொருத்துநர் ஆகிய பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் வழங்கப்பட்டுள்ளன. (ந-14-36)

---

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**ஞானப்பிரகாசம் சந்தியாப்பிள்ளை**



அன்னை மடியில் 18 ★ 04 ★ 1928

ஆண்டவன் மடியில் 06 ★ 01 ★ 2009

அகல் விளக்காய் ஒளி தந்து
ஆலமரம் போல் தழைத்தோங்கி
இகமதில் செழிப்புடன் வாழ்வதற்கு
அன்பின் வழிகாட்டிய எம் தெய்வத்திற்கு
ஐந்தாண்டு நிறைவதனில் அஞ்சலிகள் பல

என்றென்றும் உங்கள் நினைவுகளில்...

புலோலி.

(41995)(3.6.4)

குடும்பத்தினர்.

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 12-08-1944

மறைவு 07-12-2013



அமரர் **குணேஸ்வரி கனகசபாபதி**

நாள்கள் முப்பத்தொன்று சென்றிடினும்
மறைந்திடுமா உன் நினைவு
பரிதவிக்குதம்மா எம் நெஞ்சம்
உன் புன் சிரிப்பைக் காண
விழியோரக் கண்ணீருடன்
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

42, திருமகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்

(41998)

---

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 23.05.1941



இறப்பு 21.12.2001

அமரர் **பொன்னம்பலம் விஜயரட்ணம்**

(முன்னாள் சாலைப்பரிசோதகர் - இ.போ.ச.)

திதி: 06.01.2014

பன்னிரண்டு ஆண்டுகள் கடந்தாலும்
என்றும் எம் இதயத்தில் வாழும்
அப்பாவுக்கு எமது அஞ்சலிகள்

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

பிரிவால் வாடும்: மனைவி, மக்கள், மருமக்கள், பேரன்மார்.

(40786)(45.3.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் கல்லூரியின் புதிய அதிபரை

# அகமகிழ்ந்து வரவேற்கின்றோம்

welcome with pleasure



## ஆசீர்வாதம் பெற்ற அடியான்

190 வருட புகழ்மிக்க வரலாற் றைக்கொண்ட யாழ்ப்பாணக் கல்லூரியின் பதினேழாவது அதிபர் பொறுப்பினை ஏற்கவுள்ள அருட்திரு கலாநிதி டேவிட் சதானந்தன் சொலமன் அவர்களை வாழ்த்தி ஆசிவழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி யடைகிறேன்.

உயர்கல்வித்தகைமை, சமூகத்துடனான தொடர்பு மற்றும் ஆழமான ஆன்மீகம் பொருந்திய இவரைக் கல்லூரி ஆளுநர்சபை இப்பெரிய பொறுப்பை ஏற்கும்படி பணித்துள்ளமை சிறப்பானதாகும். பல பொறுப்புக்களை ஏற்றவராகப் பல்வேறு துறைகளில் தன்னுடைய தாலந்துக்களை வெளிப்படுத்தி ஆசிரிய, மாணவ மற்றும் சமூகத்தினதும் நன்மதிப்பைப் பெற்ற அடியான் நேர்மையும், நீதியும், ஒருங்கிசைவும் நிறைந்தவராக இப்பொறுப்பினை நிறைவேற்ற எல்லாம்வல்ல இறைவன் அனைத்து அருள் வரங்களையும் பொழிந்தருள இறை வேண்டல்செய்து யாழ்ப்பாணக் கல்லூரியின் சிறப்பு இன்னமும் வளர்க என வாழ்த்துகிறேன்.

**பேரருட்திரு கலாநிதி டானியல் எஸ். தியாகராஜா**
**பேராயர், தென் இந்திய திருச்சபை-யாழ் பேராலயம்**
**தலைவர், ஆளுநர் சபை**
**மேலாளர், யாழ்ப்பாணக் கல்லூரி**

## Man of Action with divine blessing



I am happy to greet the Rev. Dr D.S. Solomon on behalf of the Board for Uduvil Girls' College when he is installed as Principal of Jaffna College, Vaddukoddai. The Rev. Solomon has been on the staff of Jaffna College since 1987 and has held many positions such as Chaplain and Vice principal prior to this significant responsibility. His training in and exposure to the field of counseling will certainly strengthen his leadership. I am happy to congratulate him when he takes over the reign as seventeenth principal. May the God almighty grant him divine blessings for him to discharge his duties with much dedication and commitment for the cause of education and the needs of the community at large.

**Dr Mrs. Thayalini Thiagarajah**
**Manager, Uduvil Girls' College**



## இறையாசி வேண்டுகின்றேன்

புகழ்பூத்த யாழ்ப்பாணக் கல்லூரியின் புதிய அதிபர் பொறுப்பை ஏற்கும் வண.கலாநிதி டேவிட் சதானந்தன் சொலமன் அவர்களை வாழ்த்தி நிற்பதில் பெருமை அடைகின்றேன். இப்பெரிய பொறுப்பை நேர்மையாகவும் சமூக நோக்குடனும் முன்னெடுத்துச் செல்ல இறை ஆசி வேண்டி நிற்கின்றேன்.

**க.செல்வராசா J.P.**
**கல்லூரி ஆளுநர்சபை**
**பழைய மாணவர் சங்கப் பிரதிநிதி.**

welcome with pleasure

## பணி சிறக்கட்டும்

இலங்கைத் திருநாட்டில் நீண்ட வரலாற்றைக் கொண்ட யாழ்ப்பாணக் கல்லூரியின் புதிய அதிபராகப் பணிப் பொறுப்பேற்கும் வண. கலாநிதி D.S. சொலமன் அவர்களை ''வட்ட மேசைச்'' சார்பாக வாழ்த்துவதில் பேருவகை கொள்கின்றேன்.

வணக்கத்துக்குரிய சொலமன் எம்முடன் கல்லூரியில் ஆசிரியராக, கனிஷ்ட உப அதிபராக, உப அதிபராக பணி புரிந்து இப்போது அதிபராக நியமிக்கப்பட்டிருப்பது மனமகிழ்வுக் குரிய விடயமாகும். அவர் பணி சிறக்க இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

**T. சிவசண்முகநாதன்**
**தலைவர் வட்டமேசை,**
**யாழ்ப்பாணக் கல்லூரி.**



## Rev. Dr. David Sathananthan Solomon

**B.A., Dip. in Ed., M.Ed., Cert. in Counselling., D.Min**

**Education:**


| | |
|---|---|
| BA | - 1986 |
| PG Dip. in Ed | - 1992 |
| M.Ed | - 2007 |
| D. Min | - 2013 |

**Service : started as a teacher since June 1987 to date**

## Greetings from the principal emeritus Mr. G Rajanayagam



The appointment of Rev. Dr. D.S. Solomon as principal of Jaffna College is Gods choice for Jaffna College just as King Solomon was elected as king of the Isralites. Jaffna College is a place where the name of Jesus Christ is glorified. It is the prime responsibility of the head of the institution to bear witness to Jesus Christ as the light of life. He should exuberate Christian qualities and values to the students, parents, teachers and to the society. This is what the earlier missionaries envisaged as the motto of Jaffna College. They have lived and sacrificed their lives for the achievement of this purpose. Christian morals and qualities such as love, peace, grace, humility, forgiveness, and mercy should be the qualities of leadership. Rev. Dr. D S Solomon's appointment is more appropriate to achieve this purpose. May God bless and guide him in the path of righteousness.



## Another Milestone of the College

Today marks another milestone in the history of Jaffna College as yet another Principal takes his seat as the head of the College, to steer it through another period of its life. Another fact to note is that the College once again welcomes a clergyman – Rev. Dr. D. S. Solomon as its principal. This particularly takes our thoughts to Jaffna College under its Pioneer principal, Rev. Dr. Daniel Poor, who belonged to the first band of missionaries who arrived in Jaffna as early as 1816. Today we on this momentous occasion also ring to mind the glorious heritage of Jaffna College and its rich legacy which we have inherited and extend our sincere wishes to its new principal, Rev. Dr. Solomon as he assumes duties as principal of the College.

May his period of service at Jaffna College be a blessing to many.

**Shiranee Mills,**
**Principal, Uduvil Girls College.**

welcome with pleasure



## ஆசிச் செய்தி

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் புதிய அதிபர் பொறுப்பை ஏற்கும் வண.கலாநிதி டி.எஸ். சொலமன் அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ் வடைகின்றேன். பாடசாலைகளில் வெள்ளி விழாக்கண்டு தன் பணியைத் தொடர்ந்து மேற்கொண்டு வரும் இவரை பொதுநல நோக்கிலும், சமூகப் பார்வையிலும், கல்லூரியை மேம்படுத்த எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்**
**ஆதீன குருமுதல்வர்**
**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்**

## கல்லூரியின் விழுமிய பாதுகாவலராக வருக வருக என வரவேற்கின்றேன்

இலங்கைத் திருநாட்டின் யாழ் குடாநாட்டில் அமைந்துள்ள அமெரிக்கன் மிஷன்மாரினால் ஆரம்பிக்கப் பட்ட யாழ்ப்பாணக் கல்லூரியின் சுதேச அதிபர்கள் வரிசையில் 8ஆவது அதிபராக பொறுப்பேற்கும் அதிபரை வாழ்த்தி வரவேற்பதில் அகமகிழ்வடைகின்றேன். இப்பாரம்பரியம் மிக்க இக்கல்லூரியின் விழுமியங்கள், பண்பாட்டுக் கோலங்கள், கலாசார முறைமைகள் பேணிப்பாதுகாத்து இப்பதவியை சிறப்புறச் செய்ய இறை ஆசி வேண்டுகின்றேன்.

**கலாநிதி நோயல் A. விமலேந்திரன்**
**முன்னாள் அதிபர்**
**யாழ்ப்பாணக் கல்லூரி**



## உயர் பாரம்பரியம் இன்னும் மெருகுற வாழ்த்து

தமிழ் சமூகத்தின் உயர்கல்விப் பாரம்பரியத்துக்கு அடித்தளமாய் அமைந்த நிறுவனங்களுள் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு முதன்மை இடமுண்டு. அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தில் காலத்தின் தேவைக்கேற்ப மாணவ சமூகத்தை நெறிப் படுத்தி, பற்பல சாதனைகளைப் படைத்து சான்றோர்கள் பலரை உருவாக்கிய கல்லூரியின் அதிபர்கள் வரிசையில் எட்டாவது சுதேச அதிபராகப் பணியேற்கும் அருட்திரு. கலாநிதி டி.எஸ். சொலமன் அவர்களை உளப்பூரிப்புடன் வாழ்த்துகின் றேன்.

தற்போதைய புதிய அதிபர் கல்விப்பணியில் ஏற்கெனவே தமக்குள்ள இருபத்தைந்து ஆண்டுகால முதிர்ச்சியும், அனுபவமும், திறனும்கொண்டு இப்பொறுப்பை சிறப்புடன் நிறைவேற்றி யாழ்ப்பாணக் கல்லூரியின் உயர் பாரம்பரியத்துக்கு மெருகூட்டுவார் என நாம் உறுதியாக எதிர்பார்க்க முடியும்.

**அருட்திரு ம. ஜெறோ செல்வநாயகம்**
**அதிபர், புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

## வருக முதல்வரே! வெல்க முதல்வரே!!

எங்கள் உணர்வோடும் மூச்சோடும் கலந்திருக்கும் கல்லூரித் தாயான வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் புதிய அதிபராக கடமையேற்கும் வணக்கத்துக்குரிய கலாநிதி D.S. சொலமன் அவர்களை வாழ்த்தி வரவேற்பதில் உவகையடைகின்றோம். புதிய அதிபரின் வருகை கல்லூரியை கல்வியிலும் விளையாட்டிலும் ஒழுக்கத்திலும் உயரிய நிலைக்கு எடுத்துச் செல்லும் என்று உறுதியாக நம்புகின்றோம். கல்லூரியின் மேன்மைக்காக புதிய அதிபரோடு தோளோடு தோள் நின்று உழைக்க பழைய மாணவர் சங்கம் காத்திருக்கின்றது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்து, புதிய அதிபரை வாழ்த்தி வரவேற்கின்றோம்.

**க.சுகாஷ் (சட்டத்தரணி),**
**தலைவர் பழைய மாணவர் சங்கம் யாழ்ப்பாணக் கல்லூரி.**

## புதிய அதிபரை வாழ்த்துகின்றோம்

நீண்ட கல்வி வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட எங்கள் கல்லூரியின் புதிய அதிபராக எம்மை வழி நடத்த வரும் வண.டி.எஸ். சொலமன் அவர்களை மாணவர்கள் சார்பாக வாழ்த்துகின்றோம்.

அவர் பணி சிறக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டு கின்றோம்.

**T. நிமலேந்திரா**
**தலைவர் மாணவர் ஆளுநர் சபை**

## வரவேற்கின்றேன்

ஆல் போல் தழைத்து
அறுகு போல் வேரூன்றி
அகிலமெங்கும் ஒளி பரப்பும் அன்னை
யாழ்ப்பாணக்கல்லூரியை
ஆள வரும் எங்கள் முதல்வரை
வாழ்த்தி வரவேற்கின்றேன்

**A.C. பிரான்சிஸ்**
**(உப அதிபர்)**
**யாழ்ப்பாணக் கல்லூரி**

(C/10959)(10.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனையிறவு ரயில் நிலைய பெயரில் மாற்றம் இல்லை

## இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவர் தெரிவிப்பு

கொழும்பு. ஜன.6

ஆனையிறவு ரயில் நிலையத்தின் பெயர் மாற்றப்படாது என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தன்னிடம் உறுதியளித்ததாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான பெ.இராதா கிருஷ்ணன் தெரிவித்தார்.

ஆனையிறவு ரயில் நிலையத்தின் புனர்நிர்மாண பணிகளுக்காக தெற்கு மக்கள் தமது உதவிகளை வழங்கியுள்ளார்கள்.

எனவே, ஆனையிறவு ரயில் நிலையம் என்ற பெயருக்கு அருகில் அடைப்புக் குறிக்குள் தெற்குக்கும் வடக்குக்கும் உறவுப் பாலமாக அமையும் தொனிப்பொருளில் வாசகம் ஒன்று பொறிக்கப்படும் என்றும் தன்னிடம் கூறியதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களது உரிமைகளுக்குப் பாதகம் அல்லது குந்தகம் விளைவிக்கப்பட்டால் அதற்கு நாம் ஒரு போதும் துணை போக மாட்டோம். மாறாக அரசுடன் பேச்சுகளை நடத்தி அவ்வாறான செயற்பாடுகளை தடுத்து நிறுத்துவதற்கு சகல நடவடிக்கைகளையும் எடுப்போம்.

நாம் அரசுடன் இணைந்திருக்கின்றோம் என்பதற்காக அரசு போடும் தாளத்துக்கெல்லாம் ஆடுகின்றவர்கள் என்று அர்த்தமில்லை.

எமது மக்களுக்கு சேவையாற்றுவதற்கும் அநீதியிழைக்கப்படுகின்ற பட்சத்தில் அதனை தடுத்து நிறுத்துவதற்குமே நாம் அரசுடன் இணைந்திருக்கின்றோம்.

அரசுக்கு வெளியில் இருந்து கொண்டு மக்களுக்காக குரல் கொடுக்கலாம். ஆனால், வேறெதுவும் செய்ய முடியாது எனவே தான் அரசுடன் இணைந்து மக்களது தேவைகளை உணர்ந்து நாம் சேவையாற்றி வருகின்றோம். இது ஒரு அரசியல் சாணக்கியம்.

நான் பிரதி அமைச்சராக இருந்த காலத்தில் எமது மக்களுக்கு ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகளை நேரடியாக தலையிட்டு தீர்த்து வைத்திருக்கின்றேன்.

அதேபோன்று மேலும் பல சேவைகளை செய்திருக்கின்றேன். அதனை மக்கள் நன்கு அறிவார்கள்.

இன்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் இணைந்து எனது மக்கள் சேவையைத் தொடர்ந்துள்ளேன். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்பது மக்களுக்கு நீண்ட காலமாக சேவையாற்றி வரும் மிகப் பெரிய அமைப்பாகும்.

எனவே, அதனோடு இணைந்து சேவையாற்ற கிடைத்தமை மகிழ்ச்சியளிக்கிறது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (வ)

> "-"
>
> ஆனையிறவு ரயில் நிலையம் என்ற பெயருக்கு அருகில் அடைப்புக் குறிக்குள் தெற்குக்கும் வடக்குக்கும் உறவுப் பாலமாக அமையும் தொனிப்பொருளில் வாசகம் ஒன்று பொறிக்கப்படும்.

# பிழையான தரவுகளுடன் 1 50,000 அ. அட்டைகள்

கொழும்பு, ஜன.6

நாட்டில் சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் அடையாள அட்டைகள் பிழையான தரவுகளைக் கொண்டிருக்கின்றன.

இதன்காரணமாக இந்த அடையாள அட்டைகளை கொண்டிருப்போர் வங்கிக் கடன் உட்பட்ட பல விடயங்களில் சிரமங்களை எதிர் நோக்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தமது அடையாள அட்டைகளில் தவறுகள் இருக்கும் விடயம் தெரியப்படுத்தப்படுமானால் அதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க முடியும்என்று ஆட்பதிவுத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

மனித வழுக்கள் காரணமாகவே இவ்வாறான தவறுகள் நேருகின்றன. விரைவில் அடையாள அட்டை தயாரிப்புக்கள் யாவும் கணினி மயப்படுத்தப்படும் போது இந்த தவறுகள் நீக்கப்படும் என்றும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (வ)

# தேயிலை உற்பத்தி கடந்த வருடம் அதிகரிப்பு

கொழும்பு, ஜன.6

கடந்த வருடம் ஜனவரி முதல் நவம்பர் வரையான காலப் பகுதியினுள் 30 கோடியே 90 லட்சம் கிலோ கிராம் தேயிலை உற்பத்தி செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், இது 84 லட்சம் கிலோ கிராம் அதிகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த ஆண்டு ஜனவரி முதல் செப்ரெம்பர் வரையிலான காலப் பகுதியில் இலங்கை முதலீட்டுச் சபையால் 118 புதிய முதலீட்டு திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

இந்த முதலீட்டாளர்களுடன் 200 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. (வ)

# தாதியர்கள் 10 பேர் நியமனம்

அளவெட்டி, ஜன.6

சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சால் புதிதாக வழங்கப்பட்டுள்ள நியமனத்தின் அடிப்படையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்குத் தாதிய உத்தியோகத்தர்கள் 10 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த முதலாம் திகதி வழங்கப்பட்டுள்ள நியமனத்தின் அடிப்படையில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனால் அவர்களுக்கான நியமனக்கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு நியமிக்கப்பட்டு 10 தாதிய உத்தியோகத்தர்களும் கடமைகளைப்பொறுப்பேற்றுக் கொண்டுள்ளனர். (வ-14-36)

# போலிப் பட்டப்படிப்புச் சான்றிதழ் மூலம் ஆசிரியரானவருக்கு விளக்கமறியல்

## *முறைப்பாடு கொடுத்தவர் அவரது மனைவியாம்*

கொழும்பு. ஜன.6

போலிப் பட்டப்படிப்புச் சான்றிதழைச் சமர்ப்பித்து ஆசிரிய நியமனத்தை நிரந்தரமாக்கிக் கொண்ட குற்றச்சாட்டில் ஒருவரை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நுகேகொட மேலதிக நீதிவான் திருமதி அருணி ஆட்டிகல உத்தரவிட்டுள்ளார்.

இந்த நபர் நுகேகொடயில் உள்ள பிரபல ஆண்கள் பாடசாலையில் பணி புரிந்தவர் எனவும் அவர் போலிப் பட்டப் படிப்புச் சான்றிதழை சமர்ப்பித்து தொழில் செய்வதாக அவரது மனைவியே கடிதம் மூலம் முறைப்பாடு செய்துள்ளார். இதன் அடிப்படையிலேயே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் வெள்ளவத்தைப் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

பொலிஸ் மா அதிபருக்கு இந்தப் பெண் தெரிவித்துள்ள முறைப்பாட்டில் தனக்கு 2000 ஆம் ஆண்டில் திருமணம் நடந்ததாகவும் 2008ஆம் ஆண்டு தனது கணவர் ஆசிரியத் தொழிலை நிரந்தரமாக்கிக் கொள்வதற்காக போலிப் பட்டப் படிப்புச் சான்றிதழை சமர்ப்பித்து அரசை ஏமாற்றியிருக்கிறார் எனவும் குறிப்பிட்டிருக்கிறார்.

சந்தேக நபரைப் பிணையில் விடுவிக்குமாறு அவரது சட்டத்தரணிகள் விடுத்த கோரிக்கைக்கு பொலிஸார் ஆட்சேபம் தெரிவித்ததால் அவரை எதிர்வரும் 10ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# தங்க பிரெஸ்லெட்டுடன் தலைமறைவானார் இளைஞர்

## *அதன் பெறுமதி ரூபா மூன்று லட்சம்*

மூன்றரைக் கோடி ரூபா பெறுமதியான மூன்று மாடி வீட்டை வாங்க வந்த கோடீஸ்வரர் போல நடித்த இளைஞர் ஒருவர் வீட்டிலிருந்த மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான தங்க பிரெஸ்லெட்டைச் சுருட்டிக் கொண்டு மாயமான சம்பவமொன்று பாணந்துறை பிரதேசத்தில் நடந்துள்ளது.

இந்த வீடு விற்பனைக்கு இருப்பதாக வீட்டார் பத்திரிகையில் விளம்பரம் கொடுத்திருந்தனர்.

விளம்பரம் வந்த தினமே வீட்டைப் பார்ப்பதற்கு இடைத் தரகர் (புரோக்கர்) ஒருவருடன் வந்த இந்த வாலிபன் தான் ஜனாதிபதி செயலகத்தில் வேலை செய்யும் ஒருவரது மகளைத் திருமணம் முடிக்கவிருப்பதாகவும் திருமணத்தின் பின் வசிக்க இதைப்போன்ற சொகுசு வீடொன்றை வாங்கவுள்ளதாகவும் கூறியிருக்கிறார்.

தன்னை ஒரு கோடீஸ்வரராக காட்டிக் கொண்டவர் வீட்டைச்சுற்றிப் பார்க்க வேண்டுமெனக் கேட்டதால் வீட்டுக்காரர் அதற்கு சம்மதம் தெரிவித்தனர். இந்த வாலிபனும் தரகரும் வீட்டின் அறைகளில் புகுந்து பரிசீலனை செய்வதைப் போல நடித்திருக்கின்றனர். அதற்குப் பின் அடுத்த நாள் வந்து உறுதி கூறுவதாக வீட்டுக்காரரிடம் சொல்லி விட்டு இருவரும் போய் விட்டார்கள்.

அதன்பின் எதேச்சையாக அறையொன்றுக்குள் நுழைந்த வீட்டுக்காரர் அந்த அறையிலிருந்த அலுமாரி திறந்துகிடப்பதைக் கண்டு சோதித்தபோது அதிலிருந்த மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான தங்க பிரெஸ்லெட் காணாமல் போயிருந்தது தெரியவந்தது. இந்தக் களவு சம்பந்தமாக வீட்டுக்காரர்பாணந்துறைப் பொலி ஸில் கொடுத்த முறைப்பாட்டை யடுத்து குறித்த இளைஞரும் அவருக்கு உடந்தையாக இருந்த தரகரும் கைது செய்யப்பட்டார்கள்.


# மரண அறிவித்தல்



## கந்தையா சுப்பிரமணியம்

சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும் வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் 04.01.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும், கமலாவின் (பேபி) அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி- மனோன்மணி தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சுகந்தகுமார் (சுதன்) மற்றும் சுபாஜினி (லண்டன்), உதயகுமார்(லண்டன்), சுதர்சினி, மேனகுமார்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், முரளிதரனின் (லண்டன்) மாமனாரும், றம்மியா(லண்டன்), விக்ரம் (லண்டன்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2014) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வட்டுகிழக்கு,
வட்டுக்கோட்டை.

(சி/10955) (4.6.3)

தகவல்:
மனைவி,
பிள்ளைகள், மருமகன்.



# மரண அறிவித்தல்

## செல்வி தர்மலிங்கம் மைதிலி

(கலைப்பிரிவு-(G.A.Q)-13 Batch-Jaffna)



குமுதினி அல்வாய் மத்தி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் மாம்பழம் சந்தி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் மைதிலி 04.01.2014 சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் தர்மலிங்கம்(மேகன்ரைல் பாதுகாப்பு சேவை உத்தியோகத்தர்-யாழ் பல் கலைக்கழக விவசாயபீடம்)-இளமைமலர் (வவா அன்ரி) தம்பதியரின் அன்பு மகளும், தெய்வநாதன்-மயூரி (பிரான்ஸ்), கஜன் ஆகியோரின் அன்புத் தங்கையும், சின்னராசா-அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (06.01.2014) திங்கட்கிழமை ந.ப. 12 மணிக்கு சுப்பர்மடம் மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புலோலி மேற்கு, சிமாவளை, தம்பசிட்டி,
பருத்தித்துறை. T.P:077 160 7752 (42072) (4.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் செம்மணி வீதியில் ஓடித்திரியும் 'நாய்ப்படை'யால் பயணிப்போர் சிரமம்

## அடிக்கடி விபத்துக்கள்; பலரும் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஜன.6

நல்லூர் செம்மணி வீதியில் கடந்த சில நாள்களாகக் கட்டாக் காலிநாய்களின் தொல்லை மிக மோசமாக அதிகரித்திருப்பதாக பொதுமக்கள் பலராலும் முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன.



இந்த வீதியில் அண்மைக் காலமாக யாழ்.நகர் மற்றும் நல்லூர் போன்ற பிரதேசங்களில் இருந்து கொண்டு வரப்படும் கொல்லப்பட்ட மிருகக் கழிவுகள், கோழிக்கழிவுகள் என்பன கொட்டப்படுவதனாலேயே பல இடங்களில் இருந்து வரும் நாய்கள் இங்கு நிரந்தரமாக தங்கி வீதியில் நேரகாலமின்றி அங்குமிங்குமாக ஓடித் திரிகின்றன.

இந்த நாய்களின் அட்டகாசம் காரணமாக சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் மட்டுமன்றி பாதசாரிகளும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். அடிக்கடி விபத்துக்களும் ஏற்படுகின்றன.

இந்த வீதியில் ஓடித் திரியும் ஐம்பதுக்கும் மேற்பட்ட கட்டாக்காலி நாய்கள் வீதியால் செல்வோரை கடிப்பதற்காக துரத்துகின்றன என்றும் இதனால் பயணிகள் பலரும் மாற்றுப் பாதையை பயன்படுத்துகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எனவே இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டோர் உடனடிக் கவனமெடுத்து இக் கட்டாக்காலி நாய்களை அகற்ற நடவடிக்கை எடுப்பதுடன் கொல்லப்படும் மிருகக் கழிவுகளை கொட்டுவோர் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பலராலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-288)

## குருமார்களை உருவாக்க நடவடிக்கை வேண்டும்

யாழ்ப்பாணம், ஜன.6

இன்றும் 5 வருடங்களில் குருமார்கள் இல்லாத நிலையை இந்து சமய சமூகம் எதிர்கொள்ள நேரிடும். எனவே இதற்கான மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என்று சர்வதேச இந்துக் குருமார்கள் ஒன்றியம் சுட்டிக் காட்டியுள்ளது.

அந்தணர் குடும்பங்களைச் சார்ந்தவர்கள் தமது பிள்ளைகளைக் குருகுலக் கல்வியைத் தவிர்த்து உயர்ந்த கல்விகளைக் கற்பதற்கு ஆர்வம் காட்டியுள்ளனர். இதனால் அதிகமானவர்கள் அரச உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்படுகிறார்கள்.

குருகுலக் கல்வி 9 வயதில் இருந்து கற்க வேண்டிய நிலை உள்ள போதும் பெரும்பாலானவர்கள் இதனைத் தவிர்த்து வருகின்றார்கள்.

இதன் காரணமாக இருக்கக் கூடிய குருமார்கள் நான்கைந்து ஆலயங்களில் பூசைகளை நடத்த வேண்டிய நிலை உள்ளது.

காலப் போக்கில் தற்போதுள்ள குருமார்கள் வயது முதிர்வால் குருக்கள் தொழிலைக் கைவிட்டால் பூசைகளை நடத்தக் குருமார்கள் இல்லாது போகலாம். இன்னும் 5 வருடங்களில் குருக்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது.

இதற்கு மாற்று ஏற்பாடாக இளம் குருமார்களை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர். (ந-14)

## கரணவாய் மத்தி குளக்கரை வீதி புனரமைக்கப்படுமா?

யாழ்ப்பாணம், ஜன.6

கரணவாய் மத்தி குளக்கரை வீதி நீண்ட காலமாக புனரமைப்பு இன்றி போக்குவரத்துக்கு இடையூறாகக் காணப்படுவதால் விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுவதுடன் பாதசாரிகளும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

ஒன்றரைக் கிலோ மீற்றர் நீளமான குறித்த வீதியைப் புனரமைப்புச் செய்து தருமாறு கரணவாய் மத்தி கிராம அபிவிருத்திச் சங்க மக்களால் வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட போது இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்த நிலையில் குறித்த வீதியால் பயணிக்கும் வாகனங்கள் அடிக்கடி விபத்துக்கு உள்ளாவதுடன் பாதசாரிகளும் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே, பிரதேச மக்களது போக்குவரத்து நலன் கருதி வீதியைப் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ந-14)

## ஆலயத்துக்கு தேர் அமைக்கும் பணி

சாவகச்சேரி புராதன வாரியப்பர் சிவன் ஆலயத்துக்கு 27 அடி உயரமான சித்திரத் தேர் அமைக்கப்படவுள்ளது.

அதற்கான ஏற்பாடுகள் ஆலய நிர்வாகத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தேர் நிர்மாணிப்பதற்கான கால்கோள் நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. (வ-9)

## நெஞ்சக் கதவைப் கொஞ்சம்........

செல்வ வேலாயுதம்

### சந்தைகளில் அடித்துச் சுருட்டும் தரகர் கூட்டம்

யாழ்.மாநகர எல்லையைத் தாண்டிய பிரதேச சந்தை அது. இரண்டு மூடைகளில் கோவாவைக் கொண்டு வந்தவர் தரகருடன் அல்லாடுகிறார். வாய் உண்டானால் வங்காளம் போகலாமோ என்னவோ தரகரது வாய் வல்லமைக்கு பேரம் படிந்தது. கழிவு போக நூறு கிலோவுக்கு 800 ரூபா கிடைத்தது. மூன்று மாத காலம் தோட்டத்தில் பட்டபாட்டையும் செலவையும் அவரது பெருமூச்சு வெளிப்படுத்துகிறது. இன்னொருவர் கரட் கொண்டு வந்தார். மணியான தம்புள்ள கரட் வந்திருக்கு உந்த நெருப்புக் குச்சியை ஆரும் காய்ஞ்ச சாப்பாட்டுக் கடைக்காரனுக்குத்தான் கட்டியழலாம். உப்பிடியே கிலோ பத்து ரூபாவுக்கு எடுக்கிறேன்" எனத் தவிச்ச முயல் அடித்தார் தரகர். நாக்கு வழித்த இந்த கதையில் நாடி விழுந்தவராக கிண்டிக் கழுவியதற்கும் காணாத காசை வாங்கியவர் உரப்பையை சுருட்டிக் கொள்கிறார்.

இவர்கள் இருவரும் இனி இப்போதைக்கு இந்தச் சந்தைப் பக்கமே கால் வைக்க மாட்டார்கள். குடாநாட்டுச் சந்தைகளில் இவர்கள் போன்று இன்னும் எத்தனையோ பேர்கள் வயிற்றெரிச்சலுடன்தான். "கண்டியான் மரக்கறிகள்" என முன்னர் அழைக்கப்பட்ட இவைகளை எங்கள் தோட்டங்களில் காணாத காலம் ஒன்றிருந்தது. எம்மவரின் ஆர்வமும் அக்கறையும் முயற்சியும் இங்குள்ள தோட்டங்களில் இவை விளைவதுடன் தரத்திலும் குறைவில்லை. இருப்பினும் உள்ளூர் உற்பத்திகளை ஓரம் கட்டும் செயற்பாடுகளுக்குக் காரணம் தம்புள்ள மரக்கறிகளின் மிதமான தொடர் வருகை தானோ என்ற எண்ணம் வலுப்படுகிறது.

தமது பிரதேசத்தின் சந்தை ஒன்றில் இடைத் தரகர் நடைமுறை நிறுத்தப்பட்டுள்ளதாக பிரதேச சபை ஒன்று அறிவித்துள்ளது. இதனை முன்மாதிரியாகக் கொண்டு இங்குள்ள ஏனைய உள்ளூராட்சி நிறுவனங்களும் தமது ஆளுகைக்கு உட்பட்ட சந்தைகளில் உற்பத்தியாளர் நலன் பேணும் நடவடிக்கைகளுக்குத் துணிய வேண்டும். தமிழகத்தில் "உழவர் சந்தைகள்" சிறப்பாகச் செயற்படுகின்றனவாம். மாகாண சபையின் அனுசரணையுடன் இவற்றை இங்கும் வாய்ப்புப் பார்க்கலாமே.

# பௌதிக வளத்தில் தன்னிறைவுக்கு அதிபர்களின் அர்ப்பணிப்பே காரணம்

தென்மராட்சி, ஜன.6

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை அதிபர்களின் அர்ப்பணிப்பான சேவையினால் கடந்த 10 வருடங்களிலும் ஒவ்வொரு பாடசாலையும் பௌதிக வளத்தில் தன்னிறைவு கொண்டுள்ளமை பாராட்டத்தக்கது.

கடந்த 2000 ஆம் ஆண்டு ஏற்பட்ட போர்ச் சூழலின் அழிவடைந்த பாடசாலைகளின் பௌதிக வளங்களை 2002 ஆம் ஆண்டு தொடக்கம் பணியை அதிபர்கள் மேற்கொண்டதால் அனைத்துப் பாடசாலைகளும் என்றுமில்லாத அளவுக்குப் பௌதிக வளத்தில் தன்னிறைவு கண்டு வருகிறது.

இவ்வாறு தென்மராட்சி பாடசாலைகளின் அதிபர்கள் சங்கத்தினால் நடத்தப்பட்ட பணி நயப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவித்தார்.

அதிபர்கள் பாடசாலை சமூகத்துடனும், பழைய மாணவர் சங்கத்திடமும் நல்லுறவு பேண வேண்டும். அத்துடன் பாடசாலைகளின் பௌதிக வள அபிவிருத்தியுடன் மாணவர் கல்வி நிலையிலும் அக்கறை செலுத்த வேண்டும்.

நாட்டில் சிறந்த சமூகத்தை உருவாக்க பாடசாலைகளில் அதிபர்கள் தமது சிறப்பான பங்களிப்பை மேற்கொள்ள வேண்டும். சாதனையாளர்களாக மாணவர்களை மாற்றுங்கள். அதனை வழி நடத்திய அதிபர்களை பாடசாலைச் சமூகம் எளிதில் மறக்க மாட்டாது.

அதிபர்கள் சங்கமானது அதிபர்களின் வாண்மை விருத்திக்குப் புறம்பாக பிரதேசத்தில் மேலும் பல அதிபர்களை உருவாக்கக் கூடிய வழிகாட்டல் செயலமர்வுகளை நடத்துவதுடன் அவர்கள் இலங்கை வங்கி, நிர்வாக சேவை பரீட்சைக்குத் தோற்றவும் முன் வர வேண்டும்.

தென்மராட்சி மாணவர்களை சாதனையாளர்களாக மாற்றக் கூடிய பலம் மிக்க சக்தியுள்ள சங்கமாக நிமிர்ந்து சேவைகளை ஆற்ற வேண்டும் -என்றார். (ந-9)

## வீதிப் புனரமைப்பால் மகிழ்ச்சி

நெடுங்கேணி பிரதேச சபைக்குட்பட்ட நயினாமடு - சின்னடம்பன் வீதியின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டமை தொடர்பாக பொது மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். சுமார் ஐந்து கிலோ மீற்றர் நீளமான இந்த வீதியின் வேலைகளை ஆரம்பிக்கும் பொருட்டு அதற்கான மூலப் பொருள்கள் வீதியோரத்தில் பறிக்கப்பட்ட போதிலும் புனரமைப்பு வேலைகளில் இழுபறி நிலை காணப்பட்டது. இதனால் பத்திரிகை வாயிலாக இந்த வீதிக்கான புனரமைப்பு வேலைகளை ஆரம்பிக்குமாறும், தாம் எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-22)

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
A/L 2014
மீட்டல் வினா விடை வகுப்புக்கள்
பொருளியல் : S. வரதராஜன்
பிரிவு I புதன் 3.30 - 5.30
பிரிவு II வியாழன் 3.45 - 5.45
பிரிவு III சனி 3.00 - 5.00
★ Girl's Batch Boy's Batch என வகுப்புக்கள் நடை பெறுகின்றன.
★ A/L Day Class திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி காலை 9.00–10.30 நடைபெறுகின்றது.
★ மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும். (சி/10958) (7.6.3)

கார் வாடகைக்கு
மாதாந்த நளாந்த அடிப்படையில் கார் வாடகைக்குண்டு. (42059) (4.6.3)
தொடர்பு:077 583 4770

வாகனம் தேவை
அலுமினிய Full bodyயுடன் இரண்டு பக்க கதவுகளைக் கொண்டதுமான Budy ரக வாகனம் குறைந்தது ஒரு வருடத்துக்கு தேவைப்படுகின்றது.
தொடர்பு:075 041 4544 (42068) (4.6.3)

கடை வாடகைக்கு
யாழ். பல்கலைக்கழகத்திற்கு அருகில் சேர் பொன். இராமநாதன் வீதியில் 35 அடி நீளமும் 12 அடி அகலமும் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய 228/3 இலக்க கடை வாடகைக்குண்டு.
(41981)(7.6.3) தொ.பே: 077 783 3807

பாராட்டி வாழ்த்துகின்றோம்
திருமதி நேசராணி தனபாலசிங்கம்
எமது பாடசாலையில் 22 ஆண்டுகளாக உயிரியல்விஞ்ஞான ஆசிரியராகவும் பகுதித் தலைவராகவும் சிறப்புறச் சேவையாற்றி 02.01.2014 தொடக்கம் வலிகாம வலயத்தில், விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகராகப் பதவியுயர்வு பெற்றுச் செல்வதையிட்டுப் பாராட்டி வாழ்த்துகின்றோம்
ஆசிரியர் கழகம்
யா/விக்ரோறியாக் கல்லூரி.



மணல் விற்பனைக்கு
கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்த மணல் விற்பனைக்கு உண்டு.
$4\frac{1}{2}$ ரக்ரர் 19,000/=
தொடர்பு: கண்ணா - 077 759 0792
(41849) (7.6.3)

இதோ!
சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!
தீராத இருமல்,சளி,இளைப்பு மற்றும் நுரையீரல்,சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்
சித்தாரா அதிமதுரம் ஆடாதோடை இருமல் பாணி
யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும்,கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No.:-6382) AR/PR/No.228
யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2567
(குறிப்பு: சந்திரர் சந்திக்கு அண்மையில்) (சி/13577)(7.6.3)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை O/L எழுதியோர்,பல்கலை புகுமுக மாணவர்கள், இளைஞர்,யுவதிகள், தொழில்புரிவோர் இணைய முடியும்.
"எமது 3 மாத பயிற்சி நிறைவில் எவராவது சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்"
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 11.01.2014 சனிக்கிழமை
1. காலை 8.00 - 10.00
2. காலை 10.00 - 12.00
3. காலை 11.30 - 01.00
4. மாலை இடமில்லை
ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்கள் கூட இப் பயிற்சிநெறியில் இணைந்து தமிழ்போல சரளமாக ஆங்கிலத்திலும் பேச முடியும்.
குறிப்பு : இட நெருக்கடியை தவிர்க்க முன்பதிவு செய்தல் மிக அவசியமாகும்
SAAMSON LANGUAGE SCHOOL
179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 621 4567

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு


கலர் மீன்கள், மீன்தொட்டிகள், அவற்றுக்கான அழகுப் பொருள்கள், கருவிகள், கூடுகள் மற்றும் சந்தனமரக் கன்று 300/= முள்ளில்லாத தேசிக்கன்று 300/= முள்ளில்லாத ரோஜாக்கன்று மற்றும் பல இன பூங்கன்றுகள் அனைத்தும் விற்பனைக்குண்டு.

யாழ் அக்கூரியம், தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111

# புழுக்களுடன் சொக்லேட் பவுடரும் காலாவதியான பேரீச்சம் பழமும் மீட்பு

## கொழும்பு மாநகர சபை அதிகாரிகள் அதிரடி



கொழும்பு.ஜன.6

காலாவதியாகிய நிலையில் புழுக்களுடன் கூடிய சொக்லேட் பவுடர் மற்றும் பேரீச்சம் பழங்களை கொழும்பு மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு அதிகாரிகள் கடந்த திங்கட்கிழமை அதிரடியாக தேடுதல் நடத்திக்கைப்பற்றியுள்ளனர்.

கொழும்பு ரொஸ்மீட் பிளேஸ் மற்றும் பழைய சோனகத்தெரு போன்ற இடங்களில் மேற் கொண்ட திடீர் தேடுதல் நடவடிக்கைகளின் போதே நுகர்வுக்கு பொருத்தமில்லாத 400 கிலோகிராம் சொக்லெட் பவுடரும் 500 கிலோ கிராம் பேரீச்சம் பழங்களும் கைப்பற்றப்பட்டன என்று கொழும்பு மாநகர சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் கொழும்பு மாநகர சபையின் சுகாதாரப் பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரி கூறியதாவது:-

ரொஸ்மிட் பிளேஸிலுள்ள இந்திய நிறுவனமொன்றுக்கு சொந்தமான சொக்லெட் உணவுப் பொருள்கள் தயாரிக்கும் மற்றும் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றிலிருந்தே காலாவதியான பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த நிலையம் கொழும்பு மாநகர சபை சுகாதார அதிகாரிகளால் 'சீல்' வைக்கப்பட்டுள்ளதுடன் கடை உரிமையாளருக்கு எதிராக வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை பிரபல இறக்கு மதியாளர்கள் காலாவதியான பேரீச்சம் பழங்களை கவர்ச்சிகரமாகப் பொதி செய்து சில்லறைக் கடைகளுக்கு விநியோகிக்கத்தயாரான நிலையிலேயே அவை கைப்பற்றப்பட்டன என்றார். (ஓ-10)

## கொடியேற்றம்

சித்தன்கேணி அருள்மிகு ஸ்ரீ நாக கன்னியம்பாள் ஆலயக் கொடியேற்றத் திருவிழா 07.01.2014 செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

தொடர்ந்து இடம்பெறும் திருவிழாவில் 14.01.2014 செவ்வாய்க்கிழமை தைப்பொங்கல் திருநாளும் நண்பகல் 12.00 மணியளவில் தீ மிதிப்பு வைபவமும் இடம் பெறவுள்ளது.

அன்றைய தினம் தீர்த்தம், கொடியிறக்கம் இடம்பெற்று திருவிழா நிறைவுறவுள்ளது.

மெய்யடியார்கள் அனைவரும் அம்பாளைத் தரிசித்து அம்பாளின் அனுக்கிரகங்களைப் பெற்றுய்யுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல் :

இந்திரன் ஐயா — ஆலய சித்த ஞானகுரு மற்றும் ஆலயத்தொண்டர்கள்

## தேவை

கோண்டாவிலில் புதிதாக அமைய வுள்ள வியாபார ஸ்தானபனத்துக்கு அனுபவம் உள்ள Pharmacist உடன் தேவை.

தொடர்பு:- 077 0637328

## சிக்கியுள்ள இலங்கையர்களை அழைத்துவர நடவடிக்கை

கொழும்பு.ஜன.6

தென் சூடானில் மோதல்கள் இடம்பெறும் நிலையில் அங்குள்ள இலங்கையர்களை மீள நாட்டிற்கு அழைத்துவரத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

அந்த நாட்டில் மோதல்களில் சிக்கியுள்ள 12 இலங்கையர்கள் நாட்டுக்கு மீள அழைத்து வரப்படவுள்ளதாக பணியகத்தின் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொது முகாமையாளருமான மங்கல ரந்தெனிய தெரிவித்தார்.

இந்த இலங்கையர்கள் நாடு திரும்புவதற்காக, அவர்களுக்குரிய விமானச் சீட்டுக்களை அனுப்பி வைத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (எ)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி ரேவதி இராசையா



வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், தற்போது கனடாவில் வசித்து வந்தவருமான திருமதி ரேவதி இராசையா (31.12.2013) அன்று இறைபதம் அடைந்த செய்தி அறிந்து நாம் ஆழ்ந்த துயரத்தில் மூழ்கியுள்ளோம்.

அன்னார் பிறந்த மண்மீது கொண்ட அதீத பற்றுக் காரணமாக தனது குல தெய்வமாகத் திகழும் சிற்பனை முருகன் ஆலயத்தின் தீர்த்தக்கேணி திருப்பணி வேலைகளை மன நிறைவுடன் ஆரம்பித்து அப்பணி பூர்த்தியடையும் வேளையில் முருகன் திருப்பாதங்களை அடைந்துவிட்டார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருடன் நாமும் துயரில் பங்கு கொள்வதோடு அவர்களுக்கு எமது இரங்கலையும் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய சிற்பனை முருகனை வேண்டி நிற்கின்றோம்.

சிற்பனை வேலணை. — சிற்பனை முருகன் ஆலய பரிபாலனசபை

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை திருச்செல்வம்

(Engineer)

(Golden star -Paris முன்னாள் உரிமையாளர், Kings Secretary -Singapore முன்னாள் உரிமையாளர்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், பண்ணாகம், பரிஸ் (பிரான்ஸ் ), சிங்கப்பூர் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை திருச்செல்வம் கடந்த (02.01.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்புமகனும் அயிலை வல்லியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான இந்திரராஜா (மலேசியா), நடராசா (மலேயன் பென் சனியர், பண்ணாகம்), சிவராமலிங்கம் (மலேசியா) திருமூர்த்தி (சிங்கப்பூர்) மற்றும் மனோன் மணி (கனடா), பூமாதேவி (சிங்கப்பூர்), ருக்குமணி (லண்டன்), தங்கமலர் (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.01.2014) செவ்வாய்க்கிழமை சிங்கப்பூரில் நடை பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

பெறாமகள்மார் (021 3210524)

உமாவசந்தன் (டென்மார்க்)

வளர்மதி ராஜகோபால் (டென்மார்க்),

பிரேமாநடராஜா (ஆசிரியை பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி)

தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.

## மரண அறிவித்தல்

### திருமதி நகுலாம்பிகை ஸ்ரீவரதராசா



அராலி தெற்கைப்பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நகுலாம்பிகை ஸ்ரீவரதராசா - நேற்று முன்தினம் (04.01.2014) சனிக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் திரு. திருமதி இரத்தினம் - நாகேஸ்வரி தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான கனகராசா - பாக்கியம் தம்பதியரின் பாசமிகு மருமகளும் ஸ்ரீவரதராஜா வின் (ஜேர்மனி), பிரிய பத்தினியும் ஜெய்சாந், லோகிசாந், கபிலாஷ் ஆகி யோரின் பாசமிகுதாயும் நவசுதன் (அவுஸ்தி ரேலியா), வனிதாம்பிகை (பிரான்ஸ்), ஜெகதாம்பிகை (பிரான்ஸ்), வாலாம்பிகை (I.T Park யாழ்ப்பாணம்), தனகாம்பிகை (லண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் நாகராணி, ஆனந்தராணி, மகேந்திரராஜா, நாகேந்திரராஜா, செந்தில்ராஜா, மதிபாலராஜா, கௌசல்யா, லோகநாதன், சிவனேசன், தர்மசங்கரன், ஸ்ரீஸ் கந்தராசா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

அராலி தெற்கு, வட்டுக்கோட்டை

## மரண அறிவித்தல்

### திருமதி பத்மாவதி சதாசிவம்



ஆலடி ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி சதாசிவம் நேற்று முன்தினம் (04.01.2014) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி - மகேஸ்வரி தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், செல்லையா சதா சிவத்தின் அன்புமனைவியும் சதீஸ்வரன் (MLT வவுனியா), பிரதீஸ்வரன், குகதீஸ்வரன், நிசாந்தீஸ்வரன், அமிர்தாலினி (கனடா) ஆகியோரின் அன்புத்தாயும் உதயானந் (கனடா), வாசுகி, கீர்த்திகா ஆகியோரின் அன்புமாமியும் மிதுன மான்சிகா, திவானு குபேரன், நிருஷா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக ஆனைக் கோட்டை கரையாம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குளப்பிட்டி வீதி, ஆலடி, ஆனைக்கோட்டை.

077 2328912, 0777 894229

42079.14.17

தகவல்: செ. சதாசிவம் (கணவர்)

## வெளிநாடுகளிற்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

வடமாகாணத்தின் பொதிகள் சேவை துறையின் முன்னோடிகள்

தைப்பொங்கலை முன்னிட்டு அதி விஷேட கட்டணக் குறைப்பு


- இலட்சக்கணக்கான வாடிக்கையாளர்களைக் கொண்டு
- ஆகாய, கடல் மார்க்கமாக அனைத்துப்பொருட்களையும்
- அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன்
- வெளிநாடுகளிற்கான பொதிகள் சேவையை வழங்கிக்கொண்டிருக்கும் முன்னணி நிறுவனம்
- 3-4 நாட்களில் உலகின் எப்பாகத்திற்கும் குறித்த முகவரியில் ஒப்படைக்கின்றோம்.

இன்று நேற்று அல்ல 15 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ் – இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச்சந்தி, யாழ்ப்பாணம். தொ.இல : 0212226113

இணை நிறுவனம் : அருள்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் – இல.10, புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.இல : 0212223536

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*வடமராட்சி கடற்பகுதி நேற்று கடும் கொந்தளிப்பாகக் காணப்பட்டது. இதனால் கரையோரப் பகுதி மக்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குப் பாதுகாப்பாகச் சென்றனர்.*

# நிறைவேற்று ஜனாதிபதி முறைமை தேவையற்றது

இந்த நாட்டின் அரசியல் முறையில் உள்ள நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நாம் ஒழிக்க வேண்டும் என்று கோட்டை பிரதம தேரர் கலாநிதி மாதுலுவே சோபித தேரர் தெரிவித்தார். இந்த நாட்டிற்கு சுதந்திரம் பெற்றுத் தந்த தலைவர்களுள் ஒரு சிரேஷ்ட தலைவர் ரீ.பி. ஜாயா. அவர் போன்ற தலைவர் எவரும் இந்த நாட்டில் இன்னும் எந்த சமூகத்திலும் உருவாகவில்லை.

அதற்காக முஸ்லிம்களாகிய நீங்களும் அணிதிரளவேண்டும். இந்த நாட்டில் உள்ள சுயாதீன தேர்தல், பொலிஸ், நீதி, கல்வி மற்றும் நிர்வாக முறைமைகளை மாற்றியமைப்பதற்கு முன்வாருங்கள்.

கலாநிதி ரீ.பி ஜாயாவின் 124 வது வருட நினைவுச் சொற்பொழிவு நேற்றுமுன்தினம் கொழும்பு முஸ்லிம் பெண்கள் கல்வி வட்ட நிலையத்தில் நடைபெற்றது.

இவ் வைபவத்தில் பிரதம பேச்சாளராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே மாதுலுவே தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித் ததாவது:-

நெல்சன் மண்டேலா போன்றோர் தென்னாபிரிக்காவில் சகல சமூகங்களும் சமமாக வாழ்வதற்காக ஏற்படுத்திக் கொடுத்த அரசியல் முறைமை போன்று இலங்கையிலும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

ரீ.பி. ஜாயா பௌத்த பாடசாலையான ஆனந்தக் கல்லூரி ஆசிரியராக சேவையாற்றும்போது அப் பாடசாலை நிர்வாகம் பிலிப் குணவர்த்தனவை அகற்ற முற்பட்டபோது தன்னையும் சேர்த்து விலக்குமாறு ஜாயா கேட்டுக்கொண்டார்.

அதற்காக பிலிப்குணவர்தனாவை அப்பாடசாலையில் இருந்து அகற்றாமல் அவரோடு சேர்ந்து சேவையாற்றிப்பாடுபட்டவர். அவர் போன்ற தலைவர்கள் தற்காலத்தில் எமது நாட்டில் இல்லை.

இந்த நாட்டில் உள்ள பொலிஸைக் கூட நாம் நம்பமுடியவில்லை. அவர்களே போதைப் பொருள் விற்பவர்களாக மாறியுள்ளனர். இந்த நாட்டில் உள்ள இலஞ்ச ஆணைக் குழுத் தலைவரையே கைது செய்ய வேண்டிய நிலை உருவாகியுள்ளது - என்றார். (எ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இலங்கை

றெல்லாம் மேடைக்கு மேடை கூக்குரல் எழுப்புவதில் பயனில்லை. ஏனென்றால் இது ஒரே தேசமாக இருக்கும் அதே நேரத்தில், வெவ்வெறு பின்புலங்களைக் கொண்ட மக்கள் இங்கு வாழ்ந்து வருகின்றார்கள் என்பதை நாங்கள் மனதில் கொள்ள வேண்டும். ஒரே நாட்டில் வாழ்வதால் நாங்கள் ஒரே மக்களாகிவிட முடியாது. நாம் யாவரும் ஒரு நாட்டு மக்களே என்று பெரு வாரியான பெரும்பான்மை யின மக்கள் கூறும்போது " இது சிங்கள பௌத்த நாடு. எல்லோரும் சிங்கள பௌத்த பெரும்பான்மையினரின் கட்டுப்பாட்டின் கீழடங்கிய இந்த நாட்டின் குடிமக்களே " என்ற அடிப்படை எண்ணத்தில்தான் தமது கருத்தை வெளியிடுகின்றார்கள். இது தவறு என்று அவர்கள் எண்ணுவதில்லை.

அத்துடன் நாம் எமது குழந்தைகளுக்கும் தவறான சரித்திரக் கருத்துக்களைக் கொடுத்து வருகின்றோம் என்பதையும் நாம் சிந்திப்பதில்லை. இன்று சரித்திரம் மாற்றியமைக்கப்பட்டு புதிய ஆனால் தவறான சிந்தனைகள் அரசியல் காரணங்களுக்காகப் பரப்பப்பட்டு வருகின்றன.

இந்தத் தருணத்தில் சரித்திர பாடம் நடத்துவது எனது எண்ணமில்லை. ஆனால் தகுதியுடைய சர்வதேச சரித்திர வல்லுநர்கள் சேர்ந்து இலங்கையின் ஆரம்பகாலம் முதலான சரித்திரத்தை ஆங்கிலேயரிடமிருந்து இலங்கைக்கு சுதந்திரம் கிடைக்கும் வரையிலான காலம் வரையில் மீண்டும் எழுதி வைப்பது நாட்டுக்கும் அதன் மக்களுக்கும் நன்மை பயக்கும். உண்மையை நாங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய பக்குவம் எமக்கு பிறக்க வேண்டும்.

அண்மையில் சார்மினி சேரசிங்க என்ற சிங்கள பெண் ஊடகவியலாளர் ஒரு கட்டுரை எழுதியிருந்தார் மகாவம்சம் - புத்தரை இழிவுபடுத்துகிறது (Mahavamsa - An Insult to the Buddha) என்பது அதன் தலையங்கம். உண்மைகளை வெளிக் கொண்டு வரும் சிறந்த கட்டுரை அது.

இந்தத் தருணத்தில் ஒரேயொரு கருத்தை மட்டும் இலங்கைத் தமிழ் மக்கள் சார்பில் கூறி வைக்கின்றேன். 1919 ஆம் ஆண்டில் அப்போதைய இலங்கையின் மக்கள் தலைவர்களான ஈ.ஏ.சமரவிக்கிரமவும், சேர் ஜேம்ஸ் பீரிஸும், சேர் .பொன்னம்பலம் அருணாச்சலத்திற்கு அனுப்பி வைத்த கடிதத்தில் ஒரு கூற்றை உள்ளடக்கி இருந்தார்கள்.

இலங்கைத் தீவின் மற்றைய சிறுபான்மையினர் போலல்லாது தமிழர்கள் சிங்கள மக்கள் போல் நாட்டின் பெரும்பான்மை இனத்தவர்களே. ஆகவே அவர்களைச் சிறுபான்மையினராக கருதவோ, சிறுபான்மையினருக்குரிய சலுகைகளை அவர்களுக்கு வழங்கவோ தேவையில்லை" என்றார்கள். அதாவது தமிழ் மக்கள் இந்த நாட்டின் சிறுபான்மையினர் எனக் கருதப்படாமல் காலாதிகாலமாக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் பெரும்பான்மையினராக வாழ்ந்து வந்திருந்தார்கள் என்ற உண்மையை அவர்கள் நூறு வருடங்களுக்கு முன்னரே கூறியிருந்தார்கள். இப்பொழுது வடக்கில் வளரும் ஒவ்வொரு அரசமரத்தையும் சங்கமித்தை அல்லது மகிந்தன் கால அரசமரமென்றும் இராவணன் சிங்கள இனத்தவர் என்றும் புதிய சரித்திரம் வகுக்கப்பட்டு வருகிறது. சிங்கள மொழி நடைமுறைக்கு வந்ததே கிறிஸ்துவிற்குப் பின்னர் தான். இராவணன் சரித்திர காலத்திற்கு முன்னர் வாழ்ந்தவர். அப்படியிருந்தும் இப்படிக் கூறி வருகின்றார்கள்.

உண்மைக்குப் புறம்பான இந்தப் புதிய சரித்திரம் சிறுவர் சிறுமியர் மத்தியில் விதைக்கப்பட்டால் இனக் கிளர்ச்சிகளுக்கே அது வித்திடும். அதனால் தான் சர்வதேச சரித்திர வல்லுநர்கள் சேர்ந்து இலங்கையின் ஆரம்பகாலம் தொடக்கம் 1948 ஆம் ஆண்டு வரையிலான சரித்திரத்தைப் பக்கச் சார்பின்றி எழுதவேண்டும் என்று குறிப்பிட்டேன். உண்மைக்குப் புறம்பான சரித்திரக் குறிப்புக்கள் குழந்தைகளைப் பாதித்து விடுவன என்பதற்காகவே இதைக் கூறிவைக்கின்றேன் - என்றார். (உ-4)

### அமெரிக்க

றங்கள் தொடர்பிலான முக்கிய ஆவணங்களை இலங்கை வரும் போர்க்குற்ற விவகாரங்களுக்கான அமெரிக்காவின் விசேட தூதுவர் ஸ்ரீபன் ஜே. ராப்பிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேரில் கையளிக்கத் தீர்மானித்துள்ளது என்று அறியமுடிகின்றது.

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் முதல் தடவையாக இலங்கை வந்த ஸ்ரீபன் ஜே.ராப்பை கொழும்பில் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வன்னியில் இறுதிக்கட்ட போரின் போது இடம்பெற்ற போர்க்குற்றம் தொடர்பான விடயங்களை அவரின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசும் அதன் படைகளும் சர்வதேச விதிமுறைகளை மீறிப் போர்க்குற்றங்களில் ஈடுபட்டுள்ளன என்றும், அரசபடைகளினால்தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட போர்க்குற் றங்கள் வார்த்தைகளில் சொல்ல முடி யாதவாறு கொடூரமானவை என்றும் இந்தியா உட்பட பல சர்வதேச நாடுகள் பகிரங்கமாகக் கூறியுள்ளன.

அத்துடன், வன்னியில் இறுதிக் கட்டப்போரில் தமிழினப் படுகொலையை இலங்கை அரசு அரங்கேற்றியதாக இந்திய மத்திய அமைச்சர் சிதம்பரம் அண்மையில் தெரிவித்திருந்தார். அதேவேளை, இறுதிக்கட்டப் போரில் சரணடைந்த பொதுமக்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் பலரை சித்திரவதை செய்து சுட்டுக் கொன்ற இராணுவத்தினர், பலரைக் காணாமற்போகவும் செய்துள்ளனர் என்று 'சனல் - 4' உட்பட சர்வதேச ஊடகங்கள் புகைப்படங்களையும், காணொலிகளையும் செய்திகளாக வெளியிட்டுள்ளன.

அத்துடன், இதுதொடர்பில் போரில் உயிரிழந்த, காணாமற்போன தமிழர்களின் உறவினர்கள் ஐ.நாவிடம் மகஜர்களையும் சமர்ப்பித்துள்ளனர்.

இதேவேளை, தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை வேண்டும் எனப் பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச் சியாக வலியுறுத்தி வருகின்றது.

இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேச விசாரணைப் பிரேரணையை நிறைவேற்றுமாறு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளை வலியுறுத்தி ஜெனீவாவில் இம்முறை தீவிர பரப்புரையில் ஈடுபட வும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

இந்த நிலையில், உத்தியோக பூர்வ பயணம் மேற்கொண்டு இன்று இலங்கை வரும் சர்வதேச போர்க்குற்ற விவகாரங்களைக் கையாளும் அமெரிக்காவின் விசேட தூதுவர் ஸ்ரீபன் ஜே. ராப்பை நாளை கொழும்பில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அரச படைகளினால் தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பிலான முக்கிய ஆவணங்களையும் அவரிடம் நேரடியாகச் சமர்ப்பிக்கவும் தீர்மானித்துள்ளது என அறியமுடிகின்றது.

இதேவேளை, இரண்டாவது தடவையாக இலங்கை வரும் ஸ்ரீபன் ஜே.ராப், நல்லிணக்க ஆணைக்குழுவில் போர்க் குற்றங்கள் தொடர்பில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகள் மற்றும் ஐ.நாவில் இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேச நாடுகளின் ஆதரவுடன் அமெரிக்கா நிறைவேற்றியுள்ள இரண்டு தீர்மானங்கள் ஆகியவற்றை இலங்கை அரசு நிறைவேற்றியுள்ளதா என்பதை ஆராயவுள்ளதுடன், போர்க்குற்றங்களுக்குத் தண்டனை விதித்தலில் முக் கிய கவனம் செலுத்துவார் என்று தாம் எதிர்பார்க்கின்றோம் என்று கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று 'உதய'னிடம் தெரிவித்தார்.

அது மட்டுமன்றி அமெரிக்காவுக்கு கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சென்ற வேளைகளில் ஸ்ரீபன் ஜே. ராப்பை பல தடவைகள் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர் என்றும், இறுதியாக கடந்த நவம்பர் மாதம் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, தாமும் அமெரிக்காவுக்குச் சென்ற வேளை ஸ்ரீபன் உட்பட அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளைச் சந்தித்து இலங்கை நிலைமை தொடர்பில் கலந்துரையா டியதாகவும் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

ஸ்ரீபன் ஜே ராப், இலங்கைப் பய ணத்தின்போது அரச உயர் அதிகாரிகள், எதிர்க்கட்சியினர், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், நீதித் துறையினர் உள்ளிட்ட பலரையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

அவர், இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று நிலைமைகளை நேரடியாக ஆராய்வார் என்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-சி)

### இன்று

மழை பெய்வதற்கான சாத்தியங்கள் இருக்கின்றன. கடல் கொந்தளிப்பு அபாயமாக இருப்பதோடு கடல் அலை 3 மீற்றர் உயரத்துக்கு எழலாம் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. நேற்றுக் காலை 8.30 மணியிலிருந்து இரவு 8.30 மணி வரை யாழ். திருநெல்வேலிப் பகுதியில் 11.6 மில்லி மீற்றர் மழை பதிவாகியுள்ளது. இதே வேளை, நேற்றுமுன்தினம் காலை 8.30 மணியிலிருந்து இரவு 8.30 மணி வரையான நேரத்தில் 3.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகி உள்ளது - என்றார். (ஐ-4)

### மேல், தென்

நடத்துவதற்கு முறைமையொன்று இருக்கின்றது. மாகாணசபைகள் கலைக்கப்பட்ட பின்னர் ஏழு நாட்களுக்குள் வேட்புமனு கோரவேண்டும். அதன் பின்னர் பரப்புரைக்கு கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். அத்துடன், சனிக்கிழமையொன்றில்தான் தேர்தல் நடைபெறும். இவற்றை வைத்துப் பார்க்கையில் தேர்தல் 29 இல் நடைபெறும் என்பதுதான் எனது உறுதியான கணிப்பீடாக இருக்கின்றது" என்று அவர் பதிலளித்தார். (ஐ-சி)

### கடல்கொந்தளிப்பு

தேவையான நடவடிக்கைகளுக்கு இடர் முகாமைத்துவப் பிரிவு தயார்ப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரையோரப் பகுதியில் நேற்று மாலை 6 மணிக்குப் பின்னர் கடற்கரையிலிருந்து 200 மீற்றர் தொலைவில் மக்களைப் பாதுகாப்பாக இருக்குமாறு மக்களுக்கு மீண்டும் அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கரையோரப் பகுதிகளில் மக்களைப் பாதுகாப்பாக இருக்கும்படியும் கடற்கரையிலிருந்து 100 மீற்றருக்கு அப்பால் விலகியிருக்குமாறும் பொலிஸார் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தனர்.

சீரற்ற காலநிலையைக் கருத்தில் கொண்டு மீனவர்கள் கடலுக்குச் செல்லவேண்டாம் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளனர். (ஐ-4-173-8-9-36-51-55-86-426)

### ஜெனிவா

வருகை எவ்வாறு அமையப் போகிறது என வினவிய போதே குணதாஸ அமரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

"அமெரிக்காவின் விசேட பிரதிநிதி நாளை (இன்று) இலங்கைக்கு வரவுள்ளமை அனைவரும் அறிந்த ஒன்றே. இவர் வருகை தந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளார் எனவும் தெரிய வருகிறது. இந்தச் சந்திப்பின் மூலம் அடுத் மார்ச் மாதம் ஜெனிவாவில் இலங்கை அரசுக்கு எதிரான அழுத்தங்கள் மேலும் வலுவடையும் என்றே எதிர் பார்க்கப்படுகிறது. இதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் இந்த அரசுமே முழுக் காரணமாகும். இவர்கள்தான் நிச்சயம் இதற்குப் பதில் கூற கடமைப்பட்டுள்ளார்கள்.

2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. ஆனால், இன்றுவரைக்கும் மக்களுக்குத் தேவையான எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இந்த அரசால் செய்து கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. துன்பத்தில் வாழும் மக்கள் மேலும் துன்பத்தை மாத்திரமே அனுபவித்து வரும் இந்நிலையில் அதிவேக பாதைகள், அதிசொகுசு கார்கள் என்பவற்றை அரசு இறக்குமதி செய்து இன்னுமின்னும் மக்களை நிம்மதியில்லாது செய்கிறது. இதையா மக்கள் கேட்டார்கள்? முதலில் அவர்களுக்குத் தேவையான வற்றை செய்து கொடுக்க வேண் டும். பிறகுதான் அபிவிருத்திகளைப் பற்றி சந்திக்கவேண்டும்.

ஆனால், அரசு தேவையில்லாத வற்றை முதலில் செய்து விட்டது. இதனால், தற்போது சர்வதேச அழுத்தங்களுக்கும் முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. இலங்கைக்கு எதிராக நிச்சயம் ஜெனிவாவில் அழுத்தங்கள் குவியும். இதைச் சாமாளிக்க ஜனா திபதி இப்போதே ஆயத்தமாகி விட வேண் டும்" என்றார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை லீக் போட்டி காலிறுதி ஆட்டங்கள் தயார்

மாங்குளம், ஜன.6

நெல்லியடி செலான் வங்கியினால் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் 30 கழகங்களுக்கிடையே நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி ஆட்டங்கள் நேற்றுமுன்தினம் டயமன்ஸ் மைதானத்திலும், பொம்மேர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்திலும் நடைபெற்றன.

'ஏ' பிரிவில் டயமன்ஸ், சென் சேவியர், வல்வை விளையாட்டுக் கழகம், நவஜீவன்ஸ் அணிகளும், 'பி' பிரிவில் யங்கம்பன்ஸ், விண்மீன், கலைமதி, கொலின்ஸ் போன்ற அணிகளும் காலிறுதியாட்டத்துக்கு தெரிவாகியுள்ளன.



முதல் சுற்றில் டயமன்ஸ் அணிக்கும் கலட்டி விளையாட்டுக் கழகத்துக்கும் நடைபெற்ற ஆட்டத்தில் 5:1 என்ற கோல் கணக்கில் டயமன்ஸ் அணியும், பூமகள் அணிக்கும், உதயதாரகை அணிக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் பூமகள் அணி 2:1 என்ற கோல் கணக்கிலும், அல்வாய் நண்பர்கள் அணிக்கும் சென். சேவியர் அணிக்கும் நடைபெற்ற போட்டியில் சென் சேவியர் அணி3:2 என்ற கோல் கணக்கிலும், மனோகரா அணிக்கும், உடுப்பிட்டி இளைஞர் அணிக்கு மான போட்டியில் மனோகரா அணி வருகை தராமையால் உடுப்பிட்டி இளைஞர் அணியும், கருணாகரன் அணிக்கும் வல்வை அணிக்குமான ஆட்டத்தில் வல்வை அணி 3:1 என்ற கோல் கணக்கிலும் சென் அன்ரனிஸ் அணிக்கும் நவசக்திக்குமான ஆட்டத்தில் நவசக்தி அணி 1:0 என்ற கோல் கணக்கிலும் பொலிகை பாரதி அணிக்கும் நவஜீவன்ஸ் அணிக்குமான ஆட்டத்தில் நவஜீவன்ஸ் அணி 4:1 என்ற கோல் கணக்கிலும் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தெரிவாகின.

'பி' பிரிவில் பொம்மேர்ஸ் அணிக்கும் நெடியகாடு இளைஞர் அணிக்குமான ஆட்டத்தில் பொம்மேர்ஸ் அணி 6:1 என்ற கோல் கணக்கிலும் பருத்தித்துறை ஐக்கிய அணிக் கும், யங்கம்பன்ஸ் அணிக்குமான போட்டியில் பருத்தித்துறை ஐக்கிய அணி வருகை தராததால் யங்கம்பன்ஸ் அணியும், சென். பீற்றர்ஸ் அணிக்கும் றேஞ்சஸ் அணிக்குமான ஆட்டத்தில் சென். பீற்றர்ஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கிலும், நக்கீரன் அணிக்கும் விண் மீன் அணிக்குமான ஆட்டத்தில் தண்டனை உதை மூலம் விண்மீன் அணியும், கலை மதி அணிக்கும், சுடரொளி அணிக்குமான ஆட்டத்தில் சுடெராளி அணி வருகை தராததால் கலைமதி அணியும் இமையாணன் மத்தி அணிக்கும், அல்வாய் பாரதி அணிக்குமான ஆட்டத்தில் பாரதி அணி 3:1 என்ற கோல் கணக் கிலும் இமையாணன் இளைஞர் அணிக்கும், கரவை சுடர் அணிக்குமான ஆட்டத்தில் இமையாணன் இளைஞர் அணி வருகை தராததால் கரவை சுடர் அணியும் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தெரிவாகியது.

இரண்டாம் சுற்றில் டயமன்ஸ் அணியும், திக்கம் இளைஞர் அணிக்குமான ஆட்டத்தில் டயமன்ஸ் அணி 4:0 என்ற கோல் கணக்கிலும், பூமகள் அணிக்கும் சென். சேவியர் அணிக்குமான ஆட்டத்தில் சென். சேவியர் அணி 3:1 என்ற கோல் கணக்கிலும், வல்வை அணிக்கும் உடுப்பிட்டி இளைஞர் அணிக்குமான போட்டியில் சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வல்வை அணியும், சென். அன்ரனிஸ் அணிக்கும், நவஜீவன்ஸ் அணிக்குமான ஆட்டத்தில் நவஜீவன்ஸ் அணி 3:0 என்ற கோல் கணக்கிலும் பொம்மேர்ஸ் அணிக்கும் யங்கம்பன்ஸ் அணிக்குமான ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் அணி 4:2 என்ற கோல் கணக்கிலும், சென். பீற்றர்ஸ் அணிக்கும் விண்மீன் அணிக்குமான ஆட்டத்தில் விண்மீன் அணி 7:2 என்ற கோல் கணக்கிலும் கலைமதி அணிக்கும் பொலிகை பாரதி அணிக்குமான ஆட்டத்தில் சமநிலை தவிர்ப்பு உதை மூலம் கலைமதி அணியும் கரவை சுடர் அணிக்கும் கொலின்ஸ் அணிக்குமான ஆட்டத்தில் கொலின்ஸ் அணி 4:1 என்ற கோல்கணக்கிலும் வெற்றி பெற்று காலி றுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளன. (உ-422)

## யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக கடற்கரை கரப்பந்து

வலி.வடக்கு, ஜன.6

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டி அடுத்த வாரம் நடத்தப்படவுள்ளது.

இந்த கரப்பந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணத்தின் ஒன்பது கரபந்தாட்ட அணிகள் கலந்துகொள்ளவுள்ளன.

ஆண்களுக்காக நடத்தப்படும் இந்தப் போட்டியில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகம், ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம், உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக்கழகம், காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம், அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம், புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகம், சங்கானை ஐக்கிய விளையாட்டுக்கழகம், சிறுப்பிட்டி ஐக்கிய விளையாட்டுக்கழகம் மற்றும் எழுவைதீவு பாத்திமா விளையாட்டுக்கழகம் ஆகிய ஒன்பது அணிகள் பங்குபற்றவுள்ளன.

கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டி தற்போது வளர்ச்சி அடைந்து வரும் நிலையில் அதனை யாழ்ப்பாணத்தில் அறிமுகம் செய்யும் முகமாகவும் அபிவிருத்தி செய்யும் நோக்கிலும் இந்தப் போட்டி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-86)

## சாந்தன், யூட்கசன் கிண்ணப் போட்டி வடதாரகை வெற்றி வாகை

யாழ்ப்பாணம், ஜன.6

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக மின்னொளியில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.



கடந்த திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:

திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் அல்இக்பால் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஈகிள் விளையாட்டுக்கழக அணி மோதியது. ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இரு அணிகளும் கோல் எதனையும் போடவில்லை.

செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் வடதாரகை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கோல்டன் பிரதர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் வடதாரகை விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

## கரைச்சி உதைபந்தாட்ட லீக்கின் விலகல் முறை சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், ஜன.6

கரைச்சி உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 11 பேர் பங்குகொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் வட்டக்கச்சி இளந்தளிர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரம் வருமாறு:

இளந்தளிர் விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து உதயதாரகை விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் இளந்தளிர் விளையாட்டுக்கழக 'ஏ' அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து கிளிநொச்சி திருநகர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புதிய [illegible] விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் கிளிநொச்சி திருநகர் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக்கழக அணிக்கும் கிளிநொச்சி ஜெயந்திநகர் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் கிளிநொச்சி ஜெயந்திநகர் விளையாட்டுக்கழக அணி [illegible] என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ஐ-23)

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், ஜன.6

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

அதில் இன்று திங்கட்கிழமை இடம்பெறும் ஆட்டங்களின் விவரங்கள்:

பி.ப. 3.30 மணி - கலைவாணி விளையாட்டுக்கழக அணி எதிர் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணி.

பி.ப. 4.30 மணி - விண்மீன் விளையாட்டுக்கழக 'பி' அணி எதிர் கலைமதி விளையாட்டுக்கழக 'ஏ' அணி. (உ-23)

• • •

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றுவருகிறது.

இதில் இன்று திங்கட்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் இளம்தென்றல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சுப்பர் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

## அராலி யுத், அம்பாள் வெற்றி

யாழ்ப்பாணம், ஜன.6

அராலி மாவத்தை விளையாட்டுக்கழகம் உழவர் திருநாளை முன்னிட்டு மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அராலி மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.



கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:

முதலாவது ஆட்டத்தில் மாவத்தை யுத்விளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழக அணி மோதியது.

மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தில் அராலி மாவத்தை யுத் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் வழக்கம்பரை அம்பாள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து காரைநகர் அம்பாள் விளையாட்டுக்கழக அணி மோதியது.

மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தில் அம்பாள் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

## வலைப்பந்தாட்ட நடுவர் தேர்வு எழுத்துப் பரீட்சையில் சித்தி பெற்றோர்

வலி.வடக்கு, ஜன.6

இலங்கை வலைப்பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்ட ஏ, பி வலைப்பந்தாட்ட நடுவர்களுக்கான எழுத்துப் பரீட்சையில் வடமாகாணத்தில் சித்தியடைந்தவர்கள் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி 'ஏ' தரத்தில் தோற்றியவர்களில் அ.பவாணி, வு.மதிவதனன், இ.சசிக்குமார், ர.ஸ்ரீரமணன், ந.மதியழகன், அ.கமலக்குமரன், ப.ஜெயகரன் ஆகியோரும் 'பி' தரத்தில் தோற்றியவர்களில் து.கௌரி, ந.செந்தூரன், பொ.சகிலன், ச.சியாமா, ச.மைதிலி, கெ.செந் தில்குமரன்.எஸ்.கரன், ஜெ.சுதாகரன், ஏ.பிரபாகரன் ஆகியோரும் சித்தியடைந்து செயன்முறைப் பரீட்சைக்குத் தெரிவாகியுள்ளனர் என யாழ். மாவட்ட வலைப்பந் தாட்டச் சங்கச் செயலாளர் செல்வி சி.சுரேந்தினி தெரிவித்தார். (ஐ-86)

## நியூவொரியர்ஸ் ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன.6

சுன்னாகம் சூராவத்தை நியூவொரியர்ஸ் விளையாட்டுக் கழகம் கந்தன், நல்லதம்பி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக மின்னொளியில் நடத்தும் 5 பேர் பங்குகொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் நியூவொரியர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் வியாழக்கிழமை இடம் பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:

முதலாவது ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது. ஆட்டநேர முடிவில் இரு அணியினரும் தலா 5 கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.


இதில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செரீனாவுக்கு முதல் வெற்றி

பிரிஸ்பேன் சர்வதேச ரென்னிஸ் போட்டியில், செரீனா வில்லியம்ஸ் மீண்டும் சம்பியன் பட்டம் வென்றார்.
ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரில் சர்வதேச ரென்னிஸ் போட்டிகள் நடைபெற்றது. மகளிர் ஒற்றையர் பிரிவுக்கான இறுதிப் போட்டியில், நடப்பு சம்பியனான செரீனா வில்லியம்ஸ், 2ஆம் தரநிலை வீராங்கனையான விக்டோரியா அசரென்காவுடன் மோதினார்.
இந்தப் போட்டியில் 6-4, 7-5 என்ற கணக்கில் வெற்றி பெற்று, மீண்டும் சம்பியன் பட்டத்தைத் தக்க வைத்துக் கொண்டார்.
கடந்தாண்டில் 11 பட்டங்களை வென்ற செரீனாவுக்கு, இந்த ஆண்டின் முதல் சம்பியன் பட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (கு)



# நியூசிலாந்துக்கு மீண்டும் வெற்றி

நியூசிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும், நியூசிலாந்து அணிக்குமிடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் நான்காவது போட்டியில் நியூசிலாந்து அணி வெற்றிபெற்றுள்ளது.
நெல்சனில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.
இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 50 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 285 ஓட்டங்களைப் பெற்றது.
முதலாவது இலக்குக்காக 14.2 பந்துப் பரிமாற்றங்களில் 56 ஓட்டங்களைக் குவித்த அவ்வணி சார்பாகத் தொடர்ந்து களமிறங்கிய வீரர்களனைவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த, அவ்வணி 285 ஓட்டங்களைப் பெற்றது.
துடுப்பாட்டத்தில் நியூசிலாந்து அணி சார்பாக மார்ட்டின் கப்ரில் 119 பந்துகளில் 81 ஓட்டங்களையும், றொஸ் ரெய்லர் 44 பந்துகளில் 49 ஓட்டங்களையும், ஜெஸி றைடர் 49 பந்துகளில் 47 ஓட்டங்களையும், கேன் வில்லியம்சன் 55 பந்துகளில் 47 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக டுவைன் பிராவோ 2 இலக்குகளையும், ஜேஸன் ஹோல்டர், ரீனோ பெஸ்ற், சுனில் நரைன் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

# கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் மீண்டும் காம்பிர்

நடைபெறவுள்ள ஏழாவது ஐ.பி.எல் தொடரில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி, காம்பிர் மற்றும் சுனில் நரைன் ஆகிய இருவரையும் தக்கவைத்துக் கொள்ள முடிவு செய்துள்ளது. அந்த அணிக்கு மீண்டும் கௌதம் காம்பிர் தலைமையேற்பார் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.
முதல் மூன்று ஐ.பி.எல் தொடரில் டெல்லி அணிக்காக ஆடிய காம்பிர், நடிகர் ஷாருக்கானின் கொல்கத்தா அணியில் 2011 ஆண்டு முதல் ஆடிவருகிறார். காம்பிர் தலைமையில் தான், 2012ஆம் ஆண்டு ஐ.பி.எல் தொடரை, அந்த அணி வென்றது.
2013ஆம் வருடத் தொடர் கொல்கத்தா அணிக்கு மோசமானதாக அமைந்தா லும், காம்பிரை தக்க வைக்க அணியின் உரிமையாளர்கள் முடிவு செய்துள்ள னர். காம்பிர் இதுவரை 88 ஐ.பி.எல் போட்டிகளில் 2471 ஓட்டங்களை எடுத் துள்ளார்.
அதே போல, ஐ.பி.எல் வீரர்களுக்கு மத்தியில், இன்றளவும் சிறந்த சுழற் பந்து வீச்சாளராகவும், துடுப்பாட்ட வீரா களுக்கு சிம்மசொப்பனமாக திகழும் மேற்கிந்திய தீவுகளின் சுழற்பந்து வீச்சாளர் சுனில் நரைனும் கொல் கத்தா அணியில் மீண்டும் இடம் பெறுகிறார்.
2014ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல் அணி வீரர்களுக் கான ஏலம் பெப்ரவரி 12ஆம் திகதி நடைபெறவுள்ளது. (கு)




# ராஜஸ்தான் அணியில் வொட்சன் நீடிப்பு?



7 ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் 5 வீரர்களைத் தக்க வைத்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது.
இந்த நிலையில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி ஆஸ்திரேலிய வீரர் வொட்சன் மற்றும் உள்ளுரைச் சேர்ந்த ஸ்டுவோர்ட் பின்னி, சாம்சன் ஆகிய 3 வீரர்களை தக்க வைத்து கொள்ளலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
ஸ்டுவோர்ட் பின்னி, சாம்சன் ஆகியோர் சர்வதேசப் போட்டிகளில் ஆடியது கிடையாது. பின்னி நியூசிலாந்து தொடருக்கான அணியில் தேர்வாகி உள்ளார். இந்த இருவருக்கான சம்பளம் 12 கோடி ரூபா வரை நிர்ணயிக்கப்படும்.
கடந்தஐ.பி.எல். போட்டியில் இருவரும் சிறப்பாக விளையாடி ராஜஸ்தான் வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்தார்கள். (கு)

# உலகக் கிண்ணப் போட்டிகளை நடத்த இலங்கை விருப்பம்

ஆசிய மற்றும் 20/20 உலகக் கிண்ணப் போட்டிகளை நடத்த இலங்கை விருப்பம் தெரிவித் துள்ளது.
20/20 உலகக் கிண்ணப் போட்டிகள் வருகிற மார்ச் 16ஆம் திகதி முதல் ஏப்ரல் 6ம் திகதி வரை பங்களாதேஷில் நடக்கவுள்ளது. தற்போது பங்க ளாதேஷில் கலவரம் வெடித்துள்ளதால், உலக கிண்ணப் போட்டிகள் நடைபெறுமா என்பது சந்தேகம் தான். எனவே இப்போட்டிகளை இடமாற்ற ஐ.சி.சி முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. இந்நிலையில் போட்டிகளை நடத்த இலங்கை விருப்பம் தெரிவித்துள்ளது. இதே போன்று ஆசிய கிண்ணப் போட்டிகளையும் நடத்த விருப்பம் உள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபைச் செயலாளர் நிஷந்தா ரணதுங்க தெரிவித்துள்ளார். ஆசிய கிரிக்கெட் கவுன்சில் கூட்டத்தில் இதுபற்றி முடிவு மேற்கொள்ளப்படும் என தெரிகிறது. (கு)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் முறையாக ஆபரண மலிவு விற்பனைச் சந்தை யாழ்ப்பாணத்தில்

தங்க முலாம் பூசப்பட்ட நகைகள், கிளசிக் பேர்ள்ஸ், ரேடியம் முலாம் பூசப்பட்ட கொரியன் கல் பதித்த ஆபரணங்கள் முதலியனவற்றை கொள்வனவு செய்வதற்கு இலங்கை மகளிருக்கு ஓர் பொன்னான சந்தர்ப்பம்.

**10 இலட்சத்திற்கும் மேற்பட்ட டிசைன்களிலிருந்து தெரிவு செய்து வாங்குவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.**

## ரூபா 200/- மற்றும் ரூபாய் 400/- மட்டுமே.

## இடம்:- வீரசிங்கம் மண்டபம்
## 12, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

**5 நாள்கள் மட்டும் 06,07,08,09 மற்றும் 10ஆம் திகதி ஜனவரி 2014**

திங்கள், செவ்வாய், புதன், வியாழன் மற்றும் வெள்ளி (நேரம்–காலை 10 மணி முதல் மாலை 8 மணி வரை)

**ஒவ்வொன்றும் ரூபாய் 2000 முதல் ரூபாய் 4000 வரையான ஏற்றுமதி விலை கொண்ட ஆபரணங்கள் ரூபாய் 200 முதல் ரூபாய் 400 வரை மட்டும் விற்கப்படவுள்ளன.**

இந்த விளம்பரத்தில் அனைத்து டிசைன்களின் பெயர்களையும் குறிப்பிட முடியாமையால் சில மட்டும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- கொரியன் ஸ்டோன் ஸ்டட்ஸ் .......... Rs.200/- மட்டும்
- தங்க முலாம் பூசப்பட்ட ஆண்களுக்கான ப்ரேஸ்லட் .......... Rs.200/- மட்டும்
- அவுஸ்திரேலியன் டயமண்ட் மோதிரம் .......... Rs.200/- மட்டும்
- வெஸ்டன் ஸ்டைல் தோடு .......... Rs.200/- மட்டும்
- தங்க முலாம் பூசப்பட்ட ஆண்களுக்கான மோதிரம் .......... Rs.200/- மட்டும்
- கொரியன் ஸ்டோன் தோடு .......... Rs.200/- மட்டும்
- வெள்ளி முலாம் பூசப்பட்ட கால் கொலுசு .......... Rs.200/- மட்டும்
- ஓசன் ப்ளு டயமண்ட் மோதிரம் .......... Rs.400/- மட்டும்
- அவுஸ்திரேலியன் டயமண்ட் நெக்லஸ் செட் .......... Rs.400/- மட்டும்
- தங்க முலாம் பூசப்பட்ட வளையல் செட் .......... Rs.400/- மட்டும்
- தங்க முலாம் பூசப்பட்ட சங்கிலி .......... Rs.400/- மட்டும்
- அவுஸ்திரேலியன் டயமண்ட் சேலை பின் .......... Rs.400/- மட்டும்
- கிளசிக் பேர்ள் நெக்லஸ் செட் .......... Rs.400/- மட்டும்
- சுஹாகன் மங்கல் சூத்ரா. .......... Rs.400/- மட்டும்

**விசேட சலுகை : திருமணம் மற்றும் விசேட வைபவங்களுக்கான ஆபரணங்கள் ரூபாய் 500/– முதல் ரூபாய் 16000/– வரையான விலைகளில் விற்கப்படும்.**

| Entry Free | CONTACT : 0774032706 | Sunday Open |
|---|---|---|

*Presented by : S&G International Agencies (Pvt) Ltd* (42012)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.01.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.